# பகுதி - II & III

## 1. உறவுகளும் சார்புகளும்

### பயிற்சி 1.1

**1.** $\boldsymbol{A \times B, A \times A}$ மற்றும் $\boldsymbol{B \times A}$ ஐக் காண்க. PTA-1 2M

**(iii)** $\boldsymbol{A = \{m, n\}; B = \emptyset}$

$A \times B = \{\ \}$

$A \times A = \{m, n\} \times \{m, n\}$

$= \{(\boldsymbol{m}, \boldsymbol{m}), (\boldsymbol{m}, \boldsymbol{n}), (\boldsymbol{n}, \boldsymbol{m}), (\boldsymbol{n}, \boldsymbol{n})\}$

$B \times A = \{\ \}$

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும். 2M

1. $A \times B$, $B \times A$ மற்றும் $B \times B$ ஆகியவற்றை காண்க.
   (i) $A = \{2, -2, 3\}$ மற்றும் $B = \{1, -4\}$ (ii) $A = B = \{p, q\}$

எ.கா.1.1: $A = \{1, 3, 5\}, B = \{2, 3\}$ எனில்
(i) $A \times B$ மற்றும் $B \times A$ ஐ காண்க. (ii) $A \times B = B \times A$ ஆகுமா? இல்லையெனில் ஏன்? (iii) $n(A \times B) = n(B \times A) = n(A) \times n(B)$ எனக் காட்டுக. **(SEP-21)**

**2.** $\boldsymbol{A = \{1, 2, 3\}}$ மற்றும் $\boldsymbol{B = \{x | x}$ **என்பது 10-ஐ விடச் சிறிய பகா எண்}** எனில், $\boldsymbol{A \times B}$ மற்றும் $\boldsymbol{B \times A}$ **ஆகியவற்றைக் காண்க.** MAY-22 2M

$A = \{1,2,3\}$

$B = \{x | x$ என்பது 10-ஐ விடச் சிறிய பகா எண்$\}$

$= \{2,3,5,7\}$

$A \times B = \{1,2,3\} \times \{2,3,5,7\}$

$\boldsymbol{=} \{(\boldsymbol{1}, \boldsymbol{2}), (\boldsymbol{1}, \boldsymbol{3}), (\boldsymbol{1}, \boldsymbol{5}), (\boldsymbol{1}, \boldsymbol{7}), (\boldsymbol{2}, \boldsymbol{2}), (\boldsymbol{2}, \boldsymbol{3}), (\boldsymbol{2}, \boldsymbol{5}), (\boldsymbol{2}, \boldsymbol{7}), (\boldsymbol{3}, \boldsymbol{2}), (\boldsymbol{3}, \boldsymbol{3}), (\boldsymbol{3}, \boldsymbol{5}), (\boldsymbol{3}, \boldsymbol{7})\}$

$B \times A = \{2,3,5,7\} \times \{1,2,3\}$

$= \{(\boldsymbol{2}, \boldsymbol{1}), (\boldsymbol{2}, \boldsymbol{2}), (\boldsymbol{2}, \boldsymbol{3}), (\boldsymbol{3}, \boldsymbol{1}), (\boldsymbol{3}, \boldsymbol{2}), (\boldsymbol{3}, \boldsymbol{3}), (\boldsymbol{5}, \boldsymbol{1}), (\boldsymbol{5}, \boldsymbol{2}), (\boldsymbol{5}, \boldsymbol{3}), (\boldsymbol{7}, \boldsymbol{1}), (\boldsymbol{7}, \boldsymbol{2}), (\boldsymbol{7}, \boldsymbol{3})\}$

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும். 2M

3. $B \times A = \{(-2,3), (-2,4), (0,3), (0,4), (3,3), (3,4)\}$ எனில் $A$ மற்றும் $B$ ஐ காண்க. **(APR-23)**

எ.கா.1.2: $A \times B = \{(3, 2), (3, 4), (5, 2), (5, 4)\}$ எனில் $A$ மற்றும் $B$ ஐக் காண்க. **(SEP - 20, JUL - 22)**

**6.** $\boldsymbol{A = \{x \in \mathbb{W} | x < 2\}}$, $\boldsymbol{B = \{x \in \mathbb{N} | 1 < x \leq 4\}}$ **மற்றும்** $\boldsymbol{C = \{3, 5\}}$ **எனில், கொடுக்கப்பட்டுள்ள சமன்பாடுகளைச் சரிபார்க்க.** 5M JUN-23, PTA-5, SEP-21

**(ii)** $\boldsymbol{A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)}$

LHS: $B \cap C = \{2,3,4\} \cap \{3,5\} = \{3\}$

$A \times (B \cap C) = \{0,1\} \times \{3\} = \{(\boldsymbol{0}, \boldsymbol{3}), (\boldsymbol{1}, \boldsymbol{3})\}$ …………..(1)

RHS: $A \times B = \{0,1\} \times \{2,3,4\} = \{(0,2), (0,3), (0,4), (1,2), (1,3), (1,4)\}$

$A \times C = \{0,1\} \times \{3,5\} = \{(0,3), (0,5), (1,3), (1,5)\}$

$(A \times B) \cap (A \times C) = \{(0,2), (\boldsymbol{0}, \boldsymbol{3}), (0,4), (1,2), (\boldsymbol{1}, \boldsymbol{3}), (1,4)\} \cap \{(\boldsymbol{0}, \boldsymbol{3}), (0,5), (\boldsymbol{1}, \boldsymbol{3}), (1,5)\}$

$= \{(0,3), (1,3)\}$ ……………(2)

(1) மற்றும் (2) லிருந்து, $\boldsymbol{A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)}$

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும். 5M

4. $A = \{5,6\}, B = \{4,5,6\}, C = \{5,6,7\}$ எனில், $A \times A = (B \times B) \cap (C \times C)$ எனச் காட்டுக. **(JUL-22)**
5. $A = \{1,2,3\}, B = \{2,3,5\}, C = \{3,4\}$ மற்றும் $D = \{1,3,5\}$ எனில் $(A \cap C) \times (B \cap D) = (A \times B) \cap (C \times D)$ என்பது உண்மையா என சோதிக்கவும்.
6. $A = \{x \in \mathbb{W} | x < 2\}, B = \{x \in \mathbb{N} | 1 < x \leq 4\}$ மற்றும் $C = \{3,5\}$ எனில், கொடுக்கப்பட்டுள்ள சமன்பாடுகளைச் சரிபார்க்க.
   (i) $A \times (B \cup C) = (A \times B) \cup (A \times C)$ **(PTA-2)** (iii) $(A \cup B) \times C = (A \times C) \cup (B \times C)$
7. $A$ என்பது 8-ஐவிடக் குறைவான இயல் எண்களின் கணம், $B$ என்பது 8-ஐ விடக் குறைவான பகா எண்களின் கணம் மற்றும் $C$ என்பது இரட்டைப்படை பகா எண்களின் கணம் எனில், கீழ்க்கண்டவற்றைச் சரிபார்க்க.(i) $(A \cap B) \times C = (A \times C) \cap (B \times C)$ **(SEP-20)**

எ.கா.1.3: $A = \{x \in \mathbb{N} | 1 < x < 4\}$, $B = \{x \in \mathbb{W} | 0 \leq x < 2\}$ மற்றும் $C = \{x \in \mathbb{N} | x < 3\}$ என்க.
(i) $A \times (B \cup C) = (A \times B) \cup (A \times C)$ (ii) $A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)$ என்பனவற்றைச் சரிபார்க்க.

**CQ: 1.** $A = \{x \in W / x < 3\}$, $B = \{x \in N / 1 < x \leq 5\}$, $C = \{3,5,7\}$ எனில் $A \times (B \cup C) = (A \times B) \cup (A \times C)$ ஐச் சரிபார்க்க. **(APR-23)**

**2.** $A = \{x \in W | 0 < x < 5\}$, $B = \{x \in W | 0 \leq x \leq 2\}$, $C = \{x \in W | x < 3\}$ எனில் $A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)$ ஐச் சரிபார்க்க. **(PTA-3)**

**7. $A$ என்பது 8-ஐவிடக் குறைவான இயல் எண்களின் கணம், $B$ என்பது 8-ஐ விடக் குறைவான பகா எண்களின் கணம் மற்றும் $C$ என்பது இரட்டைப்படை பகா எண்களின் கணம் எனில், கீழ்க்கண்டவற்றைச் சரிபார்க்க.**

**(ii) $A\times(B-C)=(A\times B)-(A\times C)$**

MAY-22 5M

LHS: $B-C=\{2,3,5,7\}-\{2\}=\{3,5,7\}$

$A\times(B-C)=\{1,2,3,4,5,6,7\}\times\{3,5,7\}$

$=\{(\mathbf{1},\mathbf{3}),(\mathbf{1},\mathbf{5}),(\mathbf{1},\mathbf{7}),(\mathbf{2},\mathbf{3}),(\mathbf{2},\mathbf{5}),(\mathbf{2},\mathbf{7}),(\mathbf{3},\mathbf{3}),(\mathbf{3},\mathbf{5}),(\mathbf{3},\mathbf{7}),(\mathbf{4},\mathbf{3}),(\mathbf{4},\mathbf{5}),(\mathbf{4},\mathbf{7}),(\mathbf{5},\mathbf{3}),(\mathbf{5},\mathbf{5}),(\mathbf{5},\mathbf{7}),(\mathbf{6},\mathbf{3}),(\mathbf{6},\mathbf{5}),(\mathbf{6},\mathbf{7}),(\mathbf{7},\mathbf{3}),(\mathbf{7},\mathbf{5}),(\mathbf{7},\mathbf{7})\}$............(1)

RHS: $A\times B=\{1,2,3,4,5,6,7\}\times\{2,3,5,7\}$

$=\{(1,2),(1,3),(1,5),(1,7),(2,2),(2,3),(2,5),(2,7),(3,2),(3,3),(3,5),(3,7),(4,2),(4,3),(4,5),(4,7),(5,2),(5,3),(5,5),(5,7),(6,2),(6,3),(6,5),(6,7),(7,2),(7,3),(7,5),(7,7)\}$

$A\times C=\{1,2,3,4,5,6,7\}\times\{2\}=\{(1,2),(2,2),(3,2),(4,2),(5,2),(6,2),(7,2)\}$

$(A\times B)-(A\times C)$

$=\{(1,2),(1,3),(1,5),(1,7),(2,2),(2,3),(2,5),(2,7),(3,2),(3,3),(3,5),(3,7),(4,2),(4,3),(4,5),(4,7),(5,2),(5,3),(5,5),(5,7),(6,2),(6,3),(6,5),(6,7),(7,2),(7,3),(7,5),(7,7)\}$
$-\{(1,2),(2,2),(3,2),(4,2),(5,2),(6,2),(7,2)\}$

$=\{(\mathbf{1},\mathbf{3}),(\mathbf{1},\mathbf{5}),(\mathbf{1},\mathbf{7}),(\mathbf{2},\mathbf{3}),(\mathbf{2},\mathbf{5}),(\mathbf{2},\mathbf{7}),(\mathbf{3},\mathbf{3}),(\mathbf{3},\mathbf{5}),(\mathbf{3},\mathbf{7}),(\mathbf{4},\mathbf{3}),(\mathbf{4},\mathbf{5}),(\mathbf{4},\mathbf{7}),(\mathbf{5},\mathbf{3}),(\mathbf{5},\mathbf{5}),(\mathbf{5},\mathbf{7}),(\mathbf{6},\mathbf{3}),(\mathbf{6},\mathbf{5}),(\mathbf{6},\mathbf{7}),(\mathbf{7},\mathbf{3}),(\mathbf{7},\mathbf{5}),(\mathbf{7},\mathbf{7})\}$............(2)

(1) மற்றும் (2) லிருந்து, $\boldsymbol{A\times(B-C)=(A\times B)-(A\times C)}$

## பயிற்சி 1.2

**1. $A=\{1,2,3,7\}$ & $B=\{3,0,-1,7\}$ எனில், பின்வருவனவற்றில் எவை $A$ லிருந்து $B$ க்கான உறவுகளாகும்?**

2M

(i) $R_1=\{(2,1),(7,1)\}$

$A\times B=\{1,2,3,7\}\times\{3,0,-1,7\}$

$=\{(1,3),(1,0),(1,-1),(1,7),(2,3),(2,0),(2,-1),(2,7),(3,3),(3,0),(3,-1),(3,7),(7,3),(7,0),(7,-1),(7,7)\}$

$(2,1)$ மற்றும் $(7,1)\in R_1$

ஆனால் $(2,1),(7,1)\notin A\times B$

$R_1$ ஆனது **$A$ லிருந்து $B$ க்கான உறவு இல்லை**

(iii) $R_3=\{(2,-1),(7,7),(1,3)\}$

இங்கு $R_3\subseteq A\times B$

$R_3$ ஆனது **$A$ லிருந்து $B$ க்கான உறவு ஆகும்.**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். 2M

1. $A=\{1,2,3,7\}$ மற்றும் $B=\{3,0,-1,7\}$ எனில், பின்வருவனவற்றில் எவை $A$ லிருந்து $B$ க்கான உறவுகளாகும்?
(ii) $R_2=\{(-1,1)\}$ (iv) $R_4=\{(7,-1),(0,3),(3,3),(0,7)\}$

எ.கா.1.4: $A=\{3,4,7,8\}$ மற்றும் $B=\{1,7,10\}$ எனில் உள்ள கணங்களில் எவை $A$ -லிருந்து $B$ -க்கு ஆன உறவைக் குறிக்கின்றது? (i) $R_1=\{(3,7),(4,7),(7,10),(8,1)\}$
(ii) $R_2=\{(3,1),(4,12)\}$
(iii) $R_3=\{(3,7),(4,10),(7,7),(7,8),(8,11),(8,8),(8,10)\}$

**2. $A=\{1,2,3,4,\ldots,45\}$ மற்றும் $R$ என்ற உறவு "$A$ -யின் மீது, ஓர் எண்ணின் வர்க்கம்" என வரையறுக்கப்பட்டால், $R-$ ஐ $A\times A$- யின் உட்கணமாக எழுதுக. மேலும் $R$- க்கான மதிப்பகத்தையும், வீச்சகத்தையும் காண்க.**

SEP-21 2M

கொடுக்கப்பட்டது: $A=\{1,2,3,4,\ldots,45\}$

$A\times A=\{(1,1),(1,2),(1,3),(1,4)\ldots\ldots(45,45)\}$

$R$ என்ற உறவு "$A$ - யின் மீது, ஓர் எண்ணின் வர்க்கம்" என வரையறுக்கபடுகிறது.

$R=\{(1,1),(2,4),(3,9),(4,16),(5,25),(6,36)\}$

$R\subseteq A\times A$

$R$ -க்கான மதிப்பகம்= $\{\mathbf{1},\mathbf{2},\mathbf{3},\mathbf{4},\mathbf{5},\mathbf{6}\}$

$R$ -க்கான வீச்சகம்= $\{\mathbf{1},\mathbf{4},\mathbf{9},\mathbf{16},\mathbf{25},\mathbf{36}\}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். 2M

3. $R$ என்ற ஒரு உறவு $\{(x,y)/y=x+3,\ x\in\{0,1,2,3,4,5\}\}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பகத்தையும் வீச்சகத்தையும் கண்டறிக. **(JUN-23, PTA-5)**

**CQ:** $R$ என்ற ஒரு உறவு $\{(x,y)/y=x^2+3,x\in\{0,1,2,3,4,5\}\}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பகத்தையும் வீச்சகத்தையும் கண்டறிக. **(PTA-2)**

**4.** **கொடுக்கப்பட்ட உறவுகள் ஒவ்வொன்றையும் (1) அம்புக்குறி படம் (2) வரைபடம் (3) பட்டியல் முறையில் குறிக்க.** 5M

**(i)** $\{(x,y)|x=2y, x \in \{2,3,4,5\}, y \in \{1,2,3,4\}\}$

**(1) அம்புக்குறி படம்**

கொடுக்கப்பட்டது, $x = 2y$

$y = 1$ எனில், $x = 2$

$y = 2$ எனில், $x = 4$




**(2) வரைபடம்**




**(3) பட்டியல் முறை:** $R = \{(2,1),(4,2)\}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

4. கொடுக்கப்பட்ட உறவுகள் ஒவ்வொன்றையும் (1) அம்புக்குறி படம் (2) வரைபடம் (3) பட்டியல் முறையில் குறிக்க. (ii) $\{(x,y)|y=x+3, x, y$ ஆகியவை இயல் எண்கள் $<10\}$ **(JUL - 22)** 5M

எ.கா.1.5: படத்தில் காட்டப்பட்டுள்ள அம்புகுறி படமானது $P$ மற்றும் $Q$ கணங்களுக்கான உறவைக் குறிக்கின்றது. இந்த உறவை (i) கணகட்டமைப்பு முறை (ii) பட்டியல் முறைகளில் எழுதுக. (iii) $R$ ன் மதிப்பகம் மற்றும் வீச்சகத்தைக் காண்க. **(MAY-22)**




**5.** **ஒரு நிறுவனத்தின் உதவியாளர்கள் $(A)$ எழுத்தர்கள் $(C)$, மேலாளர்கள் $(M)$ மற்றும் நிர்வாகிகள் $(E)$ ஆகிய நான்கு பிரிவுகளில் பணியாளர்கள் உள்ளனர். $A, C, M$ மற்றும் $E$ பிரிவு பணியாளர்களுக்கு ஊதியங்கள் முறையே ₹ 10,000, ₹ 25,000, ₹ 50,000, ₹ 1,00,000 ஆகும். $A_1, A_2, A_3, A_4$ மற்றும் $A_5$ ஆகியோர் உதவியாளர்கள். $C_1, C_2, C_3, C_4$ ஆகியோர் எழுத்தர்கள். $M_1, M_2, M_3$ ஆகியோர்கள் மேலாளர்கள். மற்றும் $E_1, E_2$ ஆகியோர் நிர்வாகிகள் ஆவர். $x\mathbb{R}y$ என்ற உறவில் $x$ என்பது $y$ என்பவருக்குக் கொடுக்கப்பட்ட ஊதியம் எனில் $R$ - என்ற உறவை, வரிசைச் சோடிகள் மூலமாகவும் அம்புக்குறி படம் மூலமாகவும் குறிப்பிடுக.** 2M

ஊதியங்கள் $(S) = \{10000, 25000, 50000, 100000\}$

பணியாளர்கள் $(E) = \{A_1, A_2, A_3, A_4, A_5, C_1, C_2, C_3, C_4, M_1, M_2, M_3, E_1, E_2\}$

**(a) வரிசைச் சோடிகள்**

$R = \{(10000, A_1), (10000, A_2), (10000, A_3), (10000, A_4), (10000, A_5), (25000, C_1), (25000, C_2), (25000, C_3), (25000, C_4), (50000, M_1), (50000, M_2), (50000, M_3), (100000, E_1), (100000, E_2)\}$

**(b) அம்புக்குறி படம்**




## பயிற்சி 1.3

**1.** **$f = \{(x,y)|x, y \in \mathbb{N}$ மற்றும் $y = 2x\}$ ஆனது $\mathbb{N}$-ன் மீதான ஓர் உறவு என்க. மதிப்பகம், துணை மதிப்பகம் மற்றும் வீச்சகத்தைக் காண்க. இந்த உறவு சார்பாகுமா?** 2M

$y = f(x) = 2x$

$f(1) = 2(1) = 2$

$f(2) = 2(2) = 4$

$f(3) = 2(3) = 6$

$f(4) = 2(4) = 8$

$\vdots$




**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

எ.கா.1.6: $X = \{1,2,3,4\}$, $Y = \{2,4,6,8,10\}$ மற்றும் $R = \{(1,2),(2,4),(3,6),(4,8)\}$ எனில் $R$ ஆனது ஒரு சார்பு எனக் காட்டுக. மேலும் அதன் மதிப்பகம், துணை மதிப்பகம் மற்றும் வீச்சகத்தைக் காண்க. 2M

$f$ ஆனது $N$ன் மீதான ஓர் உறவு

$f$ ன் மதிப்பகம் $= \{1,2,3,4,...\}$, $f$ ன் துணை மதிப்பகம் $= \{1,2,3,4,...\}$

$f$ ன் வீச்சகம் $= \{2,4,6,8,...\}$

$f$ ன் அம்புகுறி படத்திலிருந்து, $x \in A$ க்கும் ஒரே ஒரு $y \in B$ இருக்கும். **ஆம்,** $f$ ஒரு சார்பு ஆகும்.

**2. $X=\{3,4,6,8\}$ என்க. $\mathbb{R}=\{(x,f(x))|x\in X, f(x)=x^2+1\}$ என்ற உறவானது $X$-லிருந்து $\mathbb{N}$-க்கு ஒரு சார்பாகுமா?** (2M)

கொடுக்கப்பட்டது, $X=\{3,4,6,8\}$

$Y=\{1,2,3,4,\ldots.\}$

$R=\{(x,f(x)/x\in X, f(x)=x^2+1)\}$

$y=f(x)=x^2+1$

$f(3)=3^2+1=10$

$f(4)=4^2+1=17$

$f(6)=6^2+1=37$

$f(8)=8^2+1=65$

$R=\{(3,10),(4,17),(6,37),(8,65)\}$

மதிப்பகம் $X$-ல் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் $N$-ல் ஒரு நிழல் உரு உள்ளது.

**ஆம்,** $R$ ஆனது $X$-லிருந்து $N$-க்கு ஒரு சார்பாகும்.

> **இது போன்ற கணக்குகள்**
> சுயமாக பயிற்சி செய்யவும். (2M)
>
> **எ.கா.1.7:** '$f: X\longrightarrow Y$' என்ற உறவானது $f(x)=x^2-2$ என வரையறுக்கப்படுகிறது. இங்கு $x=\{-2,-1,0,3\}$ மற்றும் $Y=R$ எனக் கொண்டால் (i) $f$ -யின் உறுப்புகளை பட்டியலிடுக. (ii) $f$ ஒரு சார்பாகுமா?
>
> **எ.கா.1.8:** $X=\{-5,\ 1,\ 3,\ 4\}$ மற்றும் $Y=\{a,\ b,\ c\}$ எனில், $X$ -லிருந்து $Y$ -க்கு பின்வரும் உறவுகளில் எவை சார்பாகும்?
> (i) $R_1=\{(-5,a),(1,a),(3,b)\}$
> (ii) $R_2=\{(-5,b),(1,b),(3,a),(4,c)\}$
> (iii) $R_3=\{(-5,a),(1,a),(3,b),(4,c),(1,b)\}$

**3. கொடுக்கப்பட்ட சார்பு $f: x\to x^2-5x+6$, எனில், (i) $f(-1)$ (ii) $f(2a)$ (iii) $f(2)$ (iv) $f(x-1)$ ஆகியவற்றை மதிப்பிடுக.** (2M)

$f(x)=x^2-5x+6$

(i) $f(-1)=(-1)^2-5(-1)+6$

$=1+5+6=\mathbf{12}$

(ii) $f(2a)=(2a)^2-5(2a)+6$

$=\mathbf{4a^2-10a+6}$

(iii) $f(2)=2^2-5(2)+6$

$=4-10+6=0$

(iv) $f(x-1)=(x-1)^2-5(x-1)+6$

$=x^2-2x+1-5x+5+6$

$=\mathbf{x^2-7x+12}$

> **இது போன்ற கணக்குகள்**
> சுயமாக பயிற்சி செய்யவும். (2M)
>
> 5. $f(x)=2x+5$ என்க. $x\neq 0$ எனில் $\frac{f(x+2)-f(2)}{x}$ ஐக் காண்க.
> 6. ஒரு சார்பு $f$ ஆனது $f(x)=2x-3$ என வரையறுக்கப்பட்டால் (i) $\frac{f(0)+f(1)}{2}$ - ஐக் காண்க. (ii) $f(x)=0$ எனும்பொழுது, $x$ ஐக் காண்க. (iii) $f(x)=x$ எனில் $x$ ஐக் காண்க. (iv) $f(x)=f(1-x)$ எனில் $x$ ஐக் காண்க.
>
> **எ.கா.1.9:** $f(x)=2x-x^2$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது எனில், (i) $f(1)$ (ii) $f(x+1)$ (iii) $f(x)+f(1)$ ஆகியவற்றைக் காண்க.

**10. அருகில் உள்ள அட்டவணையில் நான்கு நபர்களின் முன்னங்கைகளின் நீளம் மற்றும் அவர்களுடைய உயரங்களின் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த விவரங்களின் அடிப்படையில் ஒரு மாணவர், உயரம் $(y)$ மற்றும் முன்னங்கை நீளம் $(x)$-க்கான உறவை $y=ax+b$ எனக் கண்டுபிடித்தார். இங்கு $a$ & $b$ ஆகியவை மாறிலிகள்.**

| முன்னங்கைகளின் நீளம் (செ.மீ) '$x$' | உயரம் (அங்குலம்)'$y$' |
|---|---|
| 35 | 56 |
| 45 | 65 |
| 50 | 69.5 |
| 55 | 74 |

**(i) இந்த உறவானது சார்பாகுமா என ஆராய்க.** (5M) PTA-4

**(ii) $a$ மற்றும் $b$ –ஐக் காண்க.**

**(iii) முன்னங்கையின் நீளம் 40 செ.மீ எனில், அந்த நபரின் உயரத்தைக் காண்க.**

**(iv) உயரம் 53.3 அங்குலம் எனில் அந்த நபரின், முன்னங்கையின் நீளத்தைக் காண்க.**

கொடுக்கப்பட்டது $y=ax+b$

(i) அம்புக்குறிப்படம்




$x$-ல் உள்ள ஒவ்வொரு உறுப்பும் $y$-ல் ஒரே ஒரு நிழல் உரு கொண்டுள்ளது.

**ஆம்,** எனவே இந்த உறவு சார்பாகும்.

(ii) $a$ மற்றும் $b$ -ஐக் காண

அட்டவணையிலிருந்து

$35a+b=56$ ...............(1)

$45a+b=65$ ..............(2)

$(-)\quad(-)\quad(-)$

$-10a\quad=-9$

$a=\frac{9}{10}=0.9$

$a=0.9$ என (1) ல் பிரதியிட

$35(0.9)+b=56$

$31.5+b=56$

$b=56-31.5=24.5$

$\mathbf{a=0.9}$ மற்றும் $\mathbf{b=24.5}$

(iii) நீளம் $=40$ செ.மீ, $a=0.9, b=24.5$

$y=ax+b$

$=(0.9)(40)+24.5\ =60.5$

முன்னங்கையின் நீளம் 40 செ.மீ எனில்,

அந்த நபரின் உயரம் **= 60.5 அங்குலம்**

(iv) உயரம் $=53.3$ அங்குலம்

$y=ax+b$

$53.3=(0.9)x+24.5\ =0.9x+24.5$

$0.9x=53.3-24.5\ =28.8$

$x=\frac{28.8}{0.9}=$ **32 செ.மீ**

அந்த நபரின், முன்னங்கையின் நீளம் **= 32 செ.மீ**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

2M



4. படத்தில் கொடுக்கப்பட்ட வரைபடம் $f(x)$ -ன் மூலமாக, $f(9) = 2$ என்பது தெளிவாகிறது.
   (i) பின்வரும் சார்புகளின் மதிப்புகளைக் காண்க
   (அ) $f(0)$ (ஆ) $f(7)$ (இ) $f(2)$ (ஈ) $f(10)$
   (ii) $x$-ன் எம்மதிப்பிற்கு $f(x) = 1$ ஆக இருக்கும்?
   (iii) $f(x)$-ன் (1) மதிப்பகம் (2) வீச்சகம் காண்க.
   (iv) $f$ என்ற சார்பில் 6-ன் நிழல் உரு என்ன?



7. 24 செ.மீ பக்க அளவுள்ள சதுர வடிவத் துண்டிலிருந்து நான்கு மூலைகளிலும் சம அளவுள்ள சதுரங்களை வெட்டி படத்தில் உள்ளவாறு மேல்புறம் திறந்த ஒரு பெட்டி செய்யப்படுகிறது. இந்த பெட்டியின் கன அளவு $V$ எனில், $V$ ஐ $x$-யின் சார்பாகக் குறிப்பிடுக.
8. $f$ என்ற சார்பு $f(x) = 3 - 2x$ என வரையறுக்கப்படுகிறது. $f(x^2) = (f(x))^2$ எனில் $x$-ஐக் காண்க.
9. ஒரு விமானம் 500 கி.மீ/மணி வேகத்தில் பறக்கிறது. விமானம் ‘d’ தொலைவு செல்வதற்கு ஆகும் காலத்தை t(மணியில்)-ன் சார்பாக வெளிப்படுத்துக.

## பயிற்சி 1.4

**1. கீழே கொடுக்கப்பட்ட வரைபடங்கள் சார்பைக் குறிக்கின்றனவா எனத் தீர்மானிக்கவும். விடைகளுக்கான காரணத்தையும் கொடுக்கவும்.** 2M

| | |
|---|---|
|  **விடை:**  குத்துக்கோட்டுச் சோதனையிலிருந்து கொடுக்கப்பட்ட வளைவரையானது, **சார்பை குறிக்கவில்லை** என தெளிவாகிறது. ஏனெனில் வளைவரையை குத்துக்கோடு P மற்றும் Q ஆகிய இரு புள்ளிகளில் சந்திக்கிறது. |  **விடை:**  கொடுக்கப்பட்ட வளைவரையானது, **சார்பை குறிக்கிறது.** ஏனெனில் வளைவரையை குத்துக்கோடு P என்ற ஒரு புள்ளியில் மட்டுமே சந்திக்கிறது. |

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

1. **கீழே கொடுக்கப்பட்ட வரைபடங்கள் சார்பைக் குறிக்கின்றனவா எனத் தீர்மானிக்கவும். விடைகளுக்கான காரணத்தையும் கொடுக்கவும்.**

2M



**எ.கா.1.10:** குத்துக்கோடு சோதனையைப் பயன்படுத்திப் பின்வரும் வரைபடங்களில் எவை சார்பினைக் குறிக்கும் எனத் தீர்மானிக்கவும் ? 2M



**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.1.12** கிடைமட்டக்கோடு சோதனையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சார்புகளில் எவை ஒன்றுக்கொன்றானவை எனக் காண்க.

2M



2. **$f: A \to B$ என்ற சார்பானது $f(x) = \frac{x}{2} - 1$, என வரையறுக்கப்படுகிறது.இங்கு, $A = \{2, 4, 6, 10, 12\}$, $B = \{0, 1, 2, 4, 5, 9\}$. ஆக இருக்கும் பொழுது சார்பு $f$-ஐ பின்வரும் முறைகளில் குறிக்க.** 5M

**(i) வரிசைச் சோடிகளின் கணம் (ii) அட்டவணை (iii) அம்புக்குறி படம் (iv) வரைபடம்** APR-23

$A = \{2,4,6,10,12\},\ B = \{0,1,2,4,5,9\}$

$f(x) = \frac{x}{2} - 1$

$f(2) = \frac{2}{2} - 1 = 1 - 1 = 0$

$f(4) = \frac{4}{2} - 1 = 2 - 1 = 1$

$f(6) = \frac{6}{2} - 1 = 3 - 1 = 2$

$f(10) = \frac{10}{2} - 1 = 5 - 1 = 4$

$f(12) = \frac{12}{2} - 1 = 6 - 1 = 5$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

3. $f = \{(1,2), (2,2), (3,2), (4,3), (5,4)\}$ என்ற சார்பினை (i) அம்புக்குறி படம் (ii) அட்டவணை (iii) வரைபடம் மூலமாகக் குறிக்கவும். **5M**

**எ.கா.1.11:** $A = \{1, 2, 3, 4\}$ மற்றும் $B = \{2, 5, 8, 11, 14\}$ என்பன இரு கணங்கள் என்க. $f: A \to B$ எனும் சார்பு $f(x) = 3x - 1$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சார்பினைக் கொண்டு (i) அம்புக்குறி படம் (ii) அட்டவணை (iii) வரிசைச்சோடிகளின் கணம் (iv) வரைபடம் ஆகியவற்றைக் குறிக்க. **(PTA-3, SEP-20)**

**(i) வரிசைச் சோடிகளின் கணம்**

$f = \{(2,0), (4,1), (6,2), (10,4), (12,5)\}$

**(ii) அட்டவணை**

| $x$ | 2 | 4 | 6 | 10 | 12 |
|---|---|---|---|---|---|
| $f(x)$ | 0 | 1 | 2 | 4 | 5 |

**(iii) அம்புக்குறி படம்**




**(iv) வரைபடம்**




4. **$f: \mathbb{N} \to \mathbb{N}$ என்ற சார்பு $f(x) = 2x - 1$ என வரையறுக்கப்பட்டால் அது ஒன்றுக்கு ஒன்றான ஆனால் மேல் சார்பு இல்லை எனக் காட்டுக.** 2M

$f: \mathbb{N} \to \mathbb{N}$ என்ற சார்பு $f(x) = 2x - 1$ என வரையறுக்கப்படுகிறது.

**அம்புக்குறிபடம்**




$x = 1$ எனில், $f(1) = 2(1) - 1 = 1$

$x = 2$ எனில், $f(2) = 2(2) - 1 = 3$

$x = 3$ எனில், $f(3) = 2(3) - 1 = 5$

$f: N \to N$ என்ற சார்பில் $N$ ல் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் $N$ ல் வெவ்வேறு உறுப்புகளுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. எனவே **$f$ ஆனது ஒன்றுக்கு ஒன்றான சார்பாகும்.** ஆனால் துணைமதிப்பகத்தில் உள்ள இரட்டைப்படை எண்களுக்கு மதிப்பகத்தில் முன்உரு இல்லை எனவே **$f$ ஆனது மேல் சார்பு இல்லை.**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**2M**

எ.கா.1.13: $A = \{1, 2, 3\}$, $B = \{4, 5, 6, 7\}$ மற்றும் $f = \{(1,4),\ (2,5),\ (3,6)\}$ ஆனது $A$ -லிருந்து $B$ க்கான சார்பு $f$ ஆகும். $f$ ஆனது ஒன்றுக்கு ஒன்றான சார்பு ஆனால் மேல் சார்பு இல்லை எனக் காட்டுக.

5. **$f: \mathbb{N} \to \mathbb{N}$ என்ற சார்பு $f(m) = m^2 + m + 3$ என வரையறுக்கப்பட்டால் அது ஒன்றுக்கு ஒன்றான சார்பு எனக் காட்டுக.** 2M SEP-20

$f: \mathbb{N} \to \mathbb{N}$ என்ற சார்பு $f(m) = m^2 + m + 3$ என வரையறுக்கப்படுகிறது.

$m = 1, f(1) = (1)^2 + 1 + 3 = 1 + 1 + 3 = 5$

$m = 2, f(2) = (2)^2 + 2 + 3 = 4 + 2 + 3 = 9$

$m = 3, f(3) = (3)^2 + 3 + 3 = 9 + 3 + 3 = 15$

$m = 4, f(4) = (4)^2 + 4 + 3 = 16 + 4 + 3 = 23$

$N$-ன் வெவ்வேறான உறுப்புகளை $N$ ல் உள்ள வெவ்வேறு உறுப்புகளுடன் $f$ ஆனது தொடர்புபடுத்துவதால், $f$ ஆனது **ஒன்றுக்கு ஒன்றான சார்பு** ஆகும்.

**6.** $\boldsymbol{A = \{1, 2, 3, 4\}}$ **மற்றும்** $\boldsymbol{B = \mathbb{N}}$ **என்க. மேலும்** $\boldsymbol{f: A \to B}$ **ஆனது,** $\boldsymbol{f(x) = x^3}$ **என வரையறுக்கப்படுகிறது எனில், (i)** $\boldsymbol{f}$**-யின் வீச்சகத்தைக் காண்க (ii)** $\boldsymbol{f}$ **எவ்வகை சார்பு எனக் காண்க.** (2M)

$A = \{1,2,3,4\}, B = \{1,2,3, \ldots\}$

கொடுக்கப்பட்டது: $f: A \to B$ மற்றும் $f(x) = x^3$

(i) $f(1) = 1^3 = 1, f(3) = 3^3 = 27$

$f(2) = 2^3 = 8,\ f(4) = 4^3 = 64$

$f$-ன் வீச்சகம் $= \{\mathbf{1, 8, 27, 64}\}$

(ii) $A$-யின் வெவ்வேறான உறுப்புகளை $B$-ல் உள்ள வெவ்வேறு உறுப்புகளுடன் $f$ ஆனது தொடர்புபடுத்துவதால், $f$ என்பது **ஒன்றுக்கு ஒன்றான சார்பு** ஆகும். $2 \in B$ -க்கு $A$-ல் முன்உரு இல்லாததால் இது ஒரு **உட்சார்பு** ஆகும்.

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

**எ.கா.1.15:** $f: \mathbb{N} \to \mathbb{N}$ என்ற சார்பானது $f(x) = 3x + 2, x \in \mathbb{N}$ என வரையறுக்கப்பட்டால்
(i) $1, 2, 3$ யின் நிழல் உருக்களைக் காண்க.
(ii) 29 & 53-யின் முன் உருக்களைக் காண்க.**(PTA-3)**
(iii) சார்பின் வகையைக் காண்க. **(MDL)**

**CQ:** $A = \{1,2,3,4\}$ & $B = \mathbb{N}$ என்க.மேலும் $f: A \to B$ ஆனது $f(x) = x^2$என வரையறுக்கப்படுகிறது எனில், (i) $f$-யின் வீச்சகத்தைக் காண்க.
(ii) $f$ எவ்வகை சார்பு எனக் காண்க. **(PTA-5)**

**7. கீழே கொடுக்கப்பட்ட ஒவ்வொரு சார்பும் இருபுறச் சார்பா, இல்லையா? உன் விடைக்கான காரணத்தைக் கூறுக.**

**(i)** $\boldsymbol{f: \mathbb{R} \to \mathbb{R}}$ **ஆனது** $\boldsymbol{f(x) = 2x + 1}$ (5M)

$f(x) = 2x + 1$

$f(0) = 2(0) + 1 = 1$

$f(1) = 2(1) + 1 = 3$

$f(2) = 2(2) + 1 = 5$

$f(-1) = 2(-1) + 1 = -1$

$f(-2) = 2(-2) + 1 = -3$

$f(-3) = 2(-3) + 1 = -5$




$f$- இன் வீச்சகம்$= \{1, 3, 5, -1, -3, -5\}$

$A$ இன் வெவ்வேறு உறுப்புகளுக்கு $B$ இல் வெவ்வேறு நிழல் உரு உள்ளது மற்றும் $B$இன் ஒவ்வொரு உறுப்பிற்கும் $A$இல் நிழல் உரு உள்ளது.எனவே $f$ **இருபுறச் சார்பு** ஆகும்.

**(ii)** $\boldsymbol{f: \mathbb{R} \to \mathbb{R}}$ **ஆனது** $\boldsymbol{f(x) = 3 - 4x^2}$ (5M)

$f(x) = 3 - 4x^2$

$f(0) = 3 - 4(0)^2 = 3$

$f(1) = 3 - 4(1)^2 = -1$

$f(2) = 3 - 4(2)^2 = -13$

$f(-1) = 3 - 4(-1)^2 = -1$




$A$ இல் உள்ள வெவ்வேறு உறுப்புகள் 1 மற்றும் $-1$ க்கு $B$ இல் ஒரே நிழல் உரு உள்ளது. **எனவே** $\boldsymbol{f}$ **ஆனது ஒன்றுக்கு ஒன்றான சார்பு அல்ல.** ஆனால் $B$ இல் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் $A$ இல் முன்உரு உள்ளது எனவே $\boldsymbol{f}$ **ஆனது மேல்சார்பு ஆகும்.**

எனவே $f$ **இருபுறச் சார்பு அல்ல.**

**8.** $\boldsymbol{A = \{-1, 1\}}$ **மற்றும்** $\boldsymbol{B = \{0, 2\}}$ **என்க. மேலும்,** $\boldsymbol{f: A \to B}$ **ஆனது** $\boldsymbol{f(x) = ax + b}$ **என வரையறுக்கப்பட்ட மேல்சார்பு எனில்,** $\boldsymbol{a}$ **மற்றும்** $\boldsymbol{b -}$ **ஐக் காண்க.** (2M)

$A = \{-1,1\}$ மற்றும் $B = \{0,2\}$

$f: A \to B$ ஆனது

$f(x) = ax + b$ என வரையறுக்கப்பட்ட மேல்சார்பு




[$f$ ன் வீச்சகம் = துணைமதிப்பகம்]

$f(-1) = 0 \Rightarrow a(-1) + b = 0$

$f(1) = 2 \Rightarrow a(1) + b = 2$

$-a + b = 0$ ........(1)

$a + b = 2$ ......(2)

(1)+(2) $\quad 2b = 2$

$b = 1$

$b = 1$ என (2) ல் பிரதியிட

$a + 1 = 2 \Rightarrow a = 2 - 1 = 1$

எனவே, $\boldsymbol{a = 1}$ **மற்றும்** $\boldsymbol{b = 1}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

**எ.கா.1.14:** $A = \{-2, -1, 0, 1, 2\}$ மற்றும் $f: A \to B$ என்ற சார்பானது $f(x) = x^2 + x + 1$ மேல் சார்பு எனில், $B$ ஐ காண்க.

**எ.கா.1.17:** $f$ ஆனது $\mathbb{R}$ -லிருந்து $\mathbb{R}$ -க்கு ஆன சார்பு. மேலும் அது $f(x) = 3x - 5$ என வரையறுக்கப்படுகிறது. $(a, 4)$ மற்றும் $(1, b)$ எனக் கொடுக்கப்பட்டால் $a$ மற்றும் $b$ -யின் மதிப்புகளைக் காண்க. **(PTA-6)**

**CQ:** $R = \{(x, -2), (-5, y)\}$ என்பது சமனிச் சார்பைக் குறிக்குமெனில் $x$ மற்றும் $y$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க. **(PTA-6)**

**10.** $f:[-5,9] \to \mathbb{R}$ என்ற சார்பானது பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது $f(x)=\begin{cases} 6x+1 & ; -5 \le x < 2 \\ 5x^2-1 & ; 2 \le x < 6 \\ 3x-4 & ; 6 \le x \le 9 \end{cases}$ என வரையறுக்கப்படுகிறது எனில், பின்வருவனவற்றைக் காண்க. (5M)

(i) $f(-3)+f(2)$ (ii) $f(7)-f(1)$ (iii) $2f(4)+f(8)$ (iv) $\frac{2f(-2)-f(6)}{f(4)+f(-2)}$

$$f(x)=\begin{cases} 6x+1 \quad if -5 \le x < 2 & ; \text{இங்கு } x=-5,-4,-3,-2,-1,0,1 \\ 5x^2-1 \quad if\ 2 \le x < 6 & ; \text{இங்கு } x=2,3,4,5 \\ 3x-4 \quad if\ 6 \le x \le 9 & ; \text{இங்கு } x=6,7,8,9 \end{cases}$$

| | |
|---|---|
| (i) $f(-3)+f(2)$<br>$x=-3$ எனில், $f(x)=6x+1$<br>$f(-3)=6(-3)+1=-18+1=-17$<br>$x=2$ எனில், $f(x)=5x^2-1$<br>$f(2)=5(2)^2-1=20-1=19$<br>$f(-3)+f(2)=-17+19=\mathbf{2}$ | (ii) $f(7)-f(1)$ PTA-4<br>$x=7$ எனில், $f(x)=3x-4$<br>$f(7)=3(7)-4=21-4=17$<br>$x=1$ எனில், $f(x)=6x+1$<br>$f(1)=6(1)+1=6+1=7$<br>$\therefore f(7)-f(1)=17-7=\mathbf{10}$ |
| (iii) $2f(4)+f(8)$<br>$x=4$ எனில், $f(x)=5x^2-1$<br>$f(4)=5(4)^2-1$<br>$=80-1=79$<br>$x=8$ எனில், $f(x)=3x-4$<br>$f(8)=3(8)-4$<br>$=24-4=20$<br>$2f(4)+f(8)=2(79)+20$<br>$=158+20=\mathbf{178}$ | (iv) $\frac{2f(-2)-f(6)}{f(4)+f(-2)}$ PTA-4<br>$x=-2$ எனில், $f(x)=6x+1$<br>$f(-2)=6(-2)+1=-12+1=-11$<br>$x=6$ எனில், $f(x)=3x-4$<br>$f(6)=3(6)-4=18-4=14$<br>$x=4$ எனில், $f(x)=5x^2-1$<br>$f(4)=5(4)^2-1=80-1=79$<br>$\frac{2f(-2)-f(6)}{f(4)+f(-2)}=\frac{2(-11)-14}{79+(-11)}=\frac{-22-14}{79-11}=\frac{-36}{68}=-\frac{\mathbf{9}}{\mathbf{17}}$ |

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

(5M)

9. $f$ என்ற சார்பானது $f(x)=\begin{cases} x+2; & x>1 \\ 2; & -1 \le x \le 1 \\ x-1; & -3 < x < -1 \end{cases}$ என வரையறுக்கப்பட்டால்

(i) $f(3)$ (ii) $f(0)$ (iii) $f(-1.5)$ (iv) $f(2)+f(-2)$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.

**எ.கா.1.18:** சார்பு $f:\mathbb{R}\to\mathbb{R}$ ஆனது $f(x)=\begin{cases} 2x+7, & x<-2 \\ x^2-2, & -2 \le x < 3 \\ 3x-2, & x \ge 3 \end{cases}$ என வரையறுக்கப்பட்டால்,

(i) $f(4)$ (ii) $f(-2)$ (iii) $f(4)+2f(1)$ (iv) $\frac{f(1)-3f(4)}{f(-3)}$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.

**11.** **புவியீர்ப்பு விசையின் காரணமாக $t$ வினாடிகளில் ஒரு பொருள் கடக்கும் தூரமானது $S(t)=\frac{1}{2}gt^2+at+b$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு $a, b$ ஆகியவை மாறிலிகள் ($g$ ஆனது புவியீர்ப்பு விசையின் காரணமாக ஏற்படும் முடுக்கம்). $S(t)$ ஆனது ஒன்றுக்கொன்றான சார்பாகுமா என ஆராய்க.** (5M) PTA-3

$S(t)=\frac{1}{2}gt^2+at+b$ ($a, b$ ஆகியவை மாறிலிகள்)

$t=1,2,3,\ldots$ வினாடிகள் என எடுத்துக்கொள்ள

$t=1,\ S(1)=\frac{1}{2}g(1)^2+a(1)+b$

$=\frac{1}{2}g+a+b = \mathbf{0.5g+a+b}$

$t=2, S(2)=\frac{1}{2}g(2)^2+a(2)+b=\mathbf{2g+2a+b}$

$t=3, S(3)=\frac{1}{2}g(3)^2+a(3)+b=\mathbf{4.5g+3a+b}$

ஆம், $A$ யின் வெவ்வேறு உறுப்புகளுக்கு $B$ ல் வெவ்வேறு நிழல் உரு உள்ளது.
எனவே **இது ஒன்றுக்கு ஒன்றான சார்பாகும்.**

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.1.16:** தடயவியல் விஞ்ஞானிகள், தொடை எலும்புகளைக் கொண்டு ஒருவருடைய உயரத்தை (செ.மீட்டரில்) கணக்கிடுகிறார்கள். அவர்கள் பொதுவாக, $h(b)=2.47b+54\cdot 10$ என்ற சார்பை இதற்குப் பயன்படுத்துகிறார்கள். இங்கு $b$ ஆனது தொடை எலும்பின் நீளமாகும். (5M)

(i) $h$ ஆனது ஒன்றுக்கு ஒன்றானதா எனச் சோதிக்க.
(ii) தொடை எலும்பின் நீளம் 50செ.மீ எனில், அந்த நபரின் உயரத்தைக் காண்க.
(iii) நபரின் உயரம் 147.96 செ.மீ எனில், அவர் தொடை எலும்பின் நீளத்தைக் காண்க.

**12.** $t$ என்ற சார்பானது செல்சியஸில் $(C)$ உள்ள வெப்பநிலையையும், பாரன்ஹீட்டில் $(F)$ உள்ள வெப்பநிலையையும் இணைக்கும் சார்பாகும். மேலும் அது $t(C)=F$ என வரையறுக்கப்பட்டால், (இங்கு $F=\frac{9}{5}C+32$). (i) $t(0)$ (ii) $t(28)$ (iii) $t(-10)$ (iv) $t(C)=212$ ஆக இருக்கும்போது $C$-ன் மதிப்பு (v) செல்சியஸ் மதிப்பும் பாரன்ஹீட் மதிப்பும் சமமாக இருக்கும் பொழுது வெப்பநிலை ஆகியவற்றைக் கண்டறிக.

$t$ என்ற சார்பானது $t(C)=F$ என வரையறுக்கபடுகிறது. இங்கு $F=\frac{9}{5}C+32$ PTA-1

(i) $t(0)=\frac{9}{5}(0)+32 = 32°F$

(ii) $t(28)=\frac{9}{5}(28)+32$
$=9(5.6)+32$
$=50.4+32$
$=\mathbf{82.4°F}$

(iii) $t(-10)=\frac{9}{5}(-10)+32$
$=-18+32$
$=\mathbf{14°F}$

(iv) $t(C)=212$ எனில்
$\frac{9}{5}C+32=212$
$\frac{9}{5}C=212-32=180$
$C=\frac{180\times5}{9}=\mathbf{100°C}$

(v) $t(C)=F$ இங்கு $F=\frac{9}{5}C+32$ 5M

$t(F)=C$ இங்கு $C=\frac{9}{5}F+32$

செல்சியஸ் மதிப்பும் பாரன்ஹீட் மதிப்பும் சமமாக இருக்கும் பொழுது வெப்பநிலையை $t$ என கொள்ள

$t=\frac{9}{5}t+32°$

$t-\frac{9}{5}t=32°$

இருபுறமும் $\left(-\frac{5}{4}\right)$ ஆல் பெருக்க

$-\frac{5}{4}\left(t-\frac{9}{5}t\right)=32°\times\left(-\frac{5}{4}\right)$

$-\frac{5}{4}t+\frac{9}{4}t=-40°$

$\frac{-5t+9t}{4}=-40°$

$\frac{4t}{4}=-40° \Rightarrow \mathbf{t=-40°}$

## பயிற்சி 1.5

**1.** கீழே கொடுக்கப்பட்டுள்ள $f$ மற்றும் $g$ எனும் சார்புகளைப் பயன்படுத்தி $f\circ g$ மற்றும் $g\circ f$-ஐக் காண்க. $f\circ g=g\circ f$ என்பது சரியா சோதிக்க. 2M

**(i)** $f(x)=x-6,\ g(x)=x^2$ JUN-23

$f\circ g=f\circ g(x)$
$=f(g(x))$
$=f(x^2)$
$=x^2-6$..............(1)

$g\circ f(x)=g(f(x))$
$=g(x-6)$
$=(x-6)^2$...............(2)

(1) மற்றும் (2) லிருந்து, $f\circ g\neq g\circ f$, சமமில்லை

**(iv)** $f(x)=3+x, g(x)=x-4$

$f\circ g(x)=f(g(x))$
$=f(x-4)$
$=3+x-4$
$=x-1$ ...............(1)

$g\circ f(x)=g(f(x))$
$=g(3+x)$
$=3+x-4$
$=x-1$ ..................(2)

(1) மற்றும் (2) லிருந்து, $f\circ g=g\circ f$, சமம்

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். 2M

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள $f$ மற்றும் $g$ எனும் சார்புகளைப் பயன்படுத்தி $f\circ g$ மற்றும் $g\circ f$-ஐக் காண்க. $f\circ g=g\circ f$ என்பது சரியா சோதிக்க. (ii) $f(x)=\frac{2}{x}$, $g(x)=2x^2-1$ (iii) $f(x)=\frac{x+6}{3}$, $g(x)=3-x$ (v) $f(x)=4x^2-1, g(x)=1+x$

**எ.கா.1.19:** $f(x)=2x+1$ மற்றும் $g(x)=x^2-2$ எனில் $f\circ g$ மற்றும் $g\circ f$ -ஐ காண்க.

**எ.கா.1.20:** $f(x)=\sqrt{2x^2-5x+3}$ ஐ இரு சார்புகளின் சேர்ப்பாக குறிக்க.

**2.** $f \circ g = g \circ f$ எனில் $k$-யின் மதிப்பைக் காண்க. (5M)

**(i)** $f(x) = 3x + 2,\ g(x) = 6x - k$

$f \circ g(x) = f(g(x)) = f(6x - k)$

$= 3(6x - k) + 2 = 18x - 3k + 2$

$g \circ f(x) = g(f(x)) = g(3x + 2)$

$= 6(3x + 2) - k = 18x + 12 - k$

கொடுக்கப்பட்டது: $f \circ g = g \circ f$

$18x - 3k + 2 = 18x + 12 - k$

$18x - 18x - 3k + k = 12 - 2$

$-2k = 10$

$\boldsymbol{k = -5}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

2. $f \circ g = g \circ f$ எனில் $k$ –யின் மதிப்பைக் காண்க. (5M)
 (ii) $f(x) = 2x - k,\ g(x) = 4x + 5$

எ.கா.1.21: $f(x) = 3x - 2,\ g(x) = 2x + k$ மற்றும் $f \circ g = g \circ f$ எனில், $k$ யின் மதிப்பைக் காண்க. (5M)

எ.கா.1.22: $f \circ f(k) = 5, f(k) = 2k - 1$ எனில், $k$ -யின் மதிப்பைக் காண்க. (APR-23, PTA-4) (2M)

**3.** $f(x) = 2x - 1, g(x) = \frac{x+1}{2}$ எனில், $f \circ g = g \circ f = x$ எனக் காட்டுக. (2M)

$f(x) = 2x - 1,$

$g(x) = \frac{x+1}{2}$

$f \circ g(x) = f(g(x)) = f\left(\frac{x+1}{2}\right) = 2\left(\frac{x+1}{2}\right) - 1$

$= x + 1 - 1 = x$ ..........(1)

$g \circ f(x) = g(f(x))$

$= g(2x - 1) = \frac{2x-1+1}{2} = \frac{2x}{2} = x$ ...(2)

(1) மற்றும் (2) லிருந்து, $\boldsymbol{f \circ g = g \circ f = x}$

**4.** $f(x) = x^2 - 1, g(x) = x - 2$ மற்றும் $g \circ f(a) = 1$ எனில், $a$ –ஐக் காண்க. (PTA-2) (5M)

கொடுக்கப்பட்டது:

$f(x) = x^2 - 1,\ g(x) = x - 2$

$g \circ f(x) = g(f(x))$

$= g(x^2 - 1) = x^2 - 1 - 2 = x^2 - 3$

கொடுக்கப்பட்டது: $g \circ f(a) = 1$

$a^2 - 3 = 1$

$a^2 = 1 + 3$

$a^2 = 4$

$\boldsymbol{a = \pm 2}$

**5.** $A, B, C \subseteq N$ மற்றும் $f: A \to B$ என்ற சார்பு $f(x) = 2x + 1$ எனவும் மற்றும் $g: B \to C$ ஆனது $g(x) = x^2$ எனவும் வரையறுக்கப்பட்டால் $f \circ g$ மற்றும் $g \circ f$ –ன் வீச்சகத்தைக் காண்க. (2M)

$f: A \to B$ என்ற சார்பு $f(x) = 2x + 1$, $g: B \to C$ ஆனது $g(x) = x^2$ எனவும் வரையறுக்கப்படுகிறது மற்றும் $A, B, C \subseteq N$

$f \circ g(x) = f(g(x)) = f(x^2) = \boldsymbol{2x^2 + 1}$ , $f \circ g$ யின் வீச்சகம்= $\{y/y = 2x^2 + 1, x \in N\}$

$g \circ f(x) = g(f(x)) = g(2x + 1) = \boldsymbol{(2x + 1)^2}$ , $g \circ f$யின் வீச்சகம் $= \{y/y = (2x + 1)^2, x \in N\}$

**6.** $f(x) = x^2 - 1$ எனில் (i) $f \circ f$ (ii) $f \circ f \circ f$ –ஐக் காண்க. (2M)

**(i) $f \circ f$**

$f \circ f(x) = f(f(x))$

$= f(x^2 - 1)$

$= (x^2 - 1)^2 - 1$

$= x^4 - 2x^2 + 1 - 1$

$= \boldsymbol{x^4 - 2x^2}$

**(ii) $f \circ f \circ f$**

$f \circ f \circ f(x) = f\left(f(f(x))\right)$

$= f(f(x^2 - 1))$

$= f((x^2 - 1)^2 - 1)$

$= f(x^4 - 2x^2 + 1 - 1)$

$= f(x^4 - 2x^2)$

$= \boldsymbol{[x^4 - 2x^2]^2 - 1}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

(2M)

எ.கா.1.24: $(x) = 3x + 1$ , $g(x) = x + 3$ ஆகியவை இரு சார்புகள், மேலும் $gff(x) = fgg(x)$ எனில் $x$-ஐக் காண்க.

**அலகுப் பயிற்சி:**

**8.** $f(x) = \frac{x-1}{x+1}, x \neq -1$ என்க. $x \neq 0$ எனில், $f(f(x)) = -\frac{1}{x}$ , எனக் காட்டுக.

**9.** சார்பு $f$ மற்றும் $g$ ஆகியவை $f(x) = 6x + 8$; $g(x) = \frac{x-2}{3}$ எனில், i) $gg\left(\frac{1}{2}\right)$ –யின் மதிப்பைக் காண்க. ii) $gf(x)$ -ஐ எளிய வடிவில் எழுதுக.

**7. $f:\mathbb{R}\to\mathbb{R}$ மற்றும் $g:\mathbb{R}\to\mathbb{R}$ ஆனது முறையே, $f(x)=x^5$, $g(x)=x^4$ என வரையறுக்கப்பட்டால், $f, g$ ஆகியவை ஒன்றுக்கு ஒன்றானதா மற்றும் $f\circ g$ ஒன்றுக்கு ஒன்றான சார்பாகுமா என்று ஆராய்க.** PTA-6 (5M)

$f:R\to R$ ஆனது $f(x)=x^5$ என வரையறுக்கப்படுகிறது.

$f\circ f(x)=f(f(x))$

$=f(x^5)=(x^5)^5=x^{25}$

$f\circ f(1)=(1)^{25}=1$

$f\circ f(2)=(2)^{25}$

$f\circ f(3)=(3)^{25}$

$f$ ல் ஒவ்வொரு உறுப்புக்கும் வெவ்வேறான நிழல் உரு உள்ளது. எனவே **$f$ ஒன்றுக்கு ஒன்றான சார்பாகும்.**

$g:R\to R$ ஆனது $g(x)=x^4$ என வரையறுக்கப்படுகிறது.

$g\circ g(x)=g(g(x))$

$=g(x^4)=(x^4)^4=x^{16}$

$g\circ g(-1)=(-1)^{16}=1$

$g\circ g(1)=(1)^{16}=1$

$g\circ g(2)=(2)^{16}$

$-1$ மற்றும் $1$ ஆகியவை ஒரே நிழல் உருவை கொண்டுள்ளன. எனவே $g$ ஆனது **ஒன்றுக்கு ஒன்றான சார்பு அல்ல.**

$f\circ g(x)=f(g(x))=f(x^4)$

$=(x^4)^5=x^{20}$

$f\circ g(1)=(1)^{20}=1$

$f\circ g(-1)=(-1)^{20}=1$

$-1$ மற்றும் $1$ ஆகியவை ஒரே நிழல் உருவை கொண்டுள்ளன. எனவே $f\circ g$ ஆனது **ஒன்றுக்கு ஒன்றான சார்பு அல்ல.**

**8. கொடுக்கப்பட்ட $f(x), g(x), h(x)$ ஆகியவற்றை கொண்டு $(f\circ g)\circ h=f\circ(g\circ h)$ எனக் காட்டுக.**

**(iii) $f(x)=x-4, g(x)=x^2$ மற்றும் $h(x)=3x-5$** PTA-2 (5M)

$f\circ g(x)=f(g(x))$

$=f(x^2)=x^2-4$

$(f\circ g)\circ h(x)=f\circ g(h(x))$

$=f\circ g(3x-5)$

$=(3x-5)^2-4$

$=9x^2-30x+25-4$

$=9x^2-30x+21$…(1)

$g\circ h(x)=g(h(x))$

$=g(3x-5)=(3x-5)^2$

$=9x^2-30x+25$

$f\circ(g\circ h)(x)=f(9x^2-30x+25)$

$=9x^2-30x+25-4$

$=9x^2-30x+21$ ……….(2)

(1) மற்றும் (2) லிருந்து,

$(f\circ g)\circ h=f\circ(g\circ h)$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (5M)

8. கொடுக்கப்பட்ட $f(x), g(x), h(x)$ ஆகியவற்றை கொண்டு $(f\circ g)\circ h=f\circ(g\circ h)$ எனக் காட்டுக.

(i) $f(x)=x-1, g(x)=3x+1$ மற்றும் $h(x)=x^2$ (ii) $f(x)=x^2, g(x)=2x$ மற்றும் $h(x)=x+4$

எ.கா.1.23: $f(x)=2x+3$, $g(x)=1-2x$ மற்றும் $h(x)=3x$ எனில் $f\circ(g\circ h)=(f\circ g)\circ h$ என நிறுவுக. **(PTA-5)**

அலகுப் பயிற்சி: **6.** $f(x)=x^2$, $g(x)=3x$ மற்றும் $h(x)=x-2$ எனில், $(f\circ g)\circ h=f\circ(g\circ h)$ என நிறுவுக.

**9. $f=\{(-1,3),(0,-1),(2,-9)\}$ ஆனது $\mathbb{Z}$-லிருந்து $\mathbb{Z}$-க்கான ஒரு நேரிய சார்பு எனில், $f(x)$-ஐக் காண்க.** (2M)

$f=\{(-1,3),(0,-1),(2,-9)\}$ ஆனது $Z$-லிருந்து $Z$-க்கான நேரிய சார்பு ஆகும்.

$f(x)=mx+c$ ஐ

$f=\{(x,mx+c)/\ x\in Z\}$ என எழுத

$f(-1)=3\Rightarrow -m+c=3$ …..(1)

$f(0)=-1\Rightarrow c=-1$ ……… (2)

$c=-1$ என (1) ல் பிரதியிட

$-m+c=3\Rightarrow -m-1=3$

$m=-1-3=-4$

$\therefore f(x)=-4x-1$

**10. ஒரு மின்சுற்றுக் கோட்பாட்டின் படி, $C(t)$ என்ற ஒரு நேரிய சுற்று, $C(at_1+bt_2)=aC(t_1)+bC(t_2)$-ஐ பூர்த்தி செய்கிறது. மேலும் இங்கு $a, b$ ஆகியவை மாறிலிகள் எனில், $C(t)=3t$ ஆனது ஒரு நேரிய சுற்று எனக் காட்டுக.** (2M)

$C(t_1)=t$

$C(t_2)=2t$ இங்கு $t=t_1+t_2$

$C(t)=C(t_1+t_2)=C(t_1)+C(t_2)$

$t+2t=3t$

$\therefore$ **$C(t)=3t$ ஆனது நேரிய சுற்று ஆகும்.**

## அலகுப் பயிற்சி - 1

**4.** $A = \{9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17\}$ **என்க. மற்றும்** $f: A \to N$ **ஆனது** $f(n) = n$**-ன் அதிகபட்சப் பகா காரணி** $(n \in A)$ **என வரையறுக்கப்பட்டால்** $f$**—ன் வரிசைச் சோடிகளின் கணத்தை எழுதுக மற்றும்** $f$ **—ன் வீச்சகத்தைக் காண்க.** (2M)

$A = \{9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17\}$

$f: A \to N$ ஆனது $f(n) = n$ -ன் அதிகபட்சப் பகா காரணி $(n \in A)$ என வரையறுக்கப்படுகிறது.

$f = \{(9, 3), (10, 5), (11, 11), (12, 3), (13, 13), (14, 7), (15, 5), (16, 2), (17, 17)\}$

$f$ ன் வீச்சகம் $= \{2, 3, 5, 7, 11, 13, 17\}$

| | | |
|---|---|---|
| $9 = 3 \times 3$ | $10 = 5 \times 2$ | $11 = 1 \times 11$ |
| $12 = 3 \times 4$ | $13 = 1 \times 13$ | $14 = 2 \times 7$ |
| $15 = 5 \times 3$ | $16 = 2 \times 8$ | $17 = 1 \times 17$ |

**அலகுப்பயிற்சிக்கான குறிப்பு**

வினா எண்: 1,2,3 — பயிற்சிக்காக

வினா எண்: 6 — பயிற்சி 1.5 ல் - 8 ஆம் வினா போன்றது.

வினா எண்: 8,9 — பயிற்சி 1.5 ல் - 6 ஆம் வினா போன்றது.

**5.** $f(x) = \sqrt{1 + \sqrt{1 - \sqrt{1 - x^2}}}$ **என்ற சார்பின் மதிப்பகத்தைக் காண்க** (2M)

$f(x) = \sqrt{1 + \sqrt{1 - \sqrt{1 - x^2}}}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

$x \in (-\infty, -1) \cup (1, \infty)$ எனில், $f(x)$ ஆனது மெய் அல்ல.

$x \in [-1, 1]$எனில், $f(x)$ ஆனது மெய் ஆகும்.

$\therefore$ மதிப்பகம் $\{-1, 0, 1\}$, $-1 \le x \le 1$

**7.** $A = \{1, 2\}, B = \{1, 2, 3, 4\}$, $C = \{5, 6\}$ **மற்றும்** $D = \{5, 6, 7, 8\}$ **எனில்,** $A \times C$ **ஆனது** $B \times D$ **உட்கணமா எனச் சரிபார்க்க.** (2M)

$A = \{1, 2\}$ , $B = \{1, 2, 3, 4\}$ , $C = \{5, 6\}$, $D = \{5, 6, 7, 8\}$

$A \times C = \{1, 2\} \times \{5, 6\} = \{(1, 5), (1, 6), (2, 5), (2, 6)\}$ ..... (1)

$B \times D = \{1, 2, 3, 4\} \times \{5, 6, 7, 8\}$

$= \{(1, 5), (1, 6), (1, 7), (1, 8), (2, 5), (2, 6), (2, 7), (2, 8), (3, 5), (3, 6), (3, 7), (3, 8), (4,5), (4, 6), (4, 7), (4, 8)\}$ ...... (2)

(1) மற்றும் (2) லிருந்து $A \times C \subseteq B \times D$.

**10. பின்வருவனவற்றின் மதிப்பகங்களை எழுதுக.** (2M) PTA-6

i) $f(x) = \frac{2x+1}{x-9}$ PTA-6

$x = 9$ எனில் $f(9)$ வரையறுக்கப்படவில்லை. எனவே, $f$ ஆனது $x = 9$ஐ தவிர எல்லா மெய்யெண்களுக்கும் வரையறுக்கப்படுகிறது.

$\therefore f$ ன் மதிப்பகம் $= \boldsymbol{R} - \{9\}$

ii) $p(x) = \frac{-5}{4x^2+1}$

$p$ ஆனது எல்லா இயல் எண்களுக்கும் வரையறுக்கப்படுகிறது.

$\therefore$ எனவே, மதிப்பகம் $= \boldsymbol{R}$

iii) $g(x) = \sqrt{x - 2}$

$x \in (-\infty, 2)$ எனில் $g(x)$ ஆனது மெய் அல்ல

$x \in [2, \infty)$ எனில் $g(x)$ ஆனது மெய்

$\therefore$ எனவே மதிப்பகம் $[2, \infty)$

iv) $h(x) = x + 6$

$h$ ஆனது எல்லா இயல் எண்களுக்கும் வரையறுக்கப்படுகிறது.

$\therefore$ எனவே, மதிப்பகம் $= \boldsymbol{R}$

**பயிற்சிக்காக:**

1. $(x^2 - 3x,\ y^2 + 4y)$ மற்றும் $(-2,5)$ ஆகிய வரிசைச் சோடிகள் சமம் எனில், $x$ மற்றும் $y$-ஐக் காண்க. **(2M)**
2. $A \times A$ கார்டீசியன் பெருக்கல் பலனின் 9 உறுப்புகளில், உறுப்புகள் $(-1, 0)$ மற்றும் $(0, 1)$-ம் இருக்கிறது எனில், $A$-ல் உள்ள உறுப்புகளைக் காண்க. மற்றும் $A \times A$ —ன் மீதமுள்ள உறுப்புகளைக் காண்க. **(2M)**
3. $f(x) = \begin{cases} \sqrt{x-1} & x \ge 1 \\ 4 & x < 1 \end{cases}$ எனக் கொடுக்கப்பட்டால்,

(i) $f(0)$ (ii) $f(3)$ (iii) $f(a + 1)$ ($a \ge 0$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது) ஆகியவற்றை காண்க. **(2M)**

# 2. எண்களும் தொடர்வரிசைகளும்

## பயிற்சி 2.1

**1. 3 ஆல் வகுக்கும் போது மீதி 2-ஐத் தரக்கூடிய அனைத்து மிகை முழுக்களையும் காண்க.** (2M)

$q$ என்பது மிகை முழுக்கள் என்க.

வகுத்தி $= 3$ மற்றும் மீதி $= 2$

யூக்ளிட் வகுத்தல் துணைத்தேற்றத்தின் படி,

$a = bq + r, \quad 0 \leq r < b$

$q = 0,1,2,3,4$ ...என்க.

$3q + 2 = a \quad (\because b = 3, r = 2)$

$q = 0 \Rightarrow 3(0) + 2 = 0 + 2 = 2$

$q = 1 \Rightarrow 3(1) + 2 = 3 + 2 = 5$

$q = 2 \Rightarrow 3(2) + 2 = 6 + 2 = 8$

$q = 3 \Rightarrow 3(3) + 2 = 9 + 2 = 11$

$\therefore$ மிகை முழுக்கள் $\mathbf{2, 5, 8, 11}$ ...

**2. ஒரு நபரிடம் 532 பூந்தொட்டிகள் உள்ளன. அவர் வரிசைக்கு 21 பூந்தொட்டிகள் வீதம் அடுக்க விரும்பினார். எத்தனை வரிசைகள் முழுமை பெறும் எனவும் மற்றும் எத்தனை பூந்தொட்டிகள் மீதமிருக்கும் எனவும் காண்க.** (2M) PTA-1

ஒரு நபரிடம் 532 பூந்தொட்டிகள் உள்ளன. அவர் வரிசைக்கு 21 பூந்தொட்டிகள் வீதம் அடுக்க விரும்பினார்.

வகுபடும் எண் $= 532$

வகுக்கும் எண் $= 2$

யூக்ளிட் வகுத்தல் துணைத்தேற்றத்தின் படி, $a = bq + r \;, 0 \leq r < b$

```
     25
21 | 532
     42
     112
     105
       7
```

$532 = 21(25) + 7$

ஈவு $= 25,$ மீதி $= 7$

$\therefore$ **$\mathbf{25}$ வரிசைகள்** முழுமை பெறும் **7 பூந்தொட்டிகள்** மீதமிருக்கும்.

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.2.1:** நம்மிடம் 34 கேக் துண்டுகள் உள்ளன. ஒவ்வொரு பெட்டியிலும் 5 கேக்குகள் மட்டுமே வைக்க இயலுமெனில் கேக்குகளை வைக்க எத்தனை பெட்டிகள் தேவை மற்றும் எத்தனை கேக்குகள் மீதமிருக்கும் எனக் காண்க. (2M)

**அலகுப் பயிற்சி:.**

2. ஒரு பால்காரரிடம் 175 லிட்டர் பசும் பாலும் 105 லிட்டர் எருமைப்பாலும் உள்ளது. இவற்றை அவர் சம கொள்ளளவுக் கொண்ட இருவகையான கலன்களில் அடைத்து விற்க விருப்பப்படுகிறார். (i) இவ்வாறு விற்பதற்குத் தேவைப்படும் கலன்களின் அதிகபட்ச கொள்ளளவு எவ்வளவு? இவ்வாறாக (ii) எத்தனை கலன் பசும்பால் மற்றும் (iii) எருமைப்பால் விற்கப்பட்டிருக்கும்? (5M)

4. 107 ஆனது $4q$+3, $q$ என்பது ஏதேனும் ஒரு முழு என்ற வடிவில் அமையும் என நிறுவுக. (2M)

**3. தொடர்ச்சியான இரு மிகை முழுக்களின் பெருக்கற்பலன் 2 ஆல் வகுபடும் என நிறுவுக.**

$n$ மற்றும் $n + 1$ ஆகியன தொடர்ச்சியான இரு மிகை முழுக்கள் என்க. $(n + 1) = n^2 + n$

$n = 2m + 1$ என்பது ஒற்றைப்படை எண் என்க.

$n^2 + n = (2m + 1)^2 + (2m + 1)$ (2M)

$= 4m^2 + 2(2m)(1) + 1^2 + (2m + 1)$

$= 4m^2 + 4m + 1 + 2m + 1$

$= 4m^2 + 6m + 2 = 2(2m^2 + 3m + 1)$

இது 2 ஆல் வகுபடும்

$n = 2m$ என்பது இரட்டைப்படை எண் என்க.

$n^2 + n = (2m)^2 + 2m = 4m^2 + 2m$

$= 2(2m^2 + m).$

**இது 2 ஆல் வகுபடும்.** $\therefore$ **நிருபிக்கப்பட்டது.**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (5M)

5. எந்த மிகை முழுவின் வர்க்கத்தையும் 4 ஆல் வகுக்கும் போது மீதி 0 (அ) 1 மட்டுமே கிடைக்கும் என நிறுவுக.

**எ.கா.2.3:** ஒற்றை முழுக்களின் வர்க்கமானது $4q + 1$. (இங்கு q ஆனது முழுக்கள்) என்ற வடிவில் அமையும் எனக் காட்டுக. (2M)

**அலகுப் பயிற்சி:** 1. எல்லா மிகை முழுக்கள் $n$ –க்கும் $n^2 - n$ ஆனது 2 –ஆல் வகுப்படும் என நிறுவுக. (5M)

**4. $a, b$ மற்றும் $c$ என்ற மிகை முழுக்களை 13-ஆல் வகுக்கும்போது கிடைக்கும் மீதிகள் முறையே 9, 7, 10 எனில் $a + b + c$ ஆனது 13 ஆல் வகுபடும் என நிருபி.** (5M)

$a, b$ மற்றும் $c$ என்ற மிகை முழுக்களை 13 ஆல் வகுக்கும்போது கிடைக்கும் மீதிகள் முறையே 9, 7, 10.

$a + b + c$ ஆனது 13 ஆல் வகுபடும் என நிரூபிக்க வேண்டும். எனவே, வகுத்தி $= 13$

யூக்ளிட் வகுத்தல் துணைத்தேற்றத்தின் படி,

$a = bq + r \;, 0 \leq r < b$

$a = 13q_1 + 9, b = 13q_2 + 7, c = 13q_3 + 10$

$a + b + c = 13q_1 + 9 + 13q_2 + 7 + 13q_3 + 10$

$= 13q_1 + 13q_2 + 13q_3 + 26$

$a + b + c = 13(q_1 + q_2 + q_3 + 2) + 0$ (மீதி $= 0$)

$a + b + c$ ஆனது 13 ன் மடங்காக உள்ளது.

$\therefore$ **இது 13 ஆல் வகுபடும்.**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

அலகுப் பயிற்சி:

3. a, b, c என்ற எண்களை 13 ஆல் வகுக்கும் போது கிடைக்கும் மீதிகள் முறையே 9, 7 மற்றும் 10. a + 2b + 3c ஐ 13-ஆல் வகுக்கும்போது கிடைக்கும் மீதியைக் காண்க. (5M)

**6. யூக்ளிடின் வகுத்தல் வழிமுறையைப் பயன்படுத்திப் பின்வருவனவற்றின் மீ.பொ.வ காண்க.**

**(iv) $84, 90$ மற்றும் $120$** (2M)

$a = 120, b = 90, c = 84$ என்க

யூக்ளிட் வகுத்தல் துணைத்தேற்றத்தின் படி,

$a = bq + r, 0 \leq r < b$

$120 = 90(1) + 30$



மீதி $30 \neq 0$

$90 = 30(3) + 0$

மீதி $0$.

$\therefore 120$ மற்றும் $90$ ஆகியவற்றின் மீ.பொ.வ $30$.

> **இது போன்ற கணக்குகள்**
> சுயமாக பயிற்சி செய்யவும்.
>
> 6. யூக்ளிடின் வகுத்தல் வழிமுறையைப் பயன்படுத்திப் பின்வருவனவற்றின் மீ.பொ.வ காண்க. (2M)
> (i) 340 மற்றும் 412 (ii) 867 மற்றும் 255
> (iii) 10224 மற்றும் 9648
>
> **எ.கா.2.2:** பின்வரும் ஒவ்வொன்றிலும் $a$-யை $b$-ஆல் வகுக்கும்போது கிடைக்கும் ஈவு மற்றும் மீதியைக் காண்க.
> (i) $a = -12, b = 5$ (ii) $a = 17, b = -3$
> (iii) $a = -19, b = -4$ (2M)
>
> **எ.கா.2.6:** $396, 504, 636$ ஆகியவற்றின் மீ.பொ.வ காண்க. (5M) **(SEP-21)**

$d = 30$ மற்றும் $c = 84$ ஆகியவற்றின் மீ.பொ.வ -ஐக் காண வேண்டும்.

யூக்ளிட் வகுத்தல் துணைத்தேற்றத்தின் படி,

$c > d$

$84 = 30(2) + 24$

மீதி $24 \neq 0$

$30 = 24(1) + 6$

மீதி $6 \neq 0$

$24 = 6(4) + 0$

மீதி $0$



$\therefore 84, 90$ மற்றும் $120$ ஆகியவற்றின் மீ.பொ.வ **6.**

**7. 1230 & 1926 ஆகிய எண்களை வகுக்கும்போது மீதி 12-ஐத் தரக்கூடிய மிகப்பெரிய எண்ணைக் காண்க.**

JUL-22 (5M)

1230 மற்றும் 1926 ஆகிய எண்களை வகுக்கும்போது மீதி 12-ஐத் தரக்கூடிய மிகப்பெரிய எண்ணைக் காண வேண்டும்.

$1230 - 12 = 1218$ மற்றும்

$1926 - 12 = 1914.$

$a = 1914$ மற்றும் $b = 1218$ என்க

$a > b$

> **இது போன்ற கணக்குகள்**
> சுயமாக பயிற்சி செய்யவும்.
>
> 9. ஒரு மிகை முழுவை 88 ஆல் வகுக்கும்போது மீதி 61 கிடைக்கிறது. அதே மிகை முழுவை 11 ஆல்வகுக்கும் போது கிடைக்கும் மீதியைக் காண்க. (2M)
>
> **எ.கா.2.5:** 445 மற்றும் 572ஐ ஒரு குறிப்பிட்ட எண்ணால் வகுக்கும் போது முறையே மீதி 4 மற்றும் 5-ஐ தரக்கூடிய மிகப்பெரிய எண்ணைக் கண்டறிக.

யூக்ளிட் வகுத்தல் துணைத்தேற்றத்தின் படி,

$a = bq + r, 0 \leq r < b$

$1914 = 1218(1) + 696$

மீதி $696 \neq 0$

$1218 = 696(1) + 522$

மீதி $522 \neq 0$

$696 = 522(1) + 174$

மீதி $174 \neq 0$

$522 = 174(3) + 0$

மீதி $0$



$\therefore$ 1230 மற்றும் 1926 ஆகிய எண்களை வகுக்கும்போது மீதி 12 –ஐத் தரக்கூடிய மிகப்பெரிய எண் **174.**

8. 32 மற்றும் 60 ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தி $d$ என்க. $d = 32x + 60y$ எனில் $x$ மற்றும் $y$ என்ற முழுக்களைக் காண்க. **5M**

கொடுக்கப்பட்டது: 32 மற்றும் 60 ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தி $d$,

யூக்ளிட் வகுத்தல் துணைத்தேற்றத்தின் படி,

$a = bq + r \ , 0 \le r < b$

$a = 60, b = 32, a > b$

$60 = 32\,(1) + 28$ ............ (1)

$32 = 28\,(1) + 4$ ......... (2)

$28 = 4(7) + 0$ ....(3)

$\therefore \quad d = 4 \Rightarrow d = 32x + 60$

$4 = 32x + 60$

(2) லிருந்து $\quad 32 = 28(1) + 4$

$32 - (28 \times 1) = 4$

(1) லிருந்து ⇒ $60 = 32(1) + 28$



$60 - (32 \times 1) = (28 \times 1)$

$4 = 32 - [60 - (32 \times 1)]$

$4 = (32 \times 1) - 60 + (32 \times 1)$

$4 = 32(1 + 1) - 60(1)$

$4 = 32(2) + 60(-1)$

$\therefore \boldsymbol{x = 2, \ y = -1}$

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும்.

எ.கா.2.4: 210 & 55 ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தியை $55x - 325$ என்ற வடிவில் எழுதினால் $x$-யின் மதிப்புக் காண்க. **5M**

10. **எந்த இரு அடுத்தடுத்த மிகை முழுக்கள் சார்பகா எண்கள் என நிறுவுக.** **5M**

$n, (n+1)$ என்பன அடுத்தடுத்த மிகை முழுக்கள் என்க.

யூக்ளிட் வகுத்தல் துணைத்தேற்றத்தின் படி,

$a = bq + r \quad 0 \le r < b$

$n + 1 > n.$ எனவே

$(n + 1) = n(1) + 1$

$n = (1)(n) + 0$

மீதி $= 0.$ வகுத்தி $= 1.$

$n, (n+1)$ என்பனவற்றின் மீ.பொ.வ 1

∴ **இவை சார்பகா எண்கள் ஆகும்.**



## பயிற்சி 2.2

1. **$n$ ஓர் இயல் எண் எனில், எந்த $n$ மதிப்புகளுக்கு $4^n$ ஆனது 6 என்ற இலக்கத்தைக் கொண்டு முடியும்?** **2M**

கொடுக்கப்பட்டது: $n \in N$ மற்றும் $4^n$,

$n = 1,2,3,4 \ldots.$

$4^1 = 4$

$4^2 = 16$

$4^3 = 64$

$4^4 = 256$

$4^5 = 1024$

$4^6 = 4096$

⋮

இதிலிருந்து, $4^n$ஆனது $n$ ன் மதிப்பு **இரட்டைப்படை எண்ணாக** இருக்கும் போது 6 இல் முடிகிறது.

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும். **2M**

எ.கா.2.8: $6^n$ ஆனது, $n$ ஓர் இயல் எண் என்ற வடிவில் அமையும் எண்கள் 5 என்ற இலக்கத்தை கொண்டு முடியுமா? உனது விடைக்குக் காரணம் கூறுக.

2. **$m$ மற்றும் $n$ இயல் எண்கள் எனில், எந்த $m$-யின் மதிப்புகளுக்கு $2^n \times 5^m$ என்ற எண் 5 என்ற இலக்கத்தைக் கொண்டு முடியும்?** **2M** SEP-20

கொடுக்கப்பட்டது:

$m, n \ \in N$ மற்றும் $2^n \times 5^m$

$n = 1, m = 1 \ \Rightarrow 2^1 \times 5^1 = 2 \times 5 = 10$

$n = 1, m = 2 \ \Rightarrow 2^1 \times 5^2 = 2 \times 25 = 50$

$n = 2, m = 3 \ \Rightarrow 2^2 \times 5^3 = 4 \times 125 = 500$

$\therefore 2^n$ ஆனது இரட்டைப்படை எண் ஆகும்.

5ன் பெருக்கற்பலன் 0 ல் முடிகிறது.

$2^n \times 5^m$ல் 5 ல் முடியும்படி $m$ க்கு எந்த **மதிப்பும் இல்லை.**

**3. 252525 மற்றும் 363636 என்ற எண்களின் மீ.பொ.வ காண்க.** (2M)

252525 ன் காரணிகள்

$= 5 \times 5 \times 10101$

| | |
|---|---|
| 5 | 252525 |
| 5 | 50505 |
| | 10101 |

363636 ன் காரணிகள்

$= 2 \times 2 \times 3 \times 3 \times 10101$

| | |
|---|---|
| 2 | 363636 |
| 2 | 181818 |
| 3 | 90909 |
| 3 | 30303 |
| | 10101 |

∴ 252525 மற்றும் 363636 ஆகியவற்றின் **மீ.பொ.வ 10101**

**4. $13824 = 2^a \times 3^b$ எனில், $a$ மற்றும் $b$ –யின் மதிப்புக் காண்க.** MAY-22 (2M)

$13824 = 2^a \times 3^b$

13824 ஐ காரணிப்படுத்த,

$13824 = 2^9 \times 3^3$

எனவே, $2^a \times 3^b = 2^9 \times 3^3$

∴ $a = 9$ மற்றும் $b = 3$

| | |
|---|---|
| 3 | 13824 |
| 3 | 4608 |
| 3 | 1536 |
| 2 | 512 |
| 2 | 256 |
| 2 | 128 |
| 2 | 64 |
| 2 | 32 |
| 2 | 16 |
| 2 | 8 |
| 2 | 4 |
| | 2 |

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

எ.கா.2.10: $a^b \times b^a = 800$ என்றவாறு அமையும் இரு மிகை முழுக்கள் '$a$' மற்றும் '$b$' ஐ காண்க.

CQ: $p^2 \times q^1 \times r^4 \times s^3 = 3{,}15{,}000$ என்றவாறு அமையும் எனில் p, q, r & s ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க. (APR-23)

**6. அடிப்படை எண்ணியல் தேற்றத்தைப் பயன்படுத்தி 408 மற்றும் 170 என்ற எண்களின் மீ.பொ.ம மற்றும் மீ.பொ.வ காண்க.** (2M)

408 மற்றும் 170 ஆகிய எண்களை காரணிப்படுத்த,

$408 = 2 \times 2 \times 2 \times 3 \times 17 = 2^3 \times 3 \times 17$ மற்றும்

$170 = 2 \times 5 \times 17$

| | |
|---|---|
| 2 | 408 |
| 2 | 204 |
| 2 | 102 |
| 3 | 51 |
| | 17 |

408 மற்றும் 170 ஆகியவற்றின் மீ.பொ.ம $= 2^3 \times 3 \times 5 \times 17 = 8 \times 15 \times 17 = \mathbf{2040}$

408 மற்றும் 170 ஆகியவற்றின் மீ.பொ.வ $= 2 \times 17$

$= \mathbf{34}$

| | |
|---|---|
| 2 | 170 |
| 5 | 85 |
| | 17 |

**7. 24, 15, 36 ஆகிய எண்களால் மீதியின்றி வகுபடும் மிகப்பெரிய ஆறிலக்க எண்ணைக் காண்க.** (2M)

$3 \times 2 \times 2 \times 2 \times 5 \times 3 = 360$

24, 15, 36 ஆகியவற்றின் மீ.பொ.ம 360.

அந்த எண் 360 ஆல் வகுபடும்.

மிகப்பெரிய 6 இலக்க எண் 999999

$= 999999 - 279$

$= \mathbf{999720}$

| | |
|---|---|
| 3 | 24, 15, 36 |
| 2 | 8, 5, 12 |
| 2 | 4, 5, 6 |
| | 2, 5, 3 |

```
        2777
360 ) 999999
      720
      2799
      2520
       2799
       2520
        2799
        2520
         279
```

**8. 35, 56 மற்றும் 91 ஆல் வகுக்கும் போது மீதி 7 ஐத் தரக்கூடிய மிகச்சிறிய எண் எது?** (2M)

35, 56 மற்றும் 91 ஆகியவற்றின்

மீ.பொ.ம $= 3640$

யூக்ளிட் வகுத்தல் துணைத்தேற்றத்தின் படி,

$a = bq + r, \quad 0 \le r < b$

$n = 35q_1 + 7$

$n = 56q_2 + 7$

$n = 91q_3 + 7$

$n = 3640 + 7$

$= 3647$

| | |
|---|---|
| 7 | 35, 56, 91 |
| | 5, 8 ,13 |

$7 \times 5 \times 8 \times 13 = 3640$

∴ தேவையான, மிகச்சிறிய எண் **3647.**

**9. முதல் 10 இயல் எண்களால் மீதியின்றி வகுபடக்கூடிய சிறிய எண் எது?** (2M) JUN-23, JUL-22

முதல் 10 இயல் எண்கள்

1,2,3,4,5,6,7,8,9,10.

1,2,3,4,5,6,7,8,9 மற்றும் 10 ஆகியவற்றின்

மீ.பொ.ம $= 1 \times 2^3 \times 3^2$

$= 8 \times 9 \times 35$

$= 2520$

∴ முதல் 10 இயல் எண்களால் மீதியின்றி வகுபடக்கூடிய சிறிய எண் **2520.**

**பயிற்சிக்காக:**

5. $p_1^{x_1} \times p_2^{x_2} \times p_3^{x_3} \times p_4^{x_4} = 113400$ இங்கு, $p_1, p_2, p_3, p_4$ என்பன ஏறு வரிசையில் அமைந்த பகா எண்கள் மற்றும் $x_1, x_2, x_3, x_4$ என்பன முழுக்கள் எனில், $p_1, p_2, p_3, p_4$ மற்றும் $x_1, x_2, x_3, x_4$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க. **(2M)**

**எ.கா.2.7:** கொடுக்கப்பட்ட காரணி பிரித்தலில், $m$ மற்றும் $n$ என்ற எண்களைக் காண்க. **(2M)**




**எ.கா.2.9:** $7 \times 5 \times 3 \times 2 + 3$ என்பது ஒரு பகு எண்ணா? உனது விடையை நியாயப்படுத்துக. **(PTA-3) (2M)**

## பயிற்சி 2.3

**1. பின்வரும் சமன்பாடுகளை நிறைவு செய்யக்கூடிய குறைந்தபட்ச மிகை முழு $x$ –ன் மதிப்பைக் காண்க.**

**(i) $71 \equiv x$ (மட்டு 8)** (2M)

கொடுக்கப்பட்டது: $71 \equiv x$(மட்டு 8)

$71 - x = 8k$, $k$ –ஒரு முழு

$71 - x$ ஆனது 8 இன் மடங்காகும்.

**குறைந்தபட்ச மிகை முழு $x = 7$**

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும்.

1. பின்வரும் சமன்பாடுகளை நிறைவு செய்யக்கூடிய குறைந்தபட்ச மிகை முழு $x$-ன் மதிப்பைக் காண்க. (2M)
(ii) $78 + x \equiv 3$ (மட்டு 5) (iii) $89 \equiv (x+3)$(மட்டு 4)
(iv) $96 \equiv \frac{x}{7}$ (மட்டு 5) (v) $5x \equiv 4$ (மட்டு 6)

**எ.கா.2.12:** $15 \equiv 3$(மட்டு $d$) என்றவாறு அமையும் $d$-யின் மதிப்பைத் தீர்மானிக்க.

**எ.கா.2.13:** பின்வருவனவற்றிற்குப் பொருந்தக்கூடிய குறைந்தபட்ச மிகை $x$-ஐக் காண்க. (i) $67 + x \equiv 1$(மட்டு 4)
(ii) $98 \equiv (x+4)$(மட்டு 5)

**2. $x$ ஆனது மட்டு 17 –யின் கீழ் 13 உடன் ஒருங்கிசைவாக உள்ளது எனில், $7x - 3$ ஆனது எந்த எண்ணுடன் ஒருங்கிசைவாக இருக்கும்?** PTA-2 (2M)

[$a \equiv b$(மட்டு $m$) எனில் $a \times c \equiv b \times c$ (மட்டு $m$)]

கொடுக்கப்பட்டது: $x \equiv 13$ (மட்டு17)

7 ஆல் பெருக்க $7x \equiv 91$ (மட்டு17)

$7x - 3 \equiv 91 - 3$ (மட்டு17)

$7x - 3 \equiv 88$(மட்டு 17)

$7x - 3 \equiv 3$ (மட்டு 17) [$\because 88 \equiv 3$ (மட்டு 17)]

$\therefore 7x - 3$ ஆனது **3 உடன்** ஒருங்கிசைவாக இருக்கும்.

| | 5 |
|---|---|
| 17 | 88 |
| | 85 |
| | 3 |

**3. தீர்க்க: $5x \equiv 4$ (மட்டு 6)** (2M)

கொடுக்கப்பட்டது: $5x \equiv 4$ (மட்டு 6)

$5x - 4 = 6k$, $k$ ஒரு முழு

$5x = 6k + 4$

$x = \frac{6k+4}{5}$

$6k + 4$ ஆனது 5 ஆல் வகுபடும்.

$k = 1, 6, 11, 16 \ldots$

$k = 1 \Rightarrow x = \frac{6(1)+4}{5} = \frac{6+4}{5} = \frac{10}{5} = 2$

$k = 6 \Rightarrow x = \frac{6(6)+4}{5} = \frac{36+4}{5} = \frac{40}{5} = 8$

$k = 11 \Rightarrow x = \frac{6(11)+4}{5} = \frac{66+4}{5} = \frac{70}{5} = 14$

$\therefore \boldsymbol{x = 2, 8, 14 \ldots}$

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

4. தீர்க்க: $3x - 2 \equiv 0$ (மட்டு 11)

**எ.கா.2.14:** தீர்க்க $8x \equiv 1$ (மட்டு 11)

**எ.கா.2.15:** $10^4 \equiv x$ (மட்டு 19) என்றவாறு அமையும் $x$-மதிப்பைக் கணக்கிடுக. **(MDL)**

**எ.கா.2.16:** $3x \equiv 1$ (மட்டு 15) என்ற சமன்பாட்டிற்கு எத்தனை முழு எண் தீர்வுகள் உள்ளன எனக் காண்க. **(SEP-21)**

**5. முற்பகல் 7 மணிக்கு 100 மணி நேரத்திற்குப் பிறகு நேரம் என்ன?** (2M)

தொடங்கும் நேரம் முற்பகல் 7 மணி, அதன் பின் 100 மணி நேரத்திற்கு பிறகு நேரம் காண வேண்டும். மட்டு 24ஐ பயன்படுத்த

$$100 + 7 \text{ (மட்டு 24)} = 107 \text{ (மட்டு 24)}$$

$$= 11 \text{ (மட்டு24)}$$

24 | 107 → 4; 96; 11

∴ முற்பகல் 7 மணிக்கு 100 மணி நேரத்திற்குப் பிறகு **முற்பகல் 11 மணி.**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

6. பிற்பகல் 11 மணிக்கு 15 மணி நேரத்திற்கு முன்பு நேரம் என்ன?

10. பிரிட்டிஷ் ஏர்லைன்ஸ் விமானத்தில் சென்னையிலிருந்து லண்டன் செல்லப் பயணநேரம் தோராயமாக 11 மணிநேரம். விமானம் தனது பயணத்தை ஞாயிற்றுக்கிழமை 23:30 மணிக்குத் தொடங்கியது. சென்னையின் திட்ட நேரமானது லண்டனின் திட்ட நேரத்தைவிட 4.30 மணி நேரம் முன்னதாக இருக்குமெனில், விமானம் லண்டனில் தரையிறங்கும் நேரத்தைக் காண்க.

**7. இன்று செவ்வாய் கிழமை, என்னுடைய மாமா 45 நாட்களுக்குப் பிறகு வருவதாகக் கூறியுள்ளார். என்னுடைய மாமா எந்தக் கிழமையில் வருவார்?** (2M)

0,1,2,3,4,5 மற்றும் 6 என்பன முறையே ஞாயிறு முதல் சனி வரை உள்ள கிழமைகளைக் குறிப்பதாக கொள்வோம்.

இன்று செவ்வாய் கிழமை, என்னுடைய மாமா 45 நாட்களுக்குப் பிறகு வருவார்.

$$2 + 45 \text{ (மட்டு 7)} = 47 \text{(மட்டு 7)}$$

$$= 5 \text{ (மட்டு 7)} (\because 47 \equiv 5 \text{ மட்டு 7})$$

7 | 47 → 6; 42; 5

∴ என்னுடைய மாமா **வெள்ளிக் கிழமையில்** வருவார்.

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

**எ.கா.2.17:** ஒருவர் சென்னையிலிருந்து டெல்லிக்குச் செல்ல இரயிலில் புறப்படுகிறார். அவர் தனது பயணத்தைப் புதன்கிழமை 22.30 மணிக்குத் தொடங்குகிறார். எந்தவிதத் தாமதமுமின்றி இரயில் செல்வதாகக் கொண்டால் மொத்த பயண நேரம் 32 மணி நேரம் ஆகும். அவர் எப்பொழுது டெல்லியைச் சென்றடைவார்?

**எ.கா.2.18:** கலா மற்றும் வாணி இருவரும் நண்பர்கள். "இன்று எனது பிறந்தநாள்" எனக் கலா கூறினாள். வாணியிடம், "உனது பிறந்தநாளை எப்போது நீ கொண்டாடினாய்?" எனக் கேட்டாள். அதற்கு வாணி "இன்று திங்கள்கிழமை, நான் என்னுடைய பிறந்த நாளை 75 நாட்களுக்கு முன் கொண்டாடினேன்" எனப் பதிலளித்தாள். வாணியின் பிறந்தநாள் எந்தக் கிழமையில் வந்திருக்கும் எனக் காண்க.

**9. $2^{81}$ ஐ 17 ஆல் வகுக்கும் போது கிடைக்கும் மீதி காண்க.** (2M)

$$512 \equiv 2 \text{ (மட்டு 17)}$$

$$2^9 \equiv 2 \text{ (மட்டு 17)}$$

$$(2^9)^9 \equiv 2^9 \text{ (மட்டு17)}$$

$$2^{81} \equiv 512 \text{(மட்டு17)} [\because 512 = 2 \text{(மட்டு17)}]$$

17 | 512 → 30; 510; 2

$$2^{81} \equiv 2 \text{ (மட்டு17)}$$

$\therefore 2^{81} - 2 = 17k$, $k$ ஒரு முழு

$$2^{81} = 17k + 2.$$

யூக்ளிட் வகுத்தல் துணைத்தேற்றத்தின் படி, $a = bq + r, 0 \le r < b$. ∴ எனவே **மீதி 2.**

**பயிற்சிக்காக:**

8. எந்த ஒரு மிகை முழு எண் $n$–ற்கும் $2^n + 6 \times 9^n$ ஆனது 7 ஆல் வகுபடும் என நிறுவுக. **(5M)**

**எ.கா.2.11:** 70004 மற்றும் 778 ஆகிய எண்களை 7 ஆல் வகுக்க கிடைக்கும் மீதியைக் காண்க. **(2M)**

## பயிற்சி 2.4

**1. பின்வரும் தொடர்வரிசைகளின் அடுத்த மூன்று உறுப்புகளைக் காண்க. (i) $8, 24, 72, \ldots$** (2M)

மேற்கண்ட தொடர்வரிசையில், ஒவ்வொரு உறுப்பையும் 3ஆல் பெருக்க

$8 \times 3 = 24$ ,

$24 \times 3 = 72$ ,

$72 \times 3 = 216$

$216 \times 3 = 648$

$648 \times 3 = 1944$

∴ அடுத்த மூன்று உறுப்புகள்

**$216, 648, 1944$.**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

1. பின்வரும் தொடர்வரிசைகளின் அடுத்த மூன்று உறுப்புகளைக் காண்க.
(ii) $5, 1, -3, \ldots$ (iii) $\frac{1}{4}, \frac{2}{9}, \frac{3}{16}, \ldots$

**எ.கா.2.19:** பின்வரும் தொடர்வரிசைகளின் அடுத்த மூன்று உறுப்புகளைக் காண்க. (i) $\frac{1}{2}, \frac{1}{6}, \frac{1}{10}, \frac{1}{14}, \ldots$
(ii) $5, 2, -1, -4, \ldots$ (iii) $1, 0.1, 0.01, \ldots$

2. பின்வரும் $n$ –வது உறுப்புகளைக் கொண்ட தொடர்வரிசைகளின் முதல் நான்கு உறுப்புகளைக் காண்க.

**(i) $a_n = n^3 - 2$** (2M)

(i) $a_n = n^3 - 2$

$n = 1 \Rightarrow a_1 = (1)^3 - 2 = 1 - 2 = -1$

$n = 2 \Rightarrow a_2 = 2^3 - 2 = 8 - 2 = 6$

$n = 3 \Rightarrow a_3 = 3^3 - 2 = 27 - 2 = 25$

$n = 4 \Rightarrow a_4 = 4^3 - 2 = 64 - 2 = 62.$

∴ முதல் நான்கு உறுப்புகள்: **$-1, 6, 25, 62.$**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

2. பின்வரும் $n$-வது உறுப்புகளைக் கொண்ட தொடர்வரிசைகளின் முதல் நான்கு உறுப்புகளைக் காண்க.
(ii) $a_n = (-1)^{n+1}\, n(n+1)$ (iii) $a_n = 2n^2 - 6$

6. $a_1 = 1, a_2 = 1$ மற்றும் $a_n = 2a_{n-1} + a_{n-2},\ n \geq 3, n \in N$, எனில், தொடர்வரிசையின் முதல் ஆறு உறுப்புகளைக் காண்க.

**எ.கா.2.22:** பின்வரும் தொடர்வரிசையின் முதல் ஐந்து உறுப்புகளைக் காண்க.
$a_1 = 1,\ a_2 = 1,\ a_n = \frac{a_{n-1}}{a_{n-2}+3};\ n \geq 3, n \in N$

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்வரிசைகளின் $n$-வது உறுப்பைக் காண்க. (2M)

**(i) $2, 5, 10, 17, \ldots$**

$1^2 + 1 = 2$

$2^2 + 1 = 5$

$3^2 + 1 = 10$

$4^2 + 1 = 17$

$\vdots$

$n^2 + 1 = a_n$

∴ $n$ –வது உறுப்பு **$n^2 + 1$**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்வரிசைகளின் $n$ –வது உறுப்பைக் காண்க. (ii) $0, \frac{1}{2}, \frac{2}{3}, \ldots$ (iii) $3, 8, 13, 18, \ldots$

**எ.கா.2.20:** பின்வரும் தொடர்வரிசைகளின் பொது உறுப்பு காண்க.
(i) 3, 6, 9,..... (ii) $\frac{1}{2}, \frac{2}{3}, \frac{3}{4}$,..... (iii) $5, -25, 125$,.....

5. $a_n = \begin{cases} \frac{n^2-1}{n+3}; & \text{ஓர் இரட்டை எண் } n \in N \\ \frac{n^2}{2n+1}; & \text{ஓர் ஒற்றை எண் } n \in N \end{cases}$ என்பது $n$-வது உறுப்பு எனில், $a_8$ மற்றும் $a_{15}$ காண்க. (2M)

$n = 8$ (இரட்டை)

$a_n = \frac{n^2-1}{n+3}$

$a_8 = \frac{8^2-1}{8+3} = \frac{64-1}{11} = \frac{63}{11}$

$n = 15,$ (ஒற்றை)

$a_n = \frac{n^2}{2n+1};$

$a_{15} = \frac{(15)^2}{2(15)+1}$

$= \frac{225}{30+1} = \frac{225}{31}$

∴ $a_8 = \frac{63}{11},\ a_{15} = \frac{225}{31}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

4. கீழ்க்கண்ட தொடர்வரிசைகள் ஒவ்வொன்றிலும் $n$ –வது உறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புகளைக் காண்க
(i) $a_n = \frac{5n}{n+2}$; $a_6$ மற்றும் $a_{13}$ (ii) $a_n = -(n^2 - 4)$; $a_4$ மற்றும் $a_{11}$

**எ.கா.2.21:** ஒரு தொடர்வரிசையின் பொது உறுப்பு பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது.
$a_n = \begin{cases} n(n+3); n \in N & \text{ஓர் ஒற்றை எண்} \\ n^2 + 1\ ; n \in N & \text{ஓர் இரட்டை எண்} \end{cases}$ 11-வது உறுப்பு மற்றும் 18-வது உறுப்புக் காண்க.

**CQ:** 1. ஒரு தொடர் வரிசையின் பொது உறுப்பு $a_n = \begin{cases} n^2; & n \text{ ஒரு ஒற்றை எண்} \\ \frac{n^2}{2}; & n \text{ ஒரு இரட்டை எண்} \end{cases}$ எனில் 3-வது மற்றும் 4 -வது உறுப்புகளைக் காண்க. **(SEP-20)**

## பயிற்சி 2.5

1. பின்வரும் தொடர் வரிசைகள் ஒரு கூட்டுத் தொடர்வரிசையா எனச் சோதிக்கவும். (2M)

(i) $a - 3, a - 5, a - 7, \ldots$

$d = t_2 - t_1$

$= a - 5 - (a - 3)$

$= \cancel{a} - 5 - \cancel{a} + 3 = -2$......... (1)

$d = t_3 - t_2$

$= a - 7 - (a - 5)$

$= \cancel{a} - 7 + 5 - \cancel{a} = -2$ .........(2)

(1) மற்றும்(2) லிருந்து, $t_2 - t_1 = t_3 - t_2$

∴ கொடுக்கப்பட்ட தொடர்வரிசை ஒரு **கூட்டுத்தொடர் வரிசையாகும்.**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

1. பின்வரும் தொடர் வரிசைகள் ஒரு கூட்டுத் தொடர்வரிசையா எனச் சோதிக்கவும்.
(ii) $\frac{1}{2}, \frac{1}{3}, \frac{1}{4}, \frac{1}{5}, \ldots$ (iii) $9, 13, 17, 21, 25, \ldots$
(iv) $\frac{-1}{3}, 0, \frac{1}{3}, \frac{2}{3}, \ldots$ (v) $1, -1, 1, -1, 1, -1, \ldots$

**எ.கா.2.23:** பின்வரும் தொடர்வரிசைகள் கூட்டுத்தொடர் வரிசையா, இல்லையா எனச் சோதிக்க. (i) $x + 2,\ 2x + 3,\ 3x + 4$,....
(ii) 2, 4, 8, 16,.... (iii) $3\sqrt{2},\ 5\sqrt{2},\ 7\sqrt{2},\ 9\sqrt{2}$,....

**2. கீழே கொடுக்கப்பட்டுள்ள முதல் உறுப்பு $a$ & பொது வித்தியாசம் $d$-க்குக் கூட்டுத்தொடர்வரிசைகளைக் காண்க.**

(i) $a = 5, d = 6$

2M

கூட்டுத்தொடர் வரிசையின் பொது வடிவம்

$a, a+d, a+2d, a+3d, \ldots$

$5, (5+6), (5+(2\times 6)), 5+3(6), \ldots$

$5, 11, 5+12, 5+18, \ldots$

$\mathbf{5, 11, 17, 23}, \ldots$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

2M

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள முதல் உறுப்பு $a$ மற்றும் பொது வித்தியாசம் $d$ –க்குக் கூட்டுத் தொடர்வரிசைகளைக் காண்க. (ii) $a = 7, d = -5$ (iii) $a = \frac{3}{4}, d = \frac{1}{2}$

**எ.கா.2.24:** முதல் உறுப்பு 20 ஆகவும் பொது வித்தியாசம் 8 ஆகவும் கொண்ட கூட்டுத் தொடர்வரிசையை எழுதவும்.

**3. கீழே கொடுக்கப்பட்டுள்ள பொது உறுப்புகளையுடைய கூட்டுத் தொடர்வரிசைகளின் முதல் உறுப்பு மற்றும் பொது வித்தியாசம் காண்க. (i) $t_n = -3 + 2n$**

2M

கொடுக்கப்பட்டது $t_n = -3 + 2n$

முதல் உறுப்பு $a = t_1$

$= -3 + 2(1)$

$= -3 + 2$

$\mathbf{a = -1}$

$n = 2 \Rightarrow t_2 = -3 + 2(2)$

$= -3 + 4$

$t_2 = 1$

பொது வித்தியாசம்

$d = t_2 - t_1$

$= 1 - (-1)$

$= 1 + 1$

$\mathbf{d = 2}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

2M

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள பொது உறுப்புகளையுடைய கூட்டுத் தொடர்வரிசைகளின் முதல் உறுப்பு மற்றும் பொது வித்தியாசம் காண்க. (ii) $t_n = 4 - 7n$

**CQ:** ஒரு கூட்டுத் தொடர் வரிசையில் $t_{18} - t_{14} = 32$ எனில் அதன் பொது வித்தியாசத்தைக் காண்க. **(PTA-6)**

**4. $-11, -15, -19, \ldots$ என்ற கூட்டுத் தொடர் வரிசையின் 19-வது உறுப்பைக் காண்க.** MDL, JUL-22

2M

கொடுக்கப்பட்ட கூட்டுத்தொடர் வரிசை $-11, -15, -19, \ldots$

$a = -11,$

$d = t_2 - t_1$

$= -15 + 11$

$d = -4$

$n$ ஆவது உறுப்பு $t_n = a + (n-1)d$

$n = 19$

$\Rightarrow t_{19} = -11 + (19-1)(-4)$

$= -11 + 18(-4)$

$= -11 - 72$

$t_{19} = -83$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

5M

**எ.கா.2.25:** $3, 15, 27, 39, \ldots\ldots$ என்ற தொடர்வரிசையின் 15-வது, 24-வது மற்றும் $n$-வது உறுப்பு (பொது உறுப்பு) காண்க.

**எ.கா.2.27:** ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் 7-வது உறுப்பு $-1$ மற்றும் 16-வது உறுப்பு 17 எனில், அதன் பொது உறுப்பைக் காண்க.

**அலகுப் பயிற்சி:. 6.** $-2, -4, -6, \ldots . -100$ என்ற கூட்டுத் தொடர்வரிசையில் இறுதி உறுப்பிலிருந்து 12வது உறுப்பைக் காண்க.

**5. $16, 11, 6, 1, \ldots$ என்ற கூட்டுத் தொடர்வரிசையில் $-54$ என்பது எத்தனையாவது உறுப்பு?** MAY-22

2M

கொடுக்கப்பட்ட கூட்டுத்தொடர்வரிசை $16, 11, 6, 1, \ldots$

$t_n = -54$ ,

$a = 16,$

$d = t_2 - t_1 = 11 - 16 = -5$

$n = \left(\frac{l-a}{d}\right) + 1$

$= \left(\frac{-54-16}{-5}\right) + 1$

$= \left(\frac{-70}{-5}\right) + 1$

$n = 14 + 1 = 15$

$\therefore \mathbf{t_{15} = -54}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

2M

**எ.கா.2.26:** $3, 6, 9, 12, \ldots\ldots 111$ என்ற கூட்டுத் தொடர்வரிசையில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கையைக் காண்க. **(SEP-21)**

**CQ:** $21, 18, 15, \ldots$ என்ற கூட்டுத்தொடர் வரிசையில் $-81$ எத்தனையாவது உறுப்பு? மேலும் இக்கூட்டுத்தொடர் வரிசையில் 0 ஓர் உறுப்பாகுமா என்பதை காரணத்துடன் விளக்குக. **(PTA-5)**

**6. $9, 15, 21, 27, \ldots, 183$ என்ற கூட்டுத் தொடர்வரிசையின் நடு உறுப்புகளைக் காண்க.**

PTA-1 2M

$9,15,21,27, \ldots 183.$

$a = 9, \quad d = t_2 - t_1 = 15 - 9$

$l = 183, \quad d = 6$

கூட்டுத்தொடர் வரிசையில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை.

$n = \frac{l-a}{d} + 1 = \frac{183-9}{6} + 1 = \frac{174}{6} + 1$

$= 29 + 1 = 30$

$n = 30$ ஒரு இரட்டை எண்,

நடு உறுப்பு $= \frac{n}{2}$ஆவது உறுப்பு மற்றும் $\left(\frac{n}{2} + 1\right)$ஆவது உறுப்பு

$= \frac{30}{2}$ ஆவது உறுப்பு $\frac{30}{2} + 1$ ஆவது உறுப்பு

$= 15$ ஆவது உறுப்பு $+$ 16 ஆவது உறுப்பு

$t_n = a + (n-1)d$

$n = 15 \Rightarrow$

$t_{15} = 9 + (15-1)(6) = 9 + (14)(6) = 93$

$n = 16 \Rightarrow$

$t_{16} = 9 + (16-1)(6) = 9 + (15)(6) = 99$

∴ நடு உறுப்புகளாவன $\boldsymbol{t_{15} = 93,\ t_{16} = 99}$

**7. ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் ஒன்பதாவது உறுப்பின் ஒன்பது மடங்கும், பதினைந்தாவது உறுப்பின் பதினைந்து மடங்கும் சமம் எனில் இருபத்து நான்காவது உறுப்பின் ஆறு மடங்கானது பூச்சியம் என நிறுவுக.**

5M JUL-22

$9t_9 = 15t_{15} \quad (\because t_n = a + (n-1)d)$

$9[a + (9-1)]d = 15[a + (15-1)d]$

$9(a + 8d) = 15(a + 14d)$

$9a + 72d = 15a + 210d$

$9a - 15a + 72d - 210d = 0$

$-6a - 138d = 0$

$-6(a + 23d) = 0$

$6[a + (24-1)d] = 0$

$6t_{24} = 0$

∴ நிறுவப்பட்டது.

**8. $3 + k, 18 - k, 5k + 1$ என்பவை ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் உள்ளன எனில், $k$–யின் மதிப்புக் காண்க.**

SEP-21, PTA-3, 5 2M

$3 + k, 18 - k, 5k + 1$ என்பவை ஒரு கூட்டுத்தொடர்வரிசையில் உள்ளன.

ie, $d = t_2 - t_1 = t_3 - t_2$

$18 - k - (3 + k) = 5k + 1 - (18 - k)$

$18 - k - 3 - k = 5k + 1 - 18 + k$

$15 - 2k = 6k - 17$

$15 + 17 = 6k + 2k$

$32 = 8k$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

9. $x, 10, y, 24, z$ என்பவை ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் உள்ளன எனில், $x, y, z$ –ஆகியவற்றின் மதிப்புக் காண்க. 2M

**10. ஒரு சினிமா அரங்கின் முதல் வரிசையில் 20 இருக்கைகளும் மொத்தம் 30 வரிசைகளும் உள்ளன. அடுத்தடுத்த ஒவ்வொரு வரிசையிலும் அதற்கு முந்தைய வரிசையைவிட இரண்டு இருக்கைகள் கூடுதலாக உள்ளன. கடைசி வரிசையில் எத்தனை இருக்கைகள் இருக்கும்?**

2M PTA-4

சினிமா அரங்கில் மொத்தம் 30 வரிசைகள் உள்ளன. $n = 30$.

முதல் வரிசையில் 20 இருக்கைகள் உள்ளன. $a = 20$

ஒவ்வொரு வரிசையிலும் 2 இருக்கைகள் அதிகப்படுத்தப்படுகின்றன. 1,2,3,… வரிசைகள் முறையே $20, 22, 24, \ldots$ ஆகும்.

இது ஒரு கூட்டுத்தொடர் வரிசையை அமைக்கிறது.

$d = t_2 - t_1 = 22 - 20 = 2$

$t_{30}$ ஐக் காண வேண்டும்.

$t_n = a + (n-1)d$

$t_{30} = 20 + (30-1)2$

$= 20 + (29)(2)$

$= 20 + 58$

$t_{30} = 78$

**78** இருக்கைகள் கடைசி வரிசையில் அமையும்.

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

அலகுப் பயிற்சி: 5M

5. ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் $(m+1)^{th}$ வது உறுப்பானது $(n+1)^{th}$ வது உறுப்பின் இரு மடங்கு எனில், $(3m+1)^{th}$ வது உறுப்பானது $(m+n+1)^{th}$ வது உறுப்பின் இரு மடங்கு என நிறுவுக.

7. இரண்டு கூட்டுத் தொடர்வரிசைகள் ஒரே பொதுவித்தியாசம் கொண்டுள்ளன. ஒரு தொடர் வரிசையின் முதல் உறுப்பு 2 மற்றும் மற்றொரு தொடர்வரிசையின் முதல் உறுப்பு 7. இரு தொடர்வரிசைகளின் 10வது உறுப்புளுக்கிடையே உள்ள வித்தியாசம், 21-வது உறுப்புகளுக்கிடையே உள்ள வித்தியாசத்திற்குச் சமம் என நிரூபித்து உள்ளது. இந்த வித்தியாசம் அந்தக் கூட்டுத் தொடர்வரிசைகளின் பொது வித்தியாசத்திற்குச் சமமாக உள்ளது என நிறுவுக.

**11.ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் அமைந்த அடுத்தடுத்த மூன்று உறுப்புகளின் கூடுதல் 27 மற்றும் அவற்றின் பெருக்கற்பலன் 288 எனில், அந்த மூன்று உறுப்புகளைக் காண்க.** SEP-21

5M

அடுத்தடுத்த மூன்று உறுப்புகள்

$a-d, a,\ a+d$

கூடுதல்: $a-d+a+a+d=27$

$3a\ =27 \Rightarrow a=9$

பெருக்கற்பலன், $(a-d)(a)(a+d)=288$

$(a^2-d^2)a=288$

$(9^2-d^2)=\frac{288}{9}$

$81-d^2=32$

$-d^2=32-81$

$-d^2=-49$

$d=\pm 7$

$a=9, d=7$ எனில் கூட்டுத்தொடர் வரிசை

$9-7,\ 9,\ \ 9+7\ \Rightarrow\ \mathbf{2},\ \ \mathbf{9},\ \ \mathbf{16}$

$a=9,\ d=\ -7$ எனில் கூட்டுத்தொடர் வரிசை

$9+7,\ 9,\ 9-7\ \ \Rightarrow\ \ \mathbf{16},\ \ \mathbf{9},\ \ \mathbf{2}.$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.2.29:** ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் அடுத்தடுத்த நான்கு உறுப்புகளின் கூடுதல் 28 மற்றும் அவற்றின் வர்க்கங்களின் கூடுதல் 276. அந்த நான்கு எண்களைக் காண்க. 5M

**12. ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் 6-வது மற்றும் 8-வது உறுப்புகளின் விகிதம் 7:9 எனில், 9-வது மற்றும் 13-வது உறுப்புகளின் விகிதம் காண்க.**

$t_6 : t_8 = 7:9 \Rightarrow \frac{t_6}{t_8}=\frac{7}{9}$ 5M MDL, MAY-22

$\frac{a+(6-1)d}{a+(8-1)d}=\frac{7}{9}$ $\quad [\because t_n=a+(n-1)d]$

$9(a+5d)=7(a+7d)$

$9a+45d=7a+49d$

$9a-7a=49d-45d$

$2a=4d$

$a=2d$ ..............(1)

$t_9 : t_{13}=\frac{t_9}{t_{13}} \Rightarrow \frac{a+(9-1)d}{a+(13-1)d}=\frac{a+8d}{a+12d}$

$=\frac{2d+8d}{2d+12d}$ ($a=2d$ என பிரதியிட)

$=\frac{10d}{14d}=\frac{5}{7}$

$\therefore\ \ \boldsymbol{t_9 : t_{13} = 5:7}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.2.28:** ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் $l, m$ மற்றும் $n$-ஆவது உறுப்புகள் முறையே $x, y$ மற்றும் $z$ எனில், பின்வருவனவற்றை நிரூபிக்க. 5M

(i) $x(m-n)+y(n-l)+z(l-m)=0$

(ii) $(x-y)n+(y-z)l+(z-x)m=0$ **(MAY-22)**

**CQ:** ஒரு கூட்டுத் தொடர் வரிசையில் முதல் $p$ உறுப்புகளின் கூடுதல் $ap^2+bp$ எனில் அதன் பொது வித்தியாசத்தினைக் காண்க. **(PTA-6)**

**13.ஒரு குளிர்காலத்தில் திங்கள்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை ஊட்டியின் வெப்பநிலை கூட்டுத் தொடர்வரிசையில் உள்ளன. திங்கள் கிழமை முதல் புதன்கிழமை வரை உள்ள வெப்பநிலைகளின் கூடுதல் $\mathbf{0°C}$ மற்றும் புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை உள்ள வெப்பநிலைகளின் கூடுதல் $\mathbf{18°C}$ எனில், ஐந்து நாட்களின் வெப்பநிலைகளைக் காண்க.**

$a, a+d, a+2d, a+3d, a+4d$ என்பன முறையே ஊட்டியில் திங்கள் முதல் வெள்ளி வரை நிலவும் வெப்பநிலை என்க. 5M

திங்கள் முதல் புதன் வரை வெப்பநிலைகளின் கூடுதல் $0°C$

$a+a+d+a+2d=0$

$3a+3d=0$

$a+d=0$

$a=-d$ ..................(1)

புதன் கிழமை முதல் வெள்ளி கிழமை வரை உள்ள வெப்பநிலைகளின் கூடுதல் $18°C$.

$a+2d+a+3d+a+4d=18$

$3a+9d=18$

$-3d+9d=18$

( $a=-d$ என பிரதியிட)

$6d=18$

$d=3$

$d=3$ என (1) ல் பிரதியிட, $a=-3$

ஒவ்வொரு நாளின் வெப்பநிலை

$a, a+d, a+2d, a+3d, a+4d$

$(-3), (-3+3), \big(-3+2(3)\big),$

$\big(-3+3(3)\big), \big(-3+3(4)\big)$

$-3, 0,\ -3+6,\ -3+9,\ -3+12,$

$= \mathbf{-3°C,\ 0°C,\ 3°C,\ 6°C,\ 9°C}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

14. பிரியா தனது முதல் மாத வருமானமாக ₹ 15,000 ஈட்டுகிறார். அதன் பிறகு ஒவ்வோர் ஆண்டும் அவரது மாத வருமானம் ₹ 1500 உயர்கிறது. அவளுடைய முதல் மாத செலவு ₹ 13,000 மற்றும் அவளது மாதாந்திரச் செலவு ஒவ்வோர் ஆண்டும் ₹ 900 உயர்கிறது. பிரியாவின் மாதாந்திரச் சேமிப்பு ₹ 20,000 அடைய எவ்வளவு காலம் ஆகும்? 5M

**எ.கா.2.30:** ஒரு தாய் தன்னிடம் உள்ள ₹ 207 ஐ கூட்டுத் தொடர் வரிசையில் அமையும் மூன்று பாகங்களாகப் பிரித்துத் தனது மூன்று குழந்தைகளுக்கும் கொடுக்க விரும்பினார். அவற்றில் இரு சிறிய தொகைகளின் பெருக்கற்பலன் ₹ 4623 ஆகும். ஒவ்வொரு குழந்தையும் பெறும் தொகையினைக் காண்க.

## பயிற்சி 2.6

**1. பின்வருவனவற்றின் கூடுதல் காண்க.**

5M

**(i) $3, 7, 11, \ldots 40$ உறுப்புகள் வரை**

$3,7,11,\ldots 40$ ஆகியன கூட்டுத்தொடர் வரிசையில் உள்ளன.

$a = 3, d = t_2 - t_1 = 7 - 3 = 4, n = 40$

$S_n = \frac{n}{2}[2a + (n-1)d]$

$S_{40} = \frac{40}{2}[2(3) + (40-1)4]$

$= 20[6 + 39(4)]$

$= 20(6 + 156) \quad = 20(162)$

$\boldsymbol{S_{40} = 3240}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

5M

1. பின்வருவனவற்றின் கூடுதல் காண்க.
   (ii) $102, 97, 92, \ldots 27$ உறுப்புகள் வரை

எ.கா.2.31: $8, 7\frac{1}{4}, 6\frac{1}{2}, 5\frac{3}{4}, \ldots\ldots$ என்ற கூட்டுத்தொடர் வரிசையின் முதல் 15 உறுப்புகளின் கூடுதல் காண்க.

**(iii) $6 + 13 + 20 + \cdots + 97$**

5M

$6 + 13 + 20 + \cdots + 97$ ஆகியன கூட்டுத்தொடர் வரிசையில் உள்ளன.

$a = 6,\ d = t_2 - t_1 = 13 - 6 = 7,\ l = 97$

$n = \frac{l-a}{d} + 1$

$n = \frac{97-6}{7} + 1 = \frac{91}{7} + 1 = 13 + 1 = 14$

$S_n = \frac{n}{2}[a + l]$

$S_{14} = \frac{14}{2}[6 + 97] \quad = 7[103]$

$\boldsymbol{S_{14} = 721}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

எ.கா.2.32: $0.40 + 0.43 + 0.46 + \ldots\ldots + 1$ என்ற தொடரின் கூடுதல் காண்க. 5M

**2. 5–லிருந்து தொடங்கி எத்தனை தொடர்ச்சியான ஒற்றை முழுக்களைக் கூட்டினால் கூடுதல் 480 கிடைக்கும்?**

5M

தேவையான கூட்டுத்தொடர் $5 + 7 + 9 + \cdots$

$a = 5,\ d = t_2 - t_1 = 7 - 5\ d = 2$

$S_n = 480$

$\frac{n}{2}[2a + (n-1)d] = 480$

$\frac{n}{2}[2(5) + (n-1)2] = 480$

$\frac{2n}{2}[5 + n - 1] = 480$

$n(4 + n) = 480$

$n^2 + 4n - 480 = 0$

$(n - 20)(n + 24) = 0$

$n - 20 = 0$ (அல்லது) $n + 24 = 0$

$n = 20$ (அல்லது) $n = -24,\ \ n = -24$ என்பது ஏற்புடையதல்ல, எனவே $n = 20$.

$\therefore$ **20 தொடர்ச்சியான ஒற்றை முழுக்களை கூட்டினால் கூடுதல் 480 கிடைக்கும்.**

$S_{20} = 480$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

2M

எ.கா.2.33: $1 + 5 + 9 + \ldots..$ என்ற தொடரில் எத்தனை உறுப்புகளைக் கூட்டினால் கூடுதல் 190 கிடைக்கும்?

**3. ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் $n$ –வது உறுப்பு $4n - 3$ எனில், அதன் முதல் 28 உறுப்புகளின் கூடுதல் காண்க.** 2M

$t_n = 4n - 3$

$n = 1 \Rightarrow t_1 = 4(1) - 3 = 4 - 30 \Rightarrow t_1 = a = 1$

$n = 2 \Rightarrow t_2 = 4(2) - 3 = 8 - 3 = 5$

$n = 3 \Rightarrow t_3 = 4(3) - 3 = 12 - 3 = 9$

A.P = 1, 5, 9, ...

$a = 1,\ \ d = t_2 - t_1 \Rightarrow 5 - 1 = 4$

$n = 28,\ \ S_n = \frac{n}{2}[2a + (n-1)d]$

$S_{28} = \frac{28}{2}[2(1) + (28-1)4]$

$= 14[2 + 27(4)] = 14[2 + 108]$

$= 14(110)$

$\boldsymbol{S_{28} = 1540}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

5M

4. ஒரு குறிப்பிட்ட தொடரின் முதல் '$n$' உறுப்புகளின் கூடுதல் $2n^2 - 3n$ எனில், அது ஒரு கூட்டுத் தொடர்வரிசை என நிரூபிக்க.

எ.கா.2.35: ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் முதல் $n$ உறுப்புகளின் கூடுதல் $\frac{5n^2}{2} + \frac{3n}{2}$ எனில், 17வது உறுப்பைக் காண்க. 2M

**5. ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் 104-வது உறுப்பு மற்றும் 4-வது உறுப்புகள் முறையே 125 & 0. அத்தொடர்வரிசையின் முதல் 35 உறுப்புகளின் கூடுதல் காண்க.** (5M)

$t_{104} = 125, \quad t_n = a + (n-1)d$

$t_4 = 0 \Rightarrow \; a + (4-1)d = 0$

$a + 3d = 0$

$a = -3d$ …….(1)

$t_{104} = 125 \Rightarrow a + (104-1)d = 125$

$a + 103d = 125$

$a = -3d$ என பிரதியிட,

$-3d + 103d = 125$

$100d = 125$

$d = \frac{125}{100}$

$d = \frac{5}{4}$

$a = \frac{5}{4}$ என (1) ல் பிரதியிட, $a = -3\left(\frac{5}{4}\right)$

தொடர்வரிசையின் முதல் 35 உறுப்புகளின் கூடுதல் காண வேண்டும், $n = 35.$

$S_n = \frac{n}{2}[2a + (n-1)d]$

$S_{35} = \frac{35}{2}\left[2\left(\frac{-15}{4}\right) + (35-1)\frac{5}{4}\right]$

$= \frac{35}{2}\left[\frac{-15}{2} + 34\left(\frac{5}{4}\right)\right] = \frac{35}{2}\left[\frac{-15+85}{2}\right]$

$= \frac{35}{2}\left(\frac{70}{2}\right) = \frac{1225}{2}$

$\boldsymbol{S_{35} = 612.5}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (5M)

**எ.கா.2.34:** ஒரு கூட்டுத்தொடர் வரிசையின் 13 -வது உறுப்பு 3 மற்றும் முதல் 13 உறுப்புகளின் கூடுதல் 234 எனில், கூட்டுத்தொடர் வரிசையின் பொது வித்தியாசம் மற்றும் முதல் 21 உறுப்புகளின் கூடுதல் காண்க.

**7. 602-க்கும் 902-க்கும் இடையே 4 ஆல் வகுபடாத இயல் எண்களின் கூடுதல் காண்க.** (5M)

602 க்கும் 902 க்கும் இடையே உள்ள வரிசை

$603 + 604 + 605 + \cdots + 901$

$a = 603, d = 1, l = 901$

$n = \frac{l-a}{d} + 1$

$= \frac{901-603}{1} + 1$

$= 298 + 1 = 299$

$S_n = \frac{n}{2}[a + l]$

$S_{299} = \frac{299}{2}(603 + 901)$

$= \frac{299}{2}(1504)$

$= 299(752) = 224848$

602-க்கும் 902-க்கும் இடையே 4 ஆல் வகுபடும் இயல் எண்களின் கூடுதல்

$604 + 608 + 612 + \cdots + 900$

$a = 604, d = 4, l = 900.$

$n = \frac{l-a}{d} + 1$

$= \frac{900-604}{4} + 1$

$= \frac{296}{4} + 1 = 74 + 1 = 75$

$S_n = \frac{n}{2}(a + l)$

$S_{75} = \frac{75}{2}(604 + 900)$

$= \frac{75}{2}(1504)$

$S_{75} = 56400$

4 ஆல் வகுபடாத இயல் எண்களின் கூடுதல்

$= S_{299} - S_{75}$

$= 224848 - 56400$

$= \mathbf{168448}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

6. 450-க்குக் குறைவாக உள்ள அனைத்து ஒற்றை மிகை முழுக்களின் கூடுதல் காண்க. (5M)

**எ.கா.2.36:** 300-க்கும் 600-க்கும் இடையே 7-ஆல் வகுபடும் அனைத்து இயல் எண்களின் கூடுதல் காண்க.

**CQ:** 100 -க்கும் 1000 -க்கும் இடையே 11 -ஆல் வகுபடும் அனைத்து இயல் எண்களின் கூடுதல் காண்க. **(SEP - 20)**

**CQ:** 9 ஆல் வகுபடும் அனைத்து மூன்றிலக்க இயல் எண்களின் கூடுதல் காண்க. **(PTA - 3)**

8. இரகு ஒரு மடிக்கணினி வாங்க விரும்புகிறார். அவர் அதற்கான தொகையான ₹ 40,000-ஐ உடனடியாக பணமாகவும் செலுத்தலாம் அல்லது 10 மாதத் தவணைகளில் முதல் தவணை ₹ 4800, இரண்டாம் தவணை ₹ 4750, மூன்றாம் தவணை ₹ 4700 என்ற அடிப்படையிலும் செலுத்தலாம். அவர் இந்த வகையில் பணம் செலுத்துகிறார் எனில், (i) 10 மாதத் தவணைகளில் அவர் செலுத்திய மொத்தத் தொகை (ii) மாதத் தவணை அடிப்படையில் பணம் செலுத்தும்போது அவர் அசலைக் காட்டிலும் கூடுதலாகச் செலுத்திய தொகை ஆகியவற்றைக் காண்க. 5M

மடிகணினியின் விலை **₹ 40000.**

இரகு செலுத்திய மாதத் தவணை முறையே **₹** 4800, **₹** 4750, **₹** 4700...

$4800 + 4750 + 4700 + \cdots$ ஒரு கூட்டுத்தொடர்

$a = 4800, d = t_2 - t_1 = 4750 - 4800$
$= -50$

(i) $n = 10$

$S_n = \frac{n}{2}[2a + (n-1)d]$

$S_{10} = \frac{10}{2}[2(4800) + (10-1)(-50)]$

$= \frac{10}{2} \times 2[4800 + (9)(-25)]$

$= 10[4800 - 225]$

$= 10[4575]$

$S_{10} = 45750.$

∴ 10 மாதத் தவணைகளில் அவர் செலுத்திய மொத்தத் தொகை **₹ 45750.**

(ii) அவர் அசலைக் காட்டிலும் கூடுதலாகச் செலுத்திய தொகை

$= 45750 - 40000 \; = \textbf{₹ 5750}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

அலகுப் பயிற்சி:. 5M

8. ஒரு நபர் 10 வருடங்களில் ₹16500 ஐ சேமிக்கிறார். ஒவ்வொரு வருடமும் அவர் சேமிக்கும் தொகையானது அதற்கு முந்தைய வருடம் சேமிக்கும் தொகையை விட ₹100 அதிகம். அவர் முதல் வருடம் எவ்வளவு சேமித்திருப்பார்?

11. $S_1, S_2, S_3, \ldots S_m$ என்பன $m$ வெவ்வேறு கூட்டுத் தொடர்வரிசைகளின் $n$ உறுப்புகளின் கூடுதலாகும். முதல் உறுப்புகள் $1, 2, 3, \ldots m$ மற்றும் பொது வித்தியாசங்கள் $1, 3, 5, \ldots, (2m-1)$ முறையே அமைந்தால், அந்த கூட்டுத் தொடர்வரிசையில் $S_1 + S_2 + S_3 + \cdots + S_m = \frac{1}{2}mn(mn+1)$ என நிரூபிக்க. 5M

$S_1 = 1 + 2 + 3 + \cdots + n, \; a = 1, \; d = 1$

$S_n = \frac{n}{2}[2a + (n-1)d]$

$S_1 = \frac{n}{2}[2(1) + (n-1)(1)] = \frac{n}{2}[2 + n - 1]$

$S_1 = \frac{n}{2}[n+1]$

$S_2 \Rightarrow a = 2, d = 3$

$S_2 = \frac{n}{2}[2(2) + (n-1)3] = \frac{n}{2}[4 + 3n - 3]$

$S_2 = \frac{n}{2}[3n+1]$

$S_3 \Rightarrow a = 3, d = 5$

$S_3 = \frac{n}{2}[2(3) + (n-1)5]$

$= \frac{n}{2}[6 + 5n - 5]$

$S_3 = \frac{n}{2}[5n+1]$

$S_1 + S_2 + S_3 + S_4 + \cdots + S_m$

$= \frac{n}{2}[n+1] + \frac{n}{2}[3n+1] + \frac{n}{2}[5n+1] + \cdots$

$+m$ உறுப்புகள் வரை

$t_2 - t_1 = \frac{n}{2}(3n+1) - \frac{n}{2}(n+1)$

$= \frac{n}{2}[3n + 1 - n - 1]$

$= \frac{n}{2}[2n] = n^2$

$t_3 - t_2 = \frac{n}{2}(5n+1) - \frac{n}{2}(3n+1)$

$= \frac{n}{2}[5n + 1 - 3n - 1]$

$= \frac{n}{2} \times 2n = n^2$

∴ இது ஒரு கூட்டுத்தொடரை அமைக்கும்.

$a = \frac{n}{2}(n+1), \; d = n^2$

$S_n = \frac{n}{2}[2a + (n-1)d]$

$S_m = \frac{m}{2}\left[2\left(\frac{n}{2}\right)(n+1) + (m-1)n^2\right]$

$= \frac{mn}{2}[n + 1 + (m-1)n]$

$= \frac{mn}{2}[n + 1 + mn - n]$

$= \frac{mn}{2}[mn+1]$

$\boldsymbol{S_m = \frac{1}{2}\, mn[mn+1]}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

5M

12. $\left[\frac{a-b}{a+b} + \frac{3a-2b}{a+b} + \frac{5a-3b}{a+b} + \cdots 12 \text{ உறுப்புகள்}\right]$ என்ற தொடரின் கூடுதல் காண்க.

**எ.கா.2.39:** $S_1$, $S_2$ மற்றும் $S_3$ என்பன முறையே ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் முதல் $n$, $2n$, $3n$ உறுப்புகளின் கூடுதல் ஆகும். $S_3 = 3(S_2 - S_1)$ என நிறுவுக. **(MDL)**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

5M

9. ஒருவர் தான் பெற்ற ₹65,000 கடனை திருப்பிச் செலுத்த முதல் மாதம் ₹400 செலுத்துகிறார். அதன் பிறகு ஒவ்வொரு மாதமும் முந்தைய மாதம் செலுத்தியதைவிட ₹300 கூடுதலாகச் செலுத்துகிறார். அவர் இந்தக் கடனை அடைக்க எவ்வளவு காலம் தேவைப்படும்?

10. செங்கற்களினால் கட்டப்பட்ட ஒரு படிக்கட்டில் மொத்தம் 30 படிகட்டுகள் உள்ளன. கீழ்ப்படிக்கட்டை அமைப்பதற்கு 100 செங்கற்கள் தேவைப்படுகிறது. அடுத்தடுத்த படிக்கட்டுகள் அமைப்பதற்கு முந்தைய படிக்கட்டை விட இரண்டு செங்கற்கள் குறைவாகத் தேவைப்படுகிறது.
   (i) உச்சியிலுள்ள படிக்கட்டை அமைப்பதற்கு எத்தனை செங்கற்கள் தேவை?
   (ii) படிக்கட்டுகள் முழுவதும் அமைப்பதற்கு எத்தனை செங்கற்கள் தேவை?




**எ.கா.2.37:** சிறிய தரையோடுகளைக் கொண்டு 12 அடி பக்க அளவுள்ள சமபக்க முக்கோண தரையோடுகள் (mosaic) அமைக்கப்படுகிறது. அவற்றில் உள்ள ஒவ்வொரு தரையோடும் 12 அங்குல அளவிலான சமபக்க முக்கோண வடிவில் உள்ளது. சிறிய தரையோடுகளின் வண்ணங்கள் படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது போல மாறி மாறி உள்ளன. ஒவ்வொரு வண்ணத்திலும் உள்ள தரையோடுகளின் எண்ணிக்கை மற்றும் கொடுக்கப்பட்ட அமைப்பில் உள்ள மொத்த தரையோடுகளின் எண்ணிக்கை காண்க.

**எ.கா.2.38:** ஒரு தெருவிலுள்ள வீடுகளுக்கு 1 முதல் 49 வரை தொடர்ச்சியாகக் கதவிலக்கம் வழங்கப்பட்டுள்ளது. செந்திலின் வீட்டிற்கு முன்னதாக உள்ள வீடுகளின் கதவிலக்கங்களின் கூட்டுத்தொகையானது செந்திலின் வீட்டிற்குப் பின்னதாக உள்ள வீடுகளின் கதவிலக்கங்களின் கூட்டுத்தொகைக்குச் சமம் எனில் செந்திலின் வீட்டுக் கதவிலக்கத்தைக் காண்க. **(APR-23, PTA-2)**

## பயிற்சி 2.7

**1. பின்வரும் தொடர்வரிசைகளில் எவை பெருக்குத் தொடர்வரிசையாகும்?** (2M)

(i) $3,9,27,81,\ldots$

$$a=3, r=\frac{t_2}{t_1}=\frac{9}{3}=3$$

$$r=\frac{t_3}{t_2}=\frac{27}{9}=3;\ r=\frac{t_4}{t_3}=\frac{81}{27}=3$$

$$\frac{t_2}{t_1}=\frac{t_3}{t_2}=\frac{t_4}{t_3}=r$$

∴ கொடுக்கப்பட்ட தொடர்வரிசை ஒரு **பெருக்குத்தொடர் வரிசையாகும்.**

(ii) $4,44,444,4444,\ldots$

$$r=\frac{t_2}{t_1}=\frac{44}{4}=11$$

$$\frac{t_3}{t_2}=\frac{444}{44}=\frac{111}{11};\frac{t_4}{t_3}=\frac{4444}{444}=\frac{1111}{111}$$

$$\frac{t_2}{t_1}\neq\frac{t_3}{t_2}\neq\frac{t_4}{t_3}$$

∴ கொடுக்கப்பட்ட தொடர்வரிசை ஒரு **பெருக்குத்தொடர் வரிசை அல்ல.**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

2M

1. பின்வரும் தொடர்வரிசைகளில் எவை பெருக்குத் தொடர்வரிசையாகும்?
   (iii) $0.5,0.05,0.005,\ldots$ (iv) $\frac{1}{3},\frac{1}{6},\frac{1}{12},\ldots.$ (v) $1,-5,25,-125,\ldots$ (vi) $120,60,30,18,\ldots$ (vii) $16,4,1,\frac{1}{4},\ldots$

**எ.கா.2.40:** பின்வரும் தொடர்வரிசைகளில் எவை பெருக்குத் தொடர்வரிசையாகும்?
   (i) $7, 14, 21, 28,\ldots\ldots\ldots$ (ii) $\frac{1}{2}, 1, 2, 4,\ldots\ldots$ (iii) $5, 25, 50, 75,\ldots\ldots$

**2. கீழே கொடுக்கப்பட்டுள்ள முதல் உறுப்பு மற்றும் பொதுவிகிதம் உடைய பெருக்குத் தொடர் வரிசையின் முதல் மூன்று உறுப்புகளை எழுதுக.**

**(i) $a=6, r=3$** (2M)

பெருக்குத் தொடர்வரிசையின் முதல் மூன்று உறுப்புகள் $a, ar, ar^2$

$$=6, 6(3), 6(3)^2=\mathbf{6,18,54}$$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

2M

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள முதல் உறுப்பு மற்றும் பொதுவிகிதம் உடைய பெருக்குத் தொடர் வரிசையின் முதல் மூன்று உறுப்புகளை எழுதுக.
   (ii) $a=\sqrt{2}, r=\sqrt{2}$ (iii) $a=1000, r=\frac{2}{5}$

**எ.கா.2.41:** பின்வருவனவற்றின் முதல் உறுப்பு மற்றும் பொது விகிதம் கொடுக்கப்பட்டுள்ளது, அதனுடைய பெருக்குத் தொடர்வரிசைகளைக் காண்க.
   (i) $a=-7,\ r=6$ **(PTA - 5)** (ii) $a=256,\ r=0.5$

**3. $729, 243, 81,\ldots$ என்ற பெருக்குத் தொடர்வரிசையின் 7-வது உறுப்பைக் காண்க.**

$729, 243, 81,\ldots$ ஆகியன பெருக்குத் தொடர்வரிசையில் உள்ளன. (2M)

$$a=729,\ r=\frac{243}{729}=\frac{1}{3},\ n=7$$

$$t_n=ar^{n-1}$$

$$t_7=729\left(\frac{1}{3}\right)^{7-1}=729\left(\frac{1}{3}\right)^6=729\left(\frac{1}{729}\right)$$

$$\mathbf{t_7=1}$$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

2M

**எ.கா.2.42:** $9, 3, 1,\ldots\ldots$ என்ற பெருக்குத் தொடர்வரிசையின் 8 ஆவது உறுப்பைக் காண்க. **(JUN-23)**

**CQ:** $\frac{1}{4},-\frac{1}{2},1,-2\ldots,$ என்ற பெருக்குத் தொடர் வரிசையின் 10வது உறுப்பைக் காண்க. **(PTA - 4)**

**4. $x+6, x+12$ மற்றும் $x+15$ என்பன ஒரு பெருக்குத் தொடர்வரிசையின் தொடர்ச்சியான மூன்று உறுப்புகள் எனில், $x$-யின் மதிப்பைக் காண்க.** APR-23 2M

$x+6, x+12, x+15$ ஆகியன பெருக்குத் தொடர்வரிசையில் உள்ளன.

$\frac{t_2}{t_1}=\frac{t_3}{t_2} \Rightarrow \frac{x+12}{x+6}=\frac{x+15}{x+12}$

$(x+12)(x+12)=(x+15)(x+6)$

$x^2+12x+12x+144=x^2+6x+15x+90$

$x^2+24x+144=x^2+21x+90$

$x^2+24x-21x+144-90-x^2=0$

$3x+54=0$

$3x=-54$

$\boldsymbol{x=-18}$

**5. பின்வரும் பெருக்குத் தொடர்வரிசையில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கையைக் காண்க.** 2M

**(i) $4, 8, 16, \dots, 8192$ ?**

$a=4,$

$r=\frac{t_2}{t_1}=\frac{8}{4}=2,$

$t_n=8192$

$t_n=ar^{n-1}$

$8192=4(2)^{n-1}$

$\frac{8192}{4}=(2)^{n-1}$

$2048=2^{n-1}$

$2^{11}=2^{n-1}$

$11=n-1$

$n=12$

$t_{12}=8192$

$\therefore$ 12 **உறுப்புகள்** உள்ளன.

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். 2M

5 (ii). பின்வரும் பெருக்குத் தொடர்வரிசையில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கையைக் காண்க. $\frac{1}{3}, \frac{1}{9}, \frac{1}{27}, \dots, \frac{1}{2187}$

**6. ஒரு பெருக்குத் தொடர்வரிசையின் 9-வது உறுப்பு 32805 மற்றும் 6-வது உறுப்பு 1215 எனில், 12-வது உறுப்பைக் காண்க.** 5M

$t_9=32805,\ t_6=1215$

$t_{12}$ ஐ காண வேண்டும்.

$t_n=a(r)^{n-1}$

$t_9=ar^{9-1}=ar^8=32805$ .....(1)

$t_6=ar^{6-1}=ar^5=1215$........(2)

$\frac{t_9}{t_6}=\frac{ar^8}{ar^5}=\frac{32805}{1215}$

$r^3=27 \Rightarrow \quad r=3$

$r=\mathbf{3}$ என (2) ல் பிரதியிட

$a(3)^5=1215$

$a=\frac{1215}{243}$

$a=5$

$t_{12}=a\,r^{12-1}=\mathbf{5(3^{11})}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். 5M

**எ.கா.2.43:** ஒரு பெருக்குத்தொடர்வரிசையின் 4-வது உறுப்பு $\frac{8}{9}$ மற்றும் 7-வது உறுப்பு $\frac{64}{243}$ எனில், அந்தப் பெருக்குத் தொடர்வரிசையைக் காண்க.

**அலகுப்பயிற்சி:**

**9.** ஒரு பெருக்குத் தொடர்வரிசையில் 2-வது உறுப்பு $\sqrt{6}$ மற்றும் 6-வது உறுப்பு $9\sqrt{6}$ எனில் அந்தத் தொடர்வரிசையைக் காண்க.

**7. ஒரு பெருக்குத்தொடர் வரிசையின் 8-வது உறுப்பு 768 மற்றும் பொது விகிதம் 2 எனில், அதன் 10-வது உறுப்பைக் காண்க.** 2M

கொடுக்கப்பட்டது**:** $t_8=768$ மற்றும் $r=2$

$ar^{8-1}=768 \qquad (\because t_n=ar^{n-1})$

$a(2)^7=768 \qquad (\because 2^7=128)$

$a=\frac{768}{128}$

$a=6$

$t_{10}=ar^{10-1}$

$=6(2)^9$

$=6(512)$

$\boldsymbol{t_{10}=3072}$

**9. ஒரு பெருக்குத் தொடர்வரிசையில் அடுத்தடுத்த மூன்று உறுப்புகளின் பெருக்கற்பலன் 27 மற்றும் அவைகளில் இரண்டிரண்டு உறுப்புகளின் பெருக்கற்பலனின் கூடுதல் $\frac{57}{2}$ எனில், அந்த மூன்று உறுப்புகளைக் காண்க.** 5M

$\frac{a}{r}, a, ar$ ஆகியன ஒரு பெருக்குத் தொடர்வரிசையின் அடுத்தடுத்த மூன்று உறுப்புகள் என்க.

$$\frac{a}{r} \times a \times ar = 27$$

$$a^3 = 27$$

$$a = 3$$

மேலும்,

$$\frac{a}{r} \times a + a \times ar + ar \times \frac{a}{r} = \frac{57}{2}$$

$$a^2\left(\frac{1}{r} + r + 1\right) = \frac{57}{2}$$

$$(3)^2\left(\frac{1+r^2+r}{r}\right) = \frac{57}{2}$$

$$2\left(\frac{r^2+r+1}{r}\right) = \frac{57}{9} = \frac{19}{3}$$

$$6[r^2 + r + 1] = 19r$$

$$6r^2 + 6r - 19r + 6 = 0$$

$$6r^2 - 13r + 6 = 0$$

$$\left(r - \frac{3}{2}\right)\left(r - \frac{2}{3}\right) = 0$$

$$r = \frac{3}{2}, \ r = \frac{2}{3}$$

இங்கு $a = 3, r = \frac{3}{2}$

$$\frac{3}{3/2}, 3, 3\left(\frac{3}{2}\right)$$

$$2, \ 3, \frac{9}{2}$$

இங்கு $a = 3, r = \frac{2}{3}$

$$\frac{3}{2/3}, 3, 3\left(\frac{2}{3}\right)$$

$$\frac{9}{2}, 3, 2$$

∴ மூன்று உறுப்புகள் $\mathbf{\frac{9}{2}, 3, 2}$, **(அ)** $\mathbf{2, 3, \frac{9}{2}}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.2.44:** ஒரு பெருக்குத்தொடர்வரிசையின் அடுத்தடுத்த மூன்று உறுப்புகளின் பெருக்கற்பலன் 343 மற்றும் அவற்றின் கூடுதல் $\frac{91}{3}$ எனில், அந்த மூன்று உறுப்புகளைக் காண்க. 5M

**10. ஒரு நபர் ஒரு நிறுவனத்தில் துணை மேலாளராகப் பணியில் சேர்கிறார். அவருக்கு அந்நிறுவனம் முதல் மாத ஊதியமாக ₹60,000 வழங்குகிறது மற்றும் ஆண்டு ஊதிய உயர்வு 5% வழங்குவதாக ஒப்புக்கொள்கிறது. 5 வருட முடிவில் அவருடைய மாத ஊதியம் எவ்வளவு?** 5M PTA-6

அந்த நபரின் முதல் மாத ஊதியம் ₹ 60,000. ஆண்டு ஊதிய உயா்வு 5%

P = 60000, $r = 5\%, n = 5$ வருடங்கள்

$$A = P\left(1 + \frac{r}{100}\right)^n$$

$$= 60000\left(1 + \frac{5}{100}\right)^5 = 60000\left(\frac{21}{20}\right)^5 = 60000\left(\frac{21\times21\times21\times21\times21}{20\times20\times20\times20\times20}\right) = \frac{12252303}{160} = 76576.89$$

$$A = ₹\,76577$$

5 வருட முடிவில் அவருடைய மாத ஊதியம் **₹ 76577**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

11. சிவமணி ஒரு பணிக்கான நேர்காணலில் பங்கேற்கிறார். அந்நிறுவனம் அவருக்கு இரண்டு விதமான வாய்ப்புகளை வழங்குகிறது.
வாய்ப்பு A: முதல் மாத ஊதியம் ₹20,000 மற்றும் நிச்சயமான 6% ஆண்டு ஊதிய உயர்வு 5 ஆண்டுகளுக்கு.
வாய்ப்பு B: முதல் மாத ஊதியம் ₹22,000 மற்றும் நிச்சயமான 3% ஆண்டு ஊதிய உயர்வு 5 ஆண்டுகளுக்கு. 5M
A மற்றும் B ஆகிய இரு வாய்ப்புகளிலும் அவருடைய 4-வது வருட ஊதியம் எவ்வளவு?

**எ.கா.2.45:** ஓர் இயந்திரத்தின் தற்போதைய மதிப்பு 40,000 மற்றும் ஒவ்வொரு வருடமும் அதன் மதிப்பு 10% குறைகிறது. 6-வது வருடத்தில் இயந்திரத்தின் தோராய மதிப்பைக் காண்க.

**அலகுப்பயிற்சி: 10.** ஒரு வாகனத்தின் மதிப்பு ஒவ்வோர் ஆண்டும் 15% குறைகிறது. வாகனத்தின் தற்போதைய மதிப்பு ₹ 45000 எனில், 3 ஆண்டுகளுக்குப் பிறகு வாகனத்தின் மதிப்பு என்ன?

12. **$a, b, c$ என்பன ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் உள்ள மூன்று அடுத்தடுத்த உறுப்புகள் மற்றும் $x, y, z$ என்பன ஒரு பெருக்கு தொடர்வரிசையின் மூன்று அடுத்தடுத்த உறுப்புகள் எனில் $x^{b-c} \times y^{c-a} \times z^{a-b} = 1$ என நிறுவுக.** (5M)

$a, b, c$ ஆகியன ஒரு கூட்டுத்தொடர் வரிசையில் உள்ளன $\Rightarrow 2b = a + c$

$x, y, z$ ஆகியன ஒரு பெருக்குத் தொடர் வரிசையில் அமைந்துள்ளன.

$$\frac{y}{x} = \frac{z}{y} = k$$

$$y^2 = xz \qquad \frac{y}{x} = k \qquad y = xk$$

$$\frac{z}{y} = k \qquad z = yk \qquad z = (xk)k \qquad z = xk^2$$

நிறுவ வேண்டியது: $x^{b-c} \times y^{c-a} \times z^{a-b} = 1$

LHS : $x^{b-c} \times y^{c-a} \times z^{a-b}$

$= x^{b-c} \times (xk)^{c-a} \times (xk^2)^{a-b}$

$= x^{b-c} \times x^{c-a} \times k^{c-a} \times x^{a-b} \times (k^2)^{a-b}$

$= x^{b-c+c-a+a-b} \times k^{c-a} \times k^{2a-2b}$

$= x^0\, k^{c-a+2a-2b}$

$= (1)k^{c+a-(c+a)}$

$= k^{c+a-c-a}$

$= k^0$

$= 1$ :RHS

$\mathbf{x^{b-c} \times y^{c-a} \times z^{a-b} = 1}$ நிரூபிக்கப்பட்டது.

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும்.

8. $a, b, c$ என்பன ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் அமையும் எனில் $3^a, 3^b, 3^c$ ஒரு பெருக்குத் தொடர்வரிசையில் அமையும் எனக் காட்டுக. (2M)

## பயிற்சி 2.8

1. **பெருக்குத் தொடர்வரிசையில் முதல் $n$ உறுப்புகளின் கூடுதல் காண்க.** (5M)

**(i) $5, -3, \frac{9}{5}, -\frac{27}{25}, \ldots.$**

$a = 5, r = \frac{t_2}{t_1} = -\frac{3}{5}, r < 1$

$S_n = a\left(\frac{1-r^n}{1-r}\right)$

$= 5\left(\frac{1-\left(-\frac{3}{5}\right)^n}{1-\left(-\frac{3}{5}\right)}\right)$

$= 5\left(\frac{1-\left(-\frac{3}{5}\right)^n}{\frac{5+3}{5}}\right) = 5 \times \frac{5}{8}\left(1-\left(-\frac{3}{5}\right)^n\right) = \mathbf{\frac{25}{8}\left[1-\left(-\frac{3}{5}\right)^n\right]}$

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும்.

1. பெருக்குத் தொடர்வரிசையில் முதல் $n$ உறுப்புகளின் கூடுதல் காண்க. (ii) $256, 64, 16, \ldots.$ (5M)
2. 5, 15, 45,… என்ற பெருக்குத் தொடர்வரிசையின் முதல் 6 உறுப்புகளின் கூடுதல் காண்க. (5M)

எ.கா.2.46: $1, -3, 9, -27\ldots.$ என்ற பெருக்குத்தொடர்வரிசையின் முதல் 8 உறுப்புகளின் கூடுதல் காண்க. (2M)

3. **ஒரு பெருக்குத் தொடர்வரிசையின் பொது விகிதம் 5 மற்றும் முதல் 6 உறுப்புகளின் கூடுதல் 46872 எனில், அதன் முதல் உறுப்பைக் காண்க.** (5M)

$r = 5$ மற்றும் $S_6 = 46872$

$S_n = a\left(\frac{r^n-1}{r-1}\right), r > 1$

$S_6 = a\left[\frac{5^6-1}{5-1}\right]$

$46872 = a\left[\frac{15625-1}{4}\right]$

$46872 = a\left(\frac{15624}{4}\right)$

$46872 = a(3906)$

$a = \frac{46872}{3906}$

$\mathbf{a = 12}$

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும்.

எ.கா.2.47: (2M)
ஒரு பெருக்குத் தொடர்வரிசையில் $S_6 = 4095$ மற்றும் $r = 4$ எனில், அதன் முதல் உறுப்பைக் காண்க.

எ.கா.2.53: (5M)
ஒரு நபர் ஒவ்வோர் ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டு சேமித்த தொகையில் பாதியைச் சேமிக்கிறார். 6 ஆண்டுகளில் அவர் ₹ 7875 -ஐச் சேமிக்கிறார் எனில், முதல் ஆண்டில் அவர் சேமித்த தொகை எவ்வளவு?

4. **பின்வரும் முடிவுறா தொடர்களின் கூடுதல் காண்க.** (2M)

**(i) $9 + 3 + 1 + \cdots$**

$S_\infty = \frac{a}{1-r}, -1 < r < 1$

$a = 9, r = \frac{t_2}{t_1} = \frac{3}{9}$

$S_\infty = \frac{9}{1-\frac{3}{9}} = \frac{9}{\frac{9-3}{9}} = 9 \times \frac{9}{6} = \mathbf{\frac{27}{2}}$

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

4. பின்வரும் முடிவுறா தொடர்களின் கூடுதல் காண்க. (ii) $21 + 14 + \frac{28}{3} + \cdots$
5. ஒரு முடிவுறா பெருக்குத் தொடரின் முதல் உறுப்பு 8 மற்றும் முடிவுறா உறுப்புகள் வரை கூடுதல் $\frac{32}{3}$ எனில் அதன் பொது விகிதம் காண்க.

எ.கா.2.49: $3 + 1 + \frac{1}{3} + \cdots \infty$ என்ற தொடரின் கூடுதல் காண்க.

**6. பின்வரும் தொடர்களின் $n$ உறுப்புகள் வரை கூடுதல் காண்க.** (5M)

**(i) $0.4+0.44+0.444+\cdots$ $n$ உறுப்புகள் வரை**

கொடுக்கப்பட்ட தொடர் $0.4+0.44+0.444+\cdots n$ உறுப்புகள் வரை

$=4(0.1+0.11+0.111+\cdots n$ உறுப்புகள் வரை $)$

9 ஆல் பெருக்கி வகுக்க,

$=\frac{4}{9}[0.9+0.99+0.999+\cdots n$ உறுப்புகள் வரை$]$

$=\frac{4}{9}[(1-0.1)+(1-0.01)+(1-0.001)+\cdots n$ உறுப்புகள் வரை $]$

$=\frac{4}{9}[(1+1+\cdots n$ உறுப்புகள் வரை $)-(0.1+0.01+0.001+\cdots n$ உறுப்புகள் வரை$)]$

$=\frac{4}{9}\left[(1+1+\cdots n \text{ உறுப்புகள் வரை })-\left(\frac{1}{10}+\frac{1}{100}+\frac{1}{1000}+\cdots n \text{ உறுப்புகள் வரை}\right)\right]$

| | |
|---|---|
| $a=1, r=\frac{t_2}{t_1}=1$<br>$S_n=na$<br>$1+1+\cdots+n$ உறுப்புகள் வரை<br>$=n(1)=n$ | $a=\frac{1}{10}, r=\frac{t_2}{t_1}=\frac{\frac{1}{100}}{\frac{1}{10}}=\frac{1}{100}\times\frac{10}{1}=\frac{1}{10}\Rightarrow r=\frac{1}{10}$<br>$S_n=a\left(\frac{1-r^n}{1-r}\right), r<1$<br>$=\frac{1}{10}\left[\frac{1-\left(\frac{1}{10}\right)^n}{1-\frac{1}{10}}\right]$ |

$$=\frac{4}{9}\left[n-\frac{1}{10}\left(\frac{1-\left(\frac{1}{10}\right)^n}{1-\frac{1}{10}}\right)\right]$$

$$=\frac{4}{9}\left[n-\frac{1}{10}\left(\frac{1-\left(\frac{1}{10}\right)^n}{\frac{9}{10}}\right)\right]$$

$$=\frac{4}{9}\left[n-\frac{1}{10}\times\frac{10}{9}\left(1-\left(\frac{1}{10}\right)^n\right)\right]$$

$$\boldsymbol{S_n=\frac{4n}{9}-\frac{4}{81}\left[1-\left(\frac{1}{10}\right)^n\right]}$$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (5M)

6. பின்வரும் தொடரின் $n$ உறுப்புகள் வரை கூடுதல் காண்க.
(ii) $3+33+333+\cdots$ $n$ உறுப்புகள் வரை **(JUN-23)**

**எ.கா.2.48:** $1+4+16+\cdots$ என்ற தொடரின் எத்தனை உறுப்புகளைக் கூட்டினால் கூடுதல் 1365 கிடைக்கும்?

**எ.கா.2.51:** $5+55+555+\ldots.$ என்ற தொடர்வரிசையின் முதல் $n$ உறுப்புகளின் கூடுதல் காண்க. **(APR-23, PTA-4)**

**7. $3+6+12+\cdots+1536$ என்ற பெருக்குத் தொடரின் கூடுதல் காண்க.** (5M) PTA-3

$a=3, r=\frac{t_2}{t_1}=\frac{6}{3}=2, l=1536$

$t_n=ar^{n-1}$

$1536=3(2)^{n-1}$

$\frac{1536}{3}=2^{n-1}$

$512=2^{n-1}$

$2^9=2^{n-1}$

$9=n-1$

$n=10$

$S_n=a\left[\frac{r^n-1}{r-1}\right], r>1$

$S_{10}=3\left[\frac{2^{10}-1}{2-1}\right]$

$S_{10}=3(1024-1)$

$=3(1023)$

$=\mathbf{3069}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (5M)

**எ.கா.2.50:** $0.6666\ldots.$ என்ற எண்ணின் விகிதமுறு வடிவம் காண்க.

**8. குமார் தனது நான்கு நண்பர்களுக்கு கடிதம் எழுதுகிறார். மேலும் தனது நண்பர்களை அவர்கள் ஒவ்வொருவரும் நான்கு வெவ்வேறு நண்பர்களுக்குக் கடிதம் எழுதுமாறும் மற்றும் இந்தச் செயல்முறையைத் தொடருமாறும் கூறுகிறார். இந்தச் செயல்முறை தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. ஒரு கடிதத்திற்கான செலவு ₹2 எனில் 8 நிலைகள் வரை கடிதங்கள் அனுப்புவதற்கு ஆகும் மொத்தச் செலவைக் காண்க.** (5M)

கொடுக்கப்பட்டது: குமார் தனது நான்கு நண்பர்களுக்கு கடிதம் எழுகிறார். மேலும் தனது நண்பர்களை அவர்கள் ஒவ்வொருவரும் நான்கு வெவ்வேறு நண்பர்களுக்குக் கடிதம் எழுதுமாறும் மற்றும் இந்தச் செயல்முறையைத் தொடருமாறும் கூறுகிறார்.

$4+16+64+\cdots$ இது ஒரு பெருக்குத்தொடர் வரிசையில் அமைகிறது.

$a=4, r=\frac{t_2}{t_1}=\frac{16}{4}=4\ ,\ n=8$

$S_n=a\left[\frac{r^n-1}{r-1}\right], r>1$

$S_8=4\left[\frac{(4)^8-1}{4-1}\right]=4\left[\frac{65536-1}{3}\right]$

$=4\left[\frac{65535}{3}\right]=4[21845]$

$=87380$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

(5M) **எ.கா.2.52:** $1+6+6^2+\cdots+6^n>5000$ என்றவாறு அமையும் மிகச் சிறிய மிகை முழு எண் $n$ காண்க.

**CQ:** ஒரு நிறுவனம் 25 தெருக்களில் செடிகளை நட திட்டமிட்டது. முதல் தெருவில் 1 செடியும், இரண்டாவது தெருவில் 3 செடியும், மூன்றாவது தெருவில் 9 செடியும் நட முடிவு செய்யப்பட்டது. இவ்வேலை நிறைவடைய எத்தனை செடிகள் தேவை? **(MDL, PTA - 1)** (2M)

∴8 நிலைகள் வரை 87380 கடிதங்களை அனுப்பவேண்டும்.

ஒரு கடிதத்திற்கான செலவு ₹2 மொத்த செலவு $=2\times 87380=$ **₹174760**

**9. $0.\overline{123}$ என்ற எண்ணின் விகிதமுறு வடிவம் காண்க.** (5M)

$0.\overline{123}=0.123123123\ldots$

$=0.123+0.000123+0.000000123+\cdots$

$=\frac{123}{1000}+\frac{123}{1000000}+\frac{123}{1000000000}+\cdots$

$=\frac{123}{1000}\left[1+\frac{1}{1000}+\frac{1}{1000000}+\cdots\right]$

$1+\frac{1}{1000}+\frac{1}{1000000}+\cdots$ ஒரு முடிவுறாத் தொடராகும்.

$S_n=\frac{a}{1-r}, a=1, r=\frac{1}{1000}$

$0.\overline{123}=\frac{123}{1000}\left[\frac{1}{1-\frac{1}{1000}}\right]$

$=\frac{123}{1000}\left[\frac{1}{\frac{1000-1}{1000}}\right]=\frac{123}{1000}\left(\frac{1000}{999}\right)$

$=\frac{123}{999}$

$0.\overline{123}=\frac{41}{333}$

**10. $S_n=(x+y)+(x^2+xy+y^2)+(x^3+x^2y+xy^2+y^3)+\cdots n$ உறுப்புகள் வரை எனில் $(x-y)S_n=\left[\frac{x^2(x^n-1)}{x-1}-\frac{y^2(y^n-1)}{y-1}\right]$ என நிறுவுக.** (5M) PTA-1

**கொடுக்கப்பட்டது:** $S_n=(x+y)+(x^2+xy+y^2)+(x^3+x^2y+xy^2+y^3)+\cdots+n$ உறுப்புகள் வரை

$(x-y)$ ஆல் பெருக்க

$(x-y)S_n=[(x-y)(x+y)+(x-y)(x^2+xy+y^2)+(x-y)(x^3+x^2y+xy^2+y^3)+\cdots+n$

$=[(x^2-y^2)+(x^3-y^3)+(x^4-y^4)+\cdots n$ உறுப்புகள் வரை $]$

$(x-y)S_n=[(x^2+x^3+x^4+\cdots n$ உறுப்புகள் வரை $)-(y^2+y^3+y^4+\cdots n$ உறுப்புகள் வரை $)]$

$x^2+x^3+x^4+\cdots+n$ உறுப்புகள் வரை

இங்கு $a=x^2, r=\frac{x^3}{x^2}=x$

$y^2+y^3+y^4+\cdots n$ உறுப்புகள் வரை

இங்கு $a=y^2, r=\frac{y^3}{y}=y$

$S_n=\frac{a(r^n-1)}{r-1}$

$(x-y)S_n=\left[\frac{x^2(x^n-1)}{x-1}\right]-\left[\frac{y^2(y^n-1)}{y-1}\right]$

$(x-y)S_n=\left[\frac{x^2(x^n-1)}{x-1}-\frac{y^2(y^n-1)}{y-1}\right]$ எனவே, நிரூபிக்கப்பட்டது.

## பயிற்சி 2.9

1. பின்வரும் தொடர்களின் கூடுதலைக் காண்க. (2M)

**(i) $1+2+3+\cdots+60$**

இங்கு $n=60$

$$1+2+3+\cdots+n=\frac{n(n+1)}{2}$$

$1+2+3+\cdots+60=\frac{60(60+1)}{2}$

$=30(61)$

$=\mathbf{1830}$

**இது போன்ற கணக்குகள் சுயமாக பயிற்சி செய்யவும்.**

1. பின்வரும் தொடர்களின் கூடுதலைக் காண்க.
(ii) $3+6+9+\cdots+96$ (2M) (iii) $51+52+53+..+92$ (5M)

**எ.கா.2.54:** மதிப்பு காண்க. (i) $1+2+3+\cdots+50$ (2M)
(ii) $16+17+18+\cdots+75$

**எ.கா.2.55:** கூடுதல் காண்க.
(i) $1+3+5+\cdots$ 40 உறுப்புகள் வரை (2M)
(ii) $2+4+6+\cdots+80$
(iii) $1+3+5+\cdots+55$ **(PTA-6)**

**1. (iv) $1+4+9+16+\cdots+225$** (2M)

$=1^2+2^2+3^2+4^2+\cdots+15^2$

$$1^2+2^2+3^2+\cdots+n^2=\frac{n(n+1)(2n+1)}{6}$$
$$n=15$$

$=\frac{15(15+1)(2\times15+1)}{6}$

$=\frac{5(16)(31)}{2}$

$=\mathbf{1240}$

**இது போன்ற கணக்குகள் சுயமாக பயிற்சி செய்யவும்.**

1. பின்வரும் தொடர்களின் கூடுதலைக் காண்க. (2M)
(v) $6^2+7^2+8^2+\cdots+21^2$

**எ.கா. 2.56:** கூடுதல் காண்க.
(i) $1^2+2^2+\cdots+19^2$
(ii) $5^2+10^2+15^2+\cdots+105^2$
(iii) $15^2+16^2+17^2+\cdots+28^2$

**CQ:** $1^2+2^2+3^2+\cdots10^2$-ன் மதிப்பு காண்க. இதிலிருந்து $2^2+4^2+6^2+\cdots+20^2$ -ன் மதிப்பு காண்க. **(SEP - 20)**

(vi) $10^3+11^3+12^3+\cdots+20^3$ PTA-5 (5M)

$=(1^3+2^3+3^3+\cdots+20^3)-(1^3+2^3+\cdots+9^3)$

$$1^3+2^3+3^3+\cdots+n^3=\left[\frac{n(n+1)}{2}\right]^2$$

$=\left[\frac{20(20+1)}{2}\right]^2-\left[\frac{9(9+1)}{2}\right]^2$

$=\left[\frac{20(21)}{2}\right]^2-\left[\frac{9(10)}{2}\right]^2$

$=[10(21)]^2-[9(5)]^2$

$=\frac{1-1}{(\cos A+\cos B)(\sin A+\sin B)}$

$=\mathbf{0}$

> **இது போன்ற கணக்குகள் சுயமாக பயிற்சி செய்யவும்.**
>
> பின்வருவனவற்றை நிரூபிக்கவும்.
>
> **எ.கா.6.10:** $\frac{\sin A}{1+\cos A}+\frac{\sin A}{1-\cos A}=2cosec\,A$ (2M)
>
> **எ.கா.6.14:** $\frac{\sin A}{\sec A+\tan A-1}+\frac{\cos A}{cosec\,A+\cot A-1}=1$ (5M)

**(ii)** $\frac{\sin^3A+\cos^3A}{\sin A+\cos A}+\frac{\sin^3A-\cos^3A}{\sin A-\cos A}=2$

$\frac{\sin^3A+\cos^3A}{\sin A+\cos A}+\frac{\sin^3A-\cos^3A}{\sin A-\cos A}$

$=\frac{(\sin A+\cos A)(\sin^2A+\cos^2A-\sin A.\cos A)}{\sin A+\cos A}+\frac{(\sin A-\cos A)(\sin^2A+\cos^2A+\sin A.\cos A)}{\sin A-\cos A}$

$=1-\sin A.\cos A+1+\sin A.\cos A$

$=1+1$

$=\mathbf{2}$

> **இது போன்ற கணக்குகள் சுயமாக பயிற்சி செய்யவும்.** (5M)
>
> **எ.கா.6.16:** $\frac{(1+\cot A+\tan A)(\sin A-\cos A)}{\sec^3A-cosec^3A}=\sin^2A\cos^2A$ என்பதை நிரூபிக்கவும்.
>
> **எ.கா.6.13:** $\left(\frac{\cos^3A-\sin^3A}{\cos A-\sin A}\right)-\left(\frac{\cos^3A+\sin^3A}{\cos A+\sin A}\right)=2\sin A\cos A$ என்பதை நிரூபிக்கவும். **(PTA-6)**

$\because a^3+b^3=(a+b)(a^2+b^2-ab)$
$a^3-b^3=(a-b)(a^2+b^2+ab)$

**7. (i)** $\sin\theta+\cos\theta=\sqrt{3}$ எனில், $\tan\theta+\cot\theta=1$ என்பதை நிரூபிக்கவும். (5M)

கொடுக்கப்பட்டது: $\sin\theta+\cos\theta=\sqrt{3}$

இருபுறமும் வர்க்கப்படுத்த, $(\sin\theta+\cos\theta)^2=3$

$\sin^2\theta+\cos^2\theta+2\sin\theta.\cos\theta=3$

$1+2\sin\theta.\cos\theta=3$

$2\sin\theta.\cos\theta=3-1=2$

$\sin\theta.\cos\theta=1$ .............. (1)

$\tan\theta+\cot\theta=\frac{\sin\theta}{\cos\theta}+\frac{\cos\theta}{\sin\theta}$

$=\frac{\sin^2\theta+\cos^2\theta}{\sin\theta.\cos\theta}=\frac{1}{1}$ [(1) லிருந்து]

$\mathbf{\tan\theta+\cot\theta=1}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

எ.கா.6.8: (2M)
$\cos\theta+\sin\theta=\sqrt{2}\cos\theta$ எனில், $\cos\theta-\sin\theta=\sqrt{2}\sin\theta$ என நிரூபிக்க.

**(ii)** $\sqrt{3}\sin\theta-\cos\theta=0$ எனில், $\tan 3\theta=\frac{3\tan\theta-\tan^3\theta}{1-3\tan^2\theta}$ என நிறுவுக. (PTA-3) (5M)

கொடுக்கப்பட்டது: $\sqrt{3}\sin\theta-\cos\theta=0$

$\sqrt{3}\sin\theta=\cos\theta$

$\frac{\sin\theta}{\cos\theta}=\frac{1}{\sqrt{3}}$

$\tan\theta=\frac{1}{\sqrt{3}}$

$\therefore\theta=30^0$

$\left(\because\tan 30^\circ=\frac{1}{\sqrt{3}}\right)$

LHS: $\tan 3\theta=\tan 3(30^\circ)=\tan 90^\circ=\infty$ ..... (1)

RHS: $\frac{3\tan\theta-\tan^3\theta}{1-3\tan^2\theta}=\frac{3\times\tan 30^\circ-\tan^3 30^\circ}{1-3\tan^2 30^\circ}$

$=\frac{3\times\frac{1}{\sqrt{3}}-\left(\frac{1}{\sqrt{3}}\right)^3}{1-3\times\left(\frac{1}{\sqrt{3}}\right)^2}=\frac{\frac{3}{\sqrt{3}}-\left(\frac{1}{\sqrt{3}}\right)^3}{1-3\times\frac{1}{3}}=\frac{\sqrt{3}-\left(\frac{1}{\sqrt{3}}\right)^3}{0}=\infty$ ...(2)

$(1)=(2)\ \therefore\ \mathbf{\tan 3\theta=\frac{3\tan\theta-\tan^3\theta}{1-3\tan^2\theta}}$

**8. (i)** $\frac{\cos\alpha}{\cos\beta}=m$ மற்றும் $\frac{\cos\alpha}{\sin\beta}=n$, எனக் கொண்டு $(m^2+n^2)\cos^2\beta=n^2$ என்பதை நிரூபிக்கவும். (5M)

**(ii)** $\cot\theta+\tan\theta=x$ மற்றும் $\sec\theta-\cos\theta=y$ எனில், $(x^2y)^{\frac{2}{3}}-(xy^2)^{\frac{2}{3}}=1$ என்பதை நிரூபிக்கவும்.

**(i)** கொடுக்கப்பட்டது: $m=\frac{\cos\alpha}{\cos\beta}$, $n=\frac{\cos\alpha}{\sin\beta}$

$\mathbf{(m^2+n^2)\cos^2\beta}=\left[\left(\frac{\cos\alpha}{\cos\beta}\right)^2+\left(\frac{\cos\alpha}{\sin\beta}\right)^2\right]\cos^2\beta$

$=\left(\frac{\cos^2\alpha}{\cos^2\beta}+\frac{\cos^2\alpha}{\sin^2\beta}\right)(\cos^2\beta)=\frac{\cos^2\alpha\sin^2\beta+\cos^2\alpha\cos^2\beta}{\cos^2\beta.\sin^2\beta}\times\cos^2\beta$

$=\frac{\cos^2\alpha\left(\sin^2\beta+\cos^2\beta\right)}{\sin^2\beta}=\frac{\cos^2\alpha(1)}{\sin^2\beta}$ $[\because\sin^2\beta+\cos^2\beta=1]$

$=\frac{\cos^2\alpha}{\sin^2\beta}=\left(\frac{\cos\alpha}{\sin\beta}\right)^2=\mathbf{n^2}$ [கொடுக்கப்பட்டது: $\frac{\cos\alpha}{\sin\beta}=n$]

**(ii)** கொடுக்கப்பட்டது: $\cot\theta+\tan\theta=x$, $\sec\theta-\cos\theta=y$

$(x^2y)^{\frac{2}{3}}=[(\cot\theta+\tan\theta)^2(\sec\theta-\cos\theta)]^{\frac{2}{3}}$

$=\left[\left(\frac{\cos\theta}{\sin\theta}+\frac{\sin\theta}{\cos\theta}\right)^2(\sec\theta-\cos\theta)\right]^{\frac{2}{3}}$

$=\left[\left[\frac{\cos^2\theta+\sin^2\theta}{\sin\theta.\cos\theta}\right]^2(\sec\theta-\cos\theta)\right]^{\frac{2}{3}}$

$=\left[\left(\frac{1}{\sin\theta.\cos\theta}\right)^2\left(\frac{1}{\cos\theta}-\cos\theta\right)\right]^{\frac{2}{3}}$

$=\left[\frac{1}{\sin^2\theta.\cos^2\theta}\times\frac{1-\cos^2\theta}{\cos\theta}\right]^{\frac{2}{3}}$

$=\left[\frac{1}{\sin^2\theta.\cos^2\theta}\times\frac{\sin^2\theta}{\cos\theta}\right]^{\frac{2}{3}}$

$=\left[\frac{1}{\cos^3\theta}\right]^{\frac{2}{3}}$

$(x^2y)^{\frac{2}{3}}=\frac{1}{\cos^2\theta}$........................ (1)

$(xy^2)^{\frac{2}{3}}=[(\cot\theta+\tan\theta)(\sec\theta-\cos\theta)^2]^{\frac{2}{3}}$

$=\left[(\cot\theta+\tan\theta)\left(\frac{1}{\cos\theta}-\cos\theta\right)^2\right]^{\frac{2}{3}}$

$=\left[\left[\frac{\cos\theta}{\sin\theta}+\frac{\sin\theta}{\cos\theta}\right]\left[\frac{1-\cos^2\theta}{\cos\theta}\right]^2\right]^{\frac{2}{3}}$

$=\left[\left(\frac{\cos^2\theta+\sin^2\theta}{\sin\theta.\cos\theta}\right)\left(\frac{\sin^2\theta}{\cos\theta}\right)^2\right]^{\frac{2}{3}}$

$=\left[\frac{1}{\sin\theta.\cos\theta}\times\frac{\sin^4\theta}{\cos^2\theta}\right]^{\frac{2}{3}}$

$=\left[\frac{\sin^3\theta}{\cos^3\theta}\right]^{\frac{2}{3}}$

$(xy^2)^{\frac{2}{3}}=\frac{\sin^2\theta}{\cos^2\theta}$ ................. (2)

$(1)-(2)\Longrightarrow\mathbf{(x^2y)^{\frac{2}{3}}-(xy^2)^{\frac{2}{3}}}=\frac{1}{\cos^2\theta}-\frac{\sin^2\theta}{\cos^2\theta}=\frac{1-\sin^2\theta}{\cos^2\theta}=\frac{\cos^2\theta}{\cos^2\theta}=\mathbf{1}$

**9. (i)** $\boldsymbol{sin\theta + \cos\theta = p}$ **மற்றும்** $\boldsymbol{sec\theta + cosec\theta = q}$ **எனில்,** $\boldsymbol{q(p^2-1) = 2p}$ **என்பதை நிரூபிக்கவும்.** 5M

**(ii)** $\boldsymbol{sin\theta(1+\sin^2\theta) = \cos^2\theta}$ **எனில்,** $\boldsymbol{cos^6\theta - 4\cos^4\theta + 8cos^2\theta = 4}$ **என்பதை நிரூபிக்கவும்.**

**(i)** கொடுக்கப்பட்டது: $p = \sin\theta + \cos\theta,\ q = \sec\theta + \text{cosec}\,\theta$

LHS: $q(p^2-1) = (\sec\theta + \text{cosec}\,\theta)((\sin\theta+\cos\theta)^2 - 1)$

$= (\sec\theta + \text{cosec}\,\theta)((\sin^2\theta + \cos^2\theta) + 2\sin\theta.\cos\theta - 1)$

$= (\sec\theta + \text{cosec}\,\theta)(1 + 2\sin\theta.\cos\theta - 1)$

$= \left(\frac{1}{\cos\theta} + \frac{1}{\sin\theta}\right)(2\sin\theta.\cos\theta)$

$= \frac{\sin\theta+\cos\theta}{\sin\theta.\cos\theta} \times 2\sin\theta.\cos\theta$

$= 2(\sin\theta + \cos\theta) = 2p \quad (\text{since } p = \sin\theta + \cos\theta)$

$\therefore \boldsymbol{q(p^2-1) = 2p}$. Hence proved

**(ii)** கொடுக்கப்பட்டது: $\sin\theta(1+\sin^2\theta) = \cos^2\theta$

$\sin\theta(1 + 1 - \cos^2\theta) = \cos^2\theta$

இருபுறமும் வர்க்கப்படுத்த, $\sin^2\theta(2-\cos^2\theta)^2 = \cos^4\theta$

$(1-\cos^2\theta)(4+\cos^4\theta - 4\cos^2\theta) = \cos^4\theta \quad (\because (a-b)^2 = a^2+b^2-2ab)$

$4 + \cos^4\theta - 4\cos^2\theta - 4\cos^2\theta - \cos^6\theta + 4\cos^4\theta = \cos^4\theta$

$4 - 4\cos^2\theta - 4\cos^2\theta - \cos^6\theta + 4\cos^4\theta = \cos^4\theta - \cos^4\theta$

$4 - 8\cos^2\theta - \cos^6\theta + 4\cos^4\theta = 0$

$4 = \cos^6\theta - 4\cos^4\theta + 8\cos^2\theta$

$$\boldsymbol{\cos^6\theta - 4\cos^4\theta + 8\cos^2\theta = 4}$$

நிரூபிக்கப்பட்டது.

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

5M

**எ.கா.6.17:** $\frac{\cos^2\theta}{\sin\theta} = p$ மற்றும் $\frac{\sin^2\theta}{\cos\theta} = q$ எனில், $p^2q^2(p^2+q^2+3) = 1$ என நிரூபிக்க.

**அலகுப்பயிற்சி:**

3. $x\sin^3\theta + y\cos^3\theta = \sin\theta\cos\theta$ மற்றும் $x\sin\theta = y\cos\theta$ எனில் $x^2+y^2 = 1$ என நிரூபிக்கவும்.
4. $a\cos\theta - b\sin\theta = c$ எனில் $(a\sin\theta + b\cos\theta) = \pm\sqrt{a^2+b^2-c^2}$ என நிரூபிக்கவும்.

**10.** $\boldsymbol{\frac{\cos\theta}{1+sin\theta} = \frac{1}{a}}$ **எனில்,** $\boldsymbol{\frac{a^2-1}{a^2+1} = \sin\theta}$ **என்பதை நிரூபிக்கவும்.** 5M

LHS: $\frac{a^2-1}{a^2+1} = \frac{1-\frac{1}{a^2}}{1+\frac{1}{a^2}}$

(பகுதி மற்றும் தொகுதியை $a^2$-ஆல் வகுக்க)

$= \frac{1-\left(\frac{1}{a}\right)^2}{1+\left(\frac{1}{a}\right)^2}$

$= \frac{1-\left(\frac{\cos\theta}{1+\sin\theta}\right)^2}{1+\left(\frac{\cos\theta}{1+\sin\theta}\right)^2}$

$= \frac{1-\frac{\cos^2\theta}{(1+\sin\theta)^2}}{1+\frac{\cos^2\theta}{(1+\sin\theta)^2}}$

$= \frac{\frac{(1+\sin\theta)^2 - \cos^2\theta}{(1+\sin\theta)^2}}{\frac{(1+\sin\theta)^2 + \cos^2\theta}{(1+\sin\theta)^2}}$

$= \frac{1+\sin^2\theta + 2\sin\theta - \cos^2\theta}{1+\sin^2\theta+2\sin\theta+\cos^2\theta}$

$= \frac{\sin^2\theta + \sin^2\theta + 2\sin\theta}{1+1+2\sin\theta}$

$= \frac{2\sin^2\theta + 2\sin\theta}{2+2\sin\theta}$

$= \frac{2\sin\theta(\sin\theta+1)}{2(1+\sin\theta)}$

$\therefore \boldsymbol{\frac{a^2-1}{a^2+1} = \sin\theta}$ RHS

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.6.11:** $cosec\,\theta + \cot\theta = P$ எனில், $\cos\theta = \frac{P^2-1}{P^2+1}$ என்பதை நிரூபிக்கவும். 5M

## தயாரிக்கப்பட்ட வினாக்கள்

**பின்வரும் முற்றொருமைகளை நிரூபிக்கவும்.**

**1.** $\frac{\cot A - \cos A}{\cot A + \cos A} = \frac{\operatorname{cosec} A - 1}{\operatorname{cosec} A + 1}$ PTA-4 2M

$\frac{\cot A - \cos A}{\cot A + \cos A} = \frac{\frac{\cos A}{\sin A} - \cos A}{\frac{\cos A}{\sin A} + \cos A}$

$= \frac{\frac{\cos A - \cos A \sin A}{\sin A}}{\frac{\cos A + \cos A \sin A}{\sin A}}$

$= \frac{\cos A(1 - \sin A)}{\cos A(1 + \sin A)}$

$= \frac{1 - \frac{1}{\operatorname{cosec} A}}{1 + \frac{1}{\operatorname{cosec} A}} = \frac{\frac{\operatorname{cosec} A - 1}{\operatorname{cosec} A}}{\frac{\operatorname{cosec} A + 1}{\operatorname{cosec} A}}$

$= \frac{\operatorname{cosec} A - 1}{\operatorname{cosec} A + 1}$

**2.** $\sqrt{\frac{\sec\theta - \tan\theta}{\sec\theta + \tan\theta}} = \frac{1 - \sin\theta}{\cos\theta}$ PTA-5 2M

$\sqrt{\frac{\sec\theta - \tan\theta}{\sec\theta + \tan\theta}} = \sqrt{\frac{\sec\theta - \tan\theta}{\sec\theta + \tan\theta} \times \frac{\sec\theta - \tan\theta}{\sec\theta - \tan\theta}}$

$= \sqrt{\frac{(\sec\theta - \tan\theta)^2}{\sec^2\theta - \tan^2\theta}}$

$= \sqrt{\frac{(\sec\theta - \tan\theta)^2}{1}}$

$= \sec\theta - \tan\theta$

$= \frac{1}{\cos\theta} - \frac{\sin\theta}{\cos\theta} = \frac{1 - \sin\theta}{\cos\theta}$

## பயிற்சி 6.2

**1. $10\sqrt{3}$ மீ உயரமுள்ள கோபுரத்தின் அடியிலிருந்து 30 மீ தொலைவில் தரையில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து கோபுரத்தின் உச்சியின் ஏற்றக்கோணத்தைக் காண்க.** 2M

செங்கோண முக்கோணம் $\Delta ABC$ ல்

$AB =$ கோபுரம் $= 10\sqrt{3}$ மீ , $BC = 30$ மீ

கோபுரத்தின் ஏற்றக் கோணம் $\theta$ ஐ காண வேண்டும்.

$tan\theta = \frac{AB}{BC}$ PTA-2, SEP-21, JUL-22

$= \frac{10\sqrt{3}}{30} \Rightarrow \frac{\sqrt{3}}{3}$

$= \frac{\sqrt{3}}{\sqrt{3}\times\sqrt{3}}$

$\tan\theta = \frac{1}{\sqrt{3}}$




$\tan 30^\circ = \frac{1}{\sqrt{3}} \Rightarrow \theta = 30^\circ$

கோபுரத்தின் உச்சியின் ஏற்றக் கோணம் $\boldsymbol{\theta = 30^\circ}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். 2M

**எ.கா.6.18:** பின்வரும் முக்கோணங்களில் $\angle BAC$ –ஐ காண்க. **(MDL)**
$(\tan 38.7° = 0.8011,$
$\tan 69.4° = 2.6604)$



**எ.கா.6.19:** ஒரு கோபுரம் தரைக்குச் செங்குத்தாக உள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதியிலிருந்து தரையில் 48 மீ, தொலைவில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து கோபுர உச்சியின் ஏற்றக்கோணம் 30° எனில், கோபுரத்தின் உயரத்தைக் காண்க. **(PTA-1)**

**எ.கா.6.20:** தரையிலிருந்து ஒரு பட்டம் 75 மீ உயரத்தில் பறக்கிறது. ஒரு நூல் கொண்டு தற்காலிகமாகத் தரையின் ஒரு புள்ளியில் பட்டம் கட்டப்பட்டுள்ளது. நூல் தரையுடன் ஏற்படுத்தும் சாய்வு கோணம் 60° எனில், நூலின் நீளம் காண்க. (நூலை ஒரு நேர்க்கோடாக எடுத்துக்கொள்ளவும்.

**2. ஒரு சாலையின் இருபுறமும் இடைவெளியே இல்லாமல் வரிசையாக வீடுகள் தொடர்ச்சியாக உள்ளன. அவற்றின் உயரம் $4\sqrt{3}$ மீ. பாதசாரி ஒருவர் சாலையின் மையப் பகுதியில் நின்றுகொண்டு வரிசையாக உள்ள வீடுகளை நோக்குகிறார். $30^\circ$ ஏற்றக்கோணத்தில் பாதசாரி வீட்டின் உச்சியை நோக்குகிறார் எனில், சாலையின் அகலத்தைக் காண்க.** 2M

$AB =$ வீட்டின் உயரம் $= 4\sqrt{3}$ மீ

$C =$ சாலையின் மையப்பகுதி

$BD =$ சாலையின் அகலம்

$\therefore BC = CD$




ஏற்றக்கோணம் $\theta = 30^\circ$

சாலையின் அகலத்தைக் காண வேண்டும்.

$\Delta ABC$ ல், $\tan\theta = \frac{\text{எ.ப}}{\text{அ.ப}}$

$\tan 30^\circ = \frac{AB}{BC} = \frac{1}{\sqrt{3}} \Rightarrow \frac{4\sqrt{3}}{BC} = \frac{1}{\sqrt{3}}$

$\Rightarrow 4\sqrt{3} \times \sqrt{3} = BC \Rightarrow 4 \times 3 = BC = 12$ மீ

$\therefore$ சாலையின் அகலம் $BD = BC + CD$

$= 12 + 12$

$\boldsymbol{BD = 24}$ மீ

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். 5M

**எ.கா.6.25:** படத்தில் உள்ளவாறு ஒரு சமதளத் தரையில் இரண்டு மரங்கள் உள்ளன. தரையில் உள்ள $X$ என்ற புள்ளியிலிருந்து இரு மர உச்சிகளின் ஏற்றக்கோணமும் 40° ஆகும். புள்ளி $X$-லிருந்து சிறிய மரத்திற்கான கிடைமட்டக் தொலைவு 8 மீ மற்றும் இரண்டு மரங்களின் உச்சிகளுக்கிடையே உள்ள தொலைவு 20 மீ எனில்,

(i) புள்ளி $X$-க்கும் சிறிய மரத்தின் உச்சிக்கும் இடைப்பட்ட தொலைவு

(ii) இரண்டு மரங்களுக்கும் இடையேயுள்ள கிடைமட்டத் தொலைவு $(\cos 40° = 0.7660)$ ஆகியவற்றைக் கணக்கிடுக.

3. ஒருவர் அவருடைய வீட்டிற்கு வெளியில் நின்றுகொண்டு ஒரு ஜன்னலின் உச்சி மற்றும் அடி ஆகியவற்றை முறையே $60^\circ$ மற்றும் $45^\circ$ ஆகிய ஏற்றக்கோணங்களில் காண்கிறார். அவரின் உயரம் 180 செ.மீ. மேலும் வீட்டிலிருந்து 5 மீ தொலைவில் அவர் உள்ளார் எனில், ஜன்னலின் உயரத்தைக் காண்க. $(\sqrt{3} = 1.732)$.

5M JUL-22




$AB =$ ஜன்னல் $= h$

$EF =$ நபர் $= 180$ செ.மீ $= 1.8$ மீ $= CD$

$CF = 5$ மீ

ஜன்னலின் உயரத்தைக் காண வேண்டும்.

செங்கோண $\Delta BCF$ல்

$$\tan 45^\circ = \frac{BC}{5}$$

$$1 = \frac{BC}{5}$$

$\therefore BC = 5$மீ

செங்கோண $\Delta ACF$ ல்

$$\tan 60^\circ = \frac{AC}{5} \Rightarrow \sqrt{3} = \frac{AC}{5} \Rightarrow AC = 5\sqrt{3}$$

$$BC + AB = 5\sqrt{3} \Rightarrow 5 + h = 5\sqrt{3}$$

$$\Rightarrow h = 5\sqrt{3} - 5 = (5 \times 1.732) - 5$$

$$= 8.660 - 5 = 3.66 \text{ மீ}$$

ஜன்னலின் உயரம் $\boldsymbol{h = 3.66}$ **மீ**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

5M

4. 1.6 மீ உயரமுள்ள சிலை ஒன்று பீடத்தின் மேல் அமைந்துள்ளது. தரையிலுள்ள ஒரு புள்ளியிலிருந்து $60^\circ$ ஏற்றக்கோணத்தில் சிலையின் உச்சி அமைந்துள்ளது. மேலும் அதே புள்ளியிலிருந்து பீடத்தின் உச்சியானது $40^\circ$ ஏற்றக்கோணத்தில் உள்ளது எனில், பீடத்தின் உயரத்தைக் காண்க. $(\tan 40^0 = 0.8391, \sqrt{3} = 1.732)$

5. '$r$' மீ ஆரம் கொண்ட அரைக் கோளக் குவிமாடத்தின் மீது 'h' மீ உயரமுள்ள ஒரு கொடிக்கம்பம் நிற்கிறது. குவிமாடத்தின் அடியிலிருந்து 7 மீ தொலைவில் ஒருவர் நிற்கிறார். அவர் கொடிக்கம்பத்தின் உச்சியை $45^\circ$ ஏற்றக் கோணத்திலும் நிற்குமிடத்திலிருந்து மேலும் 5 மீ தொலைவு விலகிச் சென்று கொடிக்கம்பத்தின் அடியை $30^\circ$ ஏற்றக் கோணத்திலும் பார்க்கிறார் எனில், (i) கொடிக்கம்பத்தின் உயரம் (ii) அரைக் கோளக் குவிமாடத்தின் ஆரம் ஆகியவற்றைக் காண்க. $(\sqrt{3} = 1.732)$

**அலகுப்பயிற்சி:**

**5.** 80 மீ உயரமுள்ள மரத்தின் உச்சியில் ஒரு பறவை இருக்கிறது. தரையில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து பறவையின் ஏற்றக்கோணம் $45^\circ$. பறவை ஒரே உயரத்தில் கிடைமட்டத்தில் பறந்து செல்கிறது. 2 வினாடிகள் கழித்து அதே புள்ளியிலிருந்து பறவையின் ஏற்றக்கோணம் $30^\circ$ எனில், பறவை பறக்கும் வேகத்தினைக் காண்க. $(\sqrt{3} = 1.732)$

**6.** விமானம் ஒன்று புவிப் பரப்பிற்கு இணையாக 600 மீ உயரத்தில் 175 மீ/வி வேகத்தில் செல்கிறது. புவியின் மீது ஒரு புள்ளியிலிருந்து விமானத்திற்கு உள்ள ஏற்றக்கோணம் $37^\circ$ ஆகும். அதே புள்ளியிலிருந்து ஏற்றக்கோணம் $53^\circ$ -க்கு அதிகரிக்க எவ்வளவு நேரம் தேவைப்படும்? $(\tan 53^\circ = 1.3270, \tan 37^\circ = 0.7536)$

**எ.கா.6.21:** இரு கப்பல்கள் கலங்கரை விளக்கத்தின் இரு பக்கங்களிலும் கடலில் பயணம் செய்கின்றன. இரு கப்பல்களிலிருந்து கலங்கரை விளக்கத்தின் உச்சியின் ஏற்றக்கோணங்கள் முறையே $30^\circ$ மற்றும் $45^\circ$ ஆகும். கலங்கரை விளக்கத்தின் உயரம் 200 மீ எனில், இரு கப்பல்களுக்கு இடையே உள்ள தொலைவைக் காண்க. $(\sqrt{3} = 1.732)$
**(JUN-23,PTA-5, SEP-21)**

**எ.கா.6.22:** தரையின்மீது ஒரு புள்ளியிலிருந்து 30 மீ உயரமுள்ள கட்டடத்தின் மேலுள்ள ஒரு கோபுரத்தின் அடி மற்றும் உச்சியின் ஏற்றக்கோணங்கள் முறையே $45^\circ$ மற்றும் $60^\circ$ எனில், கோபுரத்தின் உயரத்தைக் காண்க. $(\sqrt{3} = 1.732)$
**(MAY-22)**

**எ.கா .6.23:** ஒரு கால்வாயின் கரையில் ஒரு தொலைக்காட்சிக் கோபுரம் செங்குத்தாக உள்ளது. கால்வாயின் மறு கரையில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து காணும்பொழுது கோபுர உச்சியின் ஏற்றக்கோணம் $58^\circ$ ஆக உள்ளது. அப்புள்ளியிலிருந்து விலகி ஒரே நேர்க்கோட்டில் 20 மீ தொலைவில் சென்றவுடன் கோபுர உச்சியின் ஏற்றக்கோணம் $30^\circ$ எனில், கோபுரத்தின் உயரத்தையும், கால்வாயின் அகலத்தையும் காண்க. $(\tan 58^\circ = 1.6003)$

6. **15 மீ உயரமுள்ள ஒரு கோபுரம் உள்ளது. ஒரு மின் கம்பத்தின் அடி மற்றும் உச்சியிலிருந்து கோபுரத்தின் உச்சியை முறையே $60^\circ$, $30^\circ$ என்ற ஏற்றக்கோணங்களில் பார்த்தால் மின் கம்பத்தின் உயரத்தைக் காண்க.**

5M

$AC =$ கோபுரம் $= 15$ மீ

$DE =$ மின் கம்பம் $= h$

$\therefore BC = h \therefore AB = 15 - h$

$CD = BE = x$ என்க

செங்கோண $\Delta ACD$ ல், $\theta = 60^\circ$

$\tan 60^\circ = \frac{AC}{CD} = \sqrt{3}$

$\frac{15}{x} = \sqrt{3}$

$x = \frac{15}{\sqrt{3}} = \frac{15}{\sqrt{3}} \times \frac{\sqrt{3}}{\sqrt{3}} = \frac{15\sqrt{3}}{3}$

$x = 5\sqrt{3}$ மீ.

செங்கோண $\Delta ABE$ ல்,

$\theta = 30^\circ$

$\tan 30^\circ = \frac{AB}{BE} = \frac{1}{\sqrt{3}}$

$\frac{15-h}{x} = \frac{1}{\sqrt{3}}$ $(\because x = 5\sqrt{3})$

$\frac{15-h}{5\sqrt{3}} = \frac{1}{\sqrt{3}}$

$15 - h = 5$

$h = 15 - 5 = 10$ மீ

மின் கம்பத்தின் உயரம் $= \mathbf{10}$ **மீ**




## தயாரிக்கப்பட்ட வினா

1. **ஒரு சிறுமியின் உயரம் 1.2மீ ஆகும். 88.2 மீ உயரத்தில் கிடைமட்டமாக காற்றில் நகரும் பலூனை அவள் தரையில் நின்றவாறு பார்க்கிறாள். ஒரு புள்ளியில் பலூனின் ஏற்றக்கோணம் $60^\circ$. சிறிது நேரத்தில் மற்றொரு புள்ளியில் பலூனின் ஏற்றக்கோணம் $30^\circ$ ஆகக் குறைகிறது. இந்த இடைவெளியில் பலூன் கடந்த தூரத்தைக் காண்க.**

5M PTA-2

$\Delta ACE$ல், $\frac{AE}{CE} = \tan 60^\circ$

$\frac{88.2-1.2}{CE} = \sqrt{3}$

$CE = 29\sqrt{3}$

$\Delta BCG$ல், $\frac{BG}{CG} = \tan 30^\circ$

$\frac{88.2-1.2}{CG} = \frac{1}{\sqrt{3}}$

$CG = 87\sqrt{3}$ மீ




பலூன் கடந்த தூரம் $= EG = GC - EC$

$= 87\sqrt{3} - 29\sqrt{3} = 58\sqrt{3}$ மீ

## பயிற்சி 6.3

1. **$50\sqrt{3}$ மீ உயரமுள்ள ஒரு பாறையின் உச்சியிலிருந்து $30^\circ$ இறக்கக்கோணத்தில் தரையிலுள்ள மகிழுந்து ஒன்று பார்க்கப்படுகிறது எனில், மகிழுந்திற்கும் பாறைக்கும் இடையேயுள்ள தொலைவைக் காண்க.**

PTA-6, MAY-22

2M

$AB =$ மலையின் உயரம் $= 50\sqrt{3}$

இறக்கக்கோணம் $= 30^0$

செங்கோண $\Delta$ $ABC$ ல்,

$\theta = 30^\circ$

$= \tan 30^0$

$= \frac{AB}{BC}$

$= \frac{1}{\sqrt{3}}$

$= \frac{50\sqrt{3}}{BC}$

$= \frac{1}{\sqrt{3}}$




$BC = 50\sqrt{3} \times \sqrt{3} = 50 \times 3 = 150$ மீ

மகிழுந்திற்கும் பாறைக்கும் இடையேயுள்ள தொலைவு $= \mathbf{150}$ **மீ**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.6.26:** 20 மீ உயரமுள்ள கட்டடத்தின் உச்சியில் ஒரு விளையாட்டு வீரர் அமர்ந்துகொண்டு தரையிலுள்ள ஒரு பந்தை $60^\circ$ இறக்கக்கோணத்தில் காண்கிறார் எனில், கட்டட அடிப்பகுதிக்கும் பந்திற்கும் இடையேயுள்ள தொலைவைக் காண்க. $(\sqrt{3} = 1.732)$ **(PTA-3)** 2M

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

2. இரண்டு கட்டடங்களுக்கு இடைப்பட்ட கிடைமட்டத் தொலைவு 70 மீ ஆகும். இரண்டாவது கட்டடத்தின் உச்சியிலிருந்து முதல் கட்டடத்தின் உச்சிக்கு உள்ள இறக்கக்கோணம் $45°$ ஆகும். இரண்டாவது கட்டடத்தின் உயரம் 120 மீ எனில் முதல் கட்டடத்தின் உயரத்தைக் காண்க. 2M

**எ.கா.6.27:** இரண்டு கட்டடங்களுக்கு இடையேயுள்ள கிடைமட்டத் தொலைவு 140 மீ. இரண்டாவது கட்டிடத்தின் உச்சியிலிருந்து முதல் கட்டடத்தின் உச்சிக்கு உள்ள இறக்கக்கோணம் $30°$ ஆகும். முதல் கட்டடத்தின் உயரம் 60 மீ எனில் இரண்டாவது கட்டடத்தின் உயரத்தைக் காண்க. $(\sqrt{3} = 1.732)$ 5M

**எ.கா.6.28:** 50 மீ உயரமுள்ள ஒரு கோபுரத்தின் உச்சியிலிருந்து ஒரு மரத்தின் உச்சி மற்றும் அடி ஆகியவற்றின் இறக்கக்கோணங்கள் முறையே $30°$ மற்றும் $45°$ எனில், மரத்தின் உயரத்தைக் காண்க. $(\sqrt{3} = 1.732)$ 5M

**3. 60 மீ உயரமுள்ள கோபுரத்தின் உச்சியிலிருந்து செங்குத்தாக உள்ள ஒரு விளக்குக் கம்பத்தின் உச்சி மற்றும் அடியின் இறக்கக்கோணங்கள் முறையே $38°$ மற்றும் $60°$ எனில், விளக்குக் கம்பத்தின் உயரத்தைக் காண்க. $(\tan 38^0 = 0.7813, \sqrt{3} = 1.732)$** 5M SEP-20

$AB =$ கோபுரம் $= 60$ மீ
$CD =$ விளக்குக் கம்பம் $= h$
$AE = x$
$CD = BE = 60 - x = h$
செங்கோண $\Delta\ AEC$ ல்
$\tan 38° = \frac{AE}{DE} = 0.7813$
$DE = \frac{x}{0.7813}$ ……………………. (1)
செங்கோண $\Delta\ ABC$ ல், $\theta = 60^0$
$\tan 60° = \frac{AB}{BC} = \sqrt{3}$
$\frac{60}{BC} = \sqrt{3}$

$BC = \frac{60}{\sqrt{3}} = \frac{60}{\sqrt{3}} \times \frac{\sqrt{3}}{\sqrt{3}} = \frac{60\sqrt{3}}{3} = 20\sqrt{3}$
$BC = DE$
$\therefore DE = 20\sqrt{3}$ ……………. (2)
(1) & (2) லிருந்து
$DE \Rightarrow \frac{x}{0.7813} = 20\sqrt{3}$
$x = 20\sqrt{3} \times 0.7813$
$x = 20 \times 1.732 \times 0.7813$
$x = 27.064$ மீ
விளக்குக் கம்பத்தின் உயரம்
$h = 60 - x = 60 - 27.064$
$\boldsymbol{h = 32.93}$ **மீ**




**4. 1800மீ உயரத்தில் பறக்கும் ஒரு விமானத்திலிருந்து ஒரே திசையில் விமானத்தை நோக்கிச் செல்லும் இரு படகுகள் பார்க்கப்படுகிறது. விமானத்திலிருந்து இரு படகுகளை முறையே $60°$ மற்றும் $30°$ இறக்கக்கோணங்களில் உற்று நோக்கினால், இரண்டு படகுகளுக்கும் இடைப்பட்டத் தொலைவைக் காண்க. $(\sqrt{3} = 1.732)$** 5M

$AB =$ தரையிலிருந்து விமானத்தின் உயரம் $= 1800$ மீ
$C =$ படகு 1, $D =$ படகு 2
$CD =$ இரு படகுகளுக்கு இடைப்பட்ட தூரம்
செங்கோண $\Delta\ ABC$ ல், $\theta = 60°$
$\tan 60^0 = \frac{AB}{BC} \Rightarrow \sqrt{3} = \frac{1800}{y}$
$\frac{1800}{y} = \sqrt{3}$
$y = \frac{1800}{\sqrt{3}} \times \frac{\sqrt{3}}{\sqrt{3}} = \frac{1800\sqrt{3}}{3}$
$y = 600\sqrt{3}$ மீ……………. (1)

செங்கோண $\Delta\ ABD$ ல், $\theta = 30°$
$\tan 30° = \frac{AB}{BD} = \frac{1}{\sqrt{3}}$
$\frac{1800}{x+y} = \frac{1}{\sqrt{3}}$
$x + y = 1800\sqrt{3}$………… (2)
(1) ஐ (2) ல் பிரதியிட
$x + 600\sqrt{3} = 1800\sqrt{3}$
$x = 1800\sqrt{3} - 600\sqrt{3}$
$x = 1200\sqrt{3}$
$x = 1200 \times 1.732 = 2078.4$ மீ
இரு படகுகளுக்கும் இடைப்பட்ட தொலைவு
$= \mathbf{2078.4}$ **மீ**




**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.6.29:** 60 மீ உயரமுள்ள கலங்கரை விளக்கத்தின் உச்சியிலிருந்து ஒருவர் கடல்மட்டத்திலுள்ள இரு கப்பல்களை முறையே $28°$ மற்றும் $45°$ இறக்கக்கோணத்தில் பார்க்கிறார். ஒரு கப்பல் மற்றொரு கப்பலுக்குப் பின்னால் ஒரே திசையில் கலங்கரை விளக்கத்துடன் நேர்கோட்டில் உள்ளது எனில், இரண்டு கப்பல்களுக்கும் இடையேயுள்ள தொலைவைக் காண்க. $(\tan 28° = 0.5317)$ **(PTA-1)** 5M

**எ.கா.6.30:** ஒருவர் கோபுரத்திலிருந்து விலகி கடலில் சென்று கொண்டிருக்கும் படகு ஒன்றை, கோபுரத்தின் உச்சியிலிருந்து பார்க்கிறார். கோபுரத்தின் அடியிலிருந்து 200 மீ தொலைவில் படகு இருக்கும் போது, படகை அவர் $60°$ இறக்கக்கோணத்தில் காண்கிறார். 10 வினாடிகள் கழித்து இறக்கக்கோணம் $45°$ ஆக மாறுகிறது எனில், படகு செல்லும் வேகத்தினைத் (கி.மீ/மணியில்) தோராயமாகக் கணக்கிடுக. மேலும் படகு நிலையான தண்ணீரில் செல்கிறது எனக் கருதுக. $(\sqrt{3} = 1.732)$

**5. ஒரு கலங்கரை விளக்கத்தின் உச்சியிலிருந்து எதிரெதிர் பக்கங்களில் உள்ள இரண்டு கப்பல்கள் $30^\circ$ மற்றும் $60^\circ$ இறக்கக்கோணத்தில் பார்க்கப்படுகின்றன. கலங்கரை விளக்கத்தின் உயரம் $h$ மீ. இரு கப்பல்கள் மற்றும் கலங்கரை விளக்கத்தின் அடிப்பகுதி ஆகியவை ஒரே நேர்கோட்டில் அமைகின்றன எனில், இரண்டு கப்பல்களுக்கு இடைப்பட்ட தொலைவு $\frac{4h}{\sqrt{3}}$ மீ என நிரூபிக்க.** APR-23 5M

$A \to$ கப்பல் 1.
$B \to$ கப்பல் 2
$CD =$ கலங்கரை விளக்கம் $= h$ மீ
$AD = x$ , $BD = y$ என்க
செங்கோண $\Delta\, ADC$ ல், $\theta = 30^0$

$\tan 30^\circ = \frac{CD}{AD} = \frac{1}{\sqrt{3}}$

$\frac{h}{x} = \frac{1}{\sqrt{3}}$

$x = \sqrt{3}h$ ................ (1)

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும்.

செங்கோண $\Delta\, BDC$ ல், $\theta = 60^0$

$\tan 60^\circ = \frac{CD}{BD} = \sqrt{3}$

$\frac{h}{y} = \sqrt{3}$

$y = \frac{h}{\sqrt{3}}$.................. (2)

இரண்டு கப்பல்களுக்கு இடைப்பட்ட தொலைவு (1) + (2)

$x + y = \sqrt{3}h + \frac{h}{\sqrt{3}} = \frac{3h+h}{\sqrt{3}}$

$\boldsymbol{AB = \frac{4h}{\sqrt{3}}}$ **மீ,** நிரூபிக்கப்பட்டது.




**அலகுப்பயிற்சி: 8.** கலங்கரை விளக்கம் இருக்கும் இடத்திலிருந்து கடலில் எதிரெதிர் திசையில் இரு கப்பல்கள் பயணம் செய்கின்றன. கலங்கரை விளக்கத்தின் உச்சியிலிருந்து இரு கப்பல்களின் இறக்கக்கோணங்கள் முறையே $60^\circ$ மற்றும் $45^\circ$. கப்பல்களுக்கு இடையே உள்ள தொலைவு $200\left(\frac{\sqrt{3}+1}{\sqrt{3}}\right)$ மீ எனில், கலங்கரை விளக்கத்தின் உயரம் காண்க. 5M

**6. 90 அடி உயரமுள்ள கட்டடத்தின் மேலிருந்து ஒளி ஊடுருவும் கண்ணாடிச் சுவர் கொண்ட மின் தூக்கியானது கீழ் நோக்கி வருகிறது. கட்டடத்தின் உச்சியில் மின் தூக்கி இருக்கும்போது பூந்தோட்டத்தில் உள்ள ஒரு நீரூற்றின் இறக்கக்கோணம் $60^\circ$ ஆகும். இரண்டு நிமிடம் கழித்து அதன் இறக்கக்கோணம் $30^\circ$ ஆக குறைகிறது. மின்தூக்கியின் நுழைவு வாயிலிருந்து நீரூற்று $30\sqrt{3}$ அடி தொலைவில் உள்ளது எனில் மின்தூக்கி கீழே வரும் வேகத்தைக் காண்க.** 5M

$AB =$ மின் தூக்கி $= 90$ அடி, $C =$ நீரூற்று
$BC = 30\sqrt{3}$ அடி , $AD = x$
(2 நிமிடத்தில் மின் தூக்கி கடந்த தூரம்)
செங்கோண $\Delta\, DBC$ ல்,
$\theta = 30^0$

$\tan 30^\circ = \frac{DB}{BC} = \frac{1}{\sqrt{3}}$

$\frac{90-x}{30\sqrt{3}} = \frac{1}{\sqrt{3}} = 90 - x = \frac{30\sqrt{3}}{\sqrt{3}}$

$90 - x = 30$
$x = 60$ அடி

வேகம் $= \frac{\text{தூரம்}}{\text{நேரம்}}$

தூரம் $= 60$ அடி
$\therefore$ நேரம் $= 2$ நிமிடம்

வேகம் $= \frac{60 \text{ அடி}}{2 \text{ நிமிடம்}} = 30$

**வேகம் $= 30$ அடி/நிமிடம்**




## பயிற்சி 6.4

**1. 13 மீ உயரமுள்ள ஒரு மரத்தின் உச்சியிலிருந்து மற்றொரு மரத்தின் உச்சி மற்றும் அடியின் ஏற்றக்கோணம் மற்றும் இறக்கக்கோணம் முறையே $45^\circ$ மறறும் $30^\circ$ எனில், இரண்டாவது மரத்தின் உயரத்தைக் காண்க. $(\sqrt{3} = 1.732)$** 5M

$AB =$ மரம் 1 $= 13$ மீ,
$CD =$ மரம் 2 $= 13 + x$
$DE = x$
$AE = BC = y$
செங்கோண $\Delta\, AED$ல், $\theta = 45^\circ$

$\tan 45^\circ = \frac{DE}{AE} = 1$

$\frac{x}{y} = 1$

$x = y$

செங்கோண $\Delta\, ABC$ ல், $\theta = 30^\circ$

$\tan 30^\circ = \frac{AB}{BC} = \frac{1}{\sqrt{3}} = \frac{13}{y} = \frac{1}{\sqrt{3}}$

$y = 13\sqrt{3} = 13 \times 1.732 = 22.516$

$x = y$

$\therefore x = 22.516$

இரண்டாவது மரத்தின் உயரம்

$= x + 13 = 22.516 + 13 = 35.516$ மீ

$\boldsymbol{h = 35.52}$ **மீ**



**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

2. கடலின் நீர் மட்டத்திலிருந்து 40 மீட்டருக்கு மேலே உள்ள ஒரு கப்பலின் மேல் பகுதியில் நின்று கொண்டிருக்கிற ஒருவர், குன்றின் உச்சியை $60^\circ$ ஏற்றக்கோணத்திலும் அடிப்பகுதியை $30^\circ$ இறக்கக்கோணத்திலும் காண்கிறார் எனில், கப்பலிலிருந்து குன்றுக்கு உள்ள தொலைவையும், குன்றின் உயரத்தையும் காண்க. $(\sqrt{3} = 1.732)$ **5M**

**எ.கா.6.31:** 12 மீ உயரமுள்ள கட்டிடத்தின் உச்சியிலிருந்து மின்சாரக் கோபுர உச்சியின் ஏற்றக்கோணம் $60^\circ$ மற்றும் அதன் அடியில் இறக்கக்கோணம் $30^\circ$ எனில், மின்சாரக் கோபுரத்தின் உயரத்தைக் காண்க.

**எ.கா.6.32:** ஒரு கோபுர உச்சியின் மீது 5மீ உயரமுள்ள கம்பம் பொருத்தி வைக்கப்பட்டுள்ளது. தரையில் உள்ள '$A$' என்ற புள்ளியிலிருந்து கம்பத்தின் உச்சியை $60^\circ$ ஏற்றக்கோணத்திலும், கோபுரத்தின் உச்சியிலிருந்து '$A$' என்ற புள்ளியை $45^\circ$ இறக்கக் கோணத்திலும் பார்த்தால், கோபுரத்தின் உயரத்தைக் காண்க. $(\sqrt{3} = 1.732)$

**3. ஏரியின் நீர் மட்டத்திலிருந்து '$h$' மீ உயரத்திலுள்ள ஒரு புள்ளியிலிருந்து ஒரு மேகத்தின் ஏற்றக்கோணம் $\theta_1$ மற்றும் ஏரி நீரில் விழும் மேகப் பிம்பத்தின் இறக்கக்கோணம் $\theta_2$ எனில், தரையிலிருந்து மேகத்தின் உயரம் $\frac{h(\tan\theta_1+\tan\theta_2)}{\tan\theta_2-\tan\theta_1}$ என நிரூபிக்கவும்.** **5M**

$AB \rightarrow$ ஏரியின் பரப்பு

$C \rightarrow$ மேகம்

$C' \rightarrow$ ஏரி நீரில் விழும் மேகப் பிம்பம்

கொடுக்கப்பட்டது,

$AD = h,$

$DE = AB$

தரையிலிருந்து மேகக்கூட்டத்தின் உயரம் $= h + x$

செங்கோண $\Delta\, DEC$ ல்,

$\tan\theta_1 = \frac{x}{DE}$

$DE = \frac{x}{\tan\theta_1}$ .................. (1)

செங்கோண $\Delta\, DEC'$ ல்

$\tan\theta_2 = \frac{EC'}{DE}$

$= \frac{h+y}{DE}$

$\tan\theta_2 = \frac{h+x+h}{DE}$ $[\because y = x + h]$

$DE = \frac{2h+x}{\tan\theta_2}$ ................ (2)




(1) மற்றும் (2) லிருந்து

$\frac{x}{\tan\theta_1} = \frac{2h+x}{\tan\theta_2}$

$x\tan\theta_2 = 2h\tan\theta_1 + x\tan\theta_1$

$x\tan\theta_2 - x\tan\theta_1 = 2h\tan\theta_1$

$x[\tan\theta_2 - \tan\theta_1] = 2h\tan\theta_1$

$x = \frac{2h\tan\theta_1}{\tan\theta_2-\tan\theta_1}$

தரையிலிருந்து மேகக்கூட்டத்தின் உயரம்

$= x + h$

$= \frac{2h\tan\theta_1}{\tan\theta_2-\tan\theta_1} + h$

$= \frac{2h\tan\theta_1+h\tan\theta_2-h\tan\theta_1}{\tan\theta_2-\tan\theta_1}$

$= \frac{h\tan\theta_1+h\tan\theta_2}{\tan\theta_2-\tan\theta_1}$

$= \frac{h[\tan\theta_1+\tan\theta_2]}{\tan\theta_2-\tan\theta_1}$

நிரூபிக்கப்பட்டது.

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.6.33:** ஒரு தெருவில் உள்ள ஒரு வீட்டின் சன்னலிலிருந்து, (சன்னல் தரைக்கு மேல் $h$ மீ உயரத்தில் உள்ளது) தெருவின் எதிர்ப் பக்கத்தில் உள்ள மற்றொரு வீட்டின் உச்சி, அடி ஆகியவற்றின் ஏற்றக்கோணம், இறக்கக்கோணம் முறையே $\theta_1$ மற்றும் $\theta_2$ எனில், எதிர்ப்பக்கத்தில் அமைந்த வீட்டின் உயரம் $h\left(1+\frac{\cot\theta_2}{\cot\theta_1}\right)$ என நிரூபிக்க. **5M**

**4. உயரமான அடுக்குமாடிக் குடியிருப்பின் அடியிலிருந்து அலைபேசி கோபுர உச்சியின் ஏற்றக்கோணம் $60°$ மற்றும் குடியிருப்பின் உச்சியிலிருந்து கோபுர அடியின் இறக்கக்கோணம் $30°$ ஆகும். அடுக்குமாடி குடியிருப்பின் உயரம் 50 மீ எனில் அலைபேசிக் கோபுரத்தின் உயரத்தைக் காண்க. கதிர்வீச்சுக் கட்டுப்பாடு விதியின்படி அலைபேசிக் கோபுரத்தின் குறைந்தபட்ச உயரம் 120 மீ இருக்க வேண்டும். மேற்கண்ட அலைக்கோபுரம் இந்தக் கட்டுப்பாட்டிற்கு உட்படுகிறதா?**

5M

$AB \rightarrow$ அலைபேசி கோபுரம்

$= AE + EB = (x + 50)$ மீ

$CD \rightarrow$ அடுக்குமாடி குடியிருப்பு $= 50$ மீ

செங்கோண $\Delta\, BCD$ல் $\theta = 30^{\circ}$

$\tan 30^{\circ} = \frac{CD}{BC} = \frac{1}{\sqrt{3}}$

$\frac{50}{BC} = \frac{1}{\sqrt{3}}$

$BC = 50\sqrt{3}$ .................. (1)

செங்கோண $\Delta\ ABC$-ல்

$\tan 60^{0} = \frac{AB}{BC} = \sqrt{3}$

$\frac{x+50}{BC} = \sqrt{3}$

$BC = \frac{x+50}{\sqrt{3}}$ .................. (2)

(1) மற்றும் (2)-லிருந்து

$50\sqrt{3} = \frac{x+50}{\sqrt{3}}$

$x + 50 = 50\sqrt{3} \times \sqrt{3}$

$x + 50 = 50 \times 3$

$x + 50 = 150$

$x = 150 - 50$

$x = 100$ மீ




$\therefore$ அலைபேசி கோபுரத்தின் உயரம் $AB$

$AB = x + 50 = 100 + 50$

$= \mathbf{150}$ **மீ**

ஆம், கதிர்வீச்சுக் கட்டுப்பாடு விதியின்படி அலைபேசிக் கோபுரத்தின் குறைந்தபட்ச உயரம் **120 மீ** இருக்க வேண்டும். மேற்கண்ட அலைக்கோபுரம் 150மீ உயரம் உள்ளதால், இந்தக் கட்டுப்பாட்டிற்கு **உட்படுகிறது.**

**5. 66 மீ உயரமான அடுக்குமாடிக் குடியிருப்பின் உச்சியிலிருந்து ஒரு விளக்குக் கம்பத்தின் உச்சி மற்றும் அடியின் ஏற்றக்கோணம் மற்றும் இறக்கக்கோணம் முறையே $60°$, $30°$ எனில் பின்வருவனவற்றைக் காண்க.**

**(i) விளக்குக் கம்பத்தின் உயரம்.**

**(ii) விளக்குக் கம்ப உயரத்திற்கும் அடுக்குமாடியின் உயரத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசம்.**

**(iii) விளக்குக் கம்பத்திற்கும் அடுக்குமாடிக்கும் இடையே உள்ள தொலைவு. $(\sqrt{3} = 1.732)$**

5M




$CD =$ அடுக்குமாடி குடியிருப்பு $= 66$ மீ

$AB =$ விளக்குக் கம்பம்

$AB = x + 66$

$BC = DE$

செங்கோண $\Delta\ BCD$-ல், $\theta = 30^{\circ}$

$\tan 30^{\circ} = \frac{CD}{BC} = \frac{1}{\sqrt{3}} \Rightarrow \frac{66}{BC} = \frac{1}{\sqrt{3}}$

$BC = 66\sqrt{3}$ .................. (1)

செங்கோண $\Delta\, AED$ல், $\theta = 60^{\circ}$

$\tan 60^{\circ} = \frac{AE}{ED} = \sqrt{3}$

$\frac{x}{BC} = \sqrt{3}$

$x = \sqrt{3} \times BC$

$= \sqrt{3} \times 66\sqrt{3}$

$= 66 \times 3$

$x = 198$ மீ

(i) விளக்குக் கம்பத்தின் உயரம் $= x + 66$

$= 198 + 66 = \mathbf{264}$ **மீ**

(ii) விளக்குக் கம்ப உயரத்திற்கும் அடுக்குமாடியின் உயரத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசம்.

$= 264 - 66 = \mathbf{198}$ **மீ**

(iii) விளக்குக் கம்பத்திற்கும் அடுக்குமாடிக்கும் இடையே உள்ள தொலைவு$= BC$

$= 66\sqrt{3}$

$= 66 \times 1.732$

$= \mathbf{114.31}$ **மீ**

6. $A, B$ மற்றும் $C$ என்ற மூன்று கிராமவாசிகள் ஒரு பள்ளத்தாக்கில் ஒருவருக்கொருவர் தொலைநோக்கியில் பார்க்குமாறு உள்ளனர். $A$-க்கும், $B$-க்கும் இடைப்பட்ட கிடைமட்டத் தொலைவு 8 கி.மீ மற்றும் $B$-க்கும், $C$-க்கும் இடைப்பட்ட கிடைமட்டத் தொலைவு 12 கி.மீ. $A$-லிருந்து $B$-க்கு உள்ள இறக்கக்கோணம் $20°$ மற்றும் $B$-லிருந்து $C$-க்கும் உள்ள ஏற்றக்கோணம் $30°$ எனில் பின்வருவனவற்றைக் கணக்கிடுக.




(i) $A$-க்கும் $B$-க்கும் இடையேயுள்ள செங்குத்து உயரம்.

(ii) $B$-க்கும் $C$-க்கும் இடையேயுள்ள செங்குத்து உயரம். $(\tan 20^0 = 0.3640, \sqrt{3} = 1.732)$ **5M**

செங்கோண $\Delta\, ADB$

$\theta = 20^0$

$\tan 20^0 = \dfrac{AD}{BD} = 0.3640$

$\dfrac{x}{8} = 0.3640$

$x = 0.3640 \times 8$

$x = 2.9120$

செங்கோண $\Delta\, BEC$

$\theta = 30^0$

$\tan 30^0 = \frac{EC}{BE} = \frac{1}{\sqrt{3}} = \frac{y}{12} = \frac{1}{\sqrt{3}}$

$y = \frac{12}{\sqrt{3}} \times \frac{\sqrt{3}}{\sqrt{3}}$

$= \frac{12\sqrt{3}}{3}$

$= 4\sqrt{3} = 4 \times 1.732$

$y = 6.928$

(i) $A$-க்கும் $B$-க்கும் இடையேயுள்ள செங்குத்து உயரம்.

$x = 2.91$ கி.மீ

(ii) $B$-க்கும் $C$-க்கும் இடையேயுள்ள செங்குத்து உயரம்.

$y = 6.93$ கி.மீ

## அலகுப் பயிற்சி - 6

**அலகுப்பயிற்சிக்கான குறிப்பு**

வினா எண்: 1(ii) – பயிற்சி 6.1ல் - 2 (i) ஆம் வினா போன்றது.
வினா எண்: 3,4 – பயிற்சி 6.1 ல் - 9 ஆம் வினா போன்றது.
வினா எண்: 5,6 – பயிற்சி 6.2 ல் - 3 ஆம் வினா போன்றது.
வினா எண்: 8 – பயிற்சி 6.3 ல் - 5 ஆம் வினா போன்றது.

1. **நிரூபிக்கவும்** **2M**

(i) $\cot^2 A\left[\frac{\sec A-1}{1+\sin A}\right] + \sec^2 A\left[\frac{\sin A-1}{1+\sec A}\right] = 0$

LHS: $\cot^2 A\left[\frac{\sec A-1}{1+\sin A}\right] + \sec^2 A\left[\frac{\sin A-1}{1+\sec A}\right]$

$= \frac{\cot^2 A[(\sec A-1)(\sec A+1)]+\sec^2 A[(\sin A-1)(\sin A+1)]}{(1+\sin A)(1+\sec A)}$

$= \frac{\cot^2 A(\sec^2 A-1)+\sec^2 A(\sin^2-1)}{(1+\sin A)(1+\sec A)}$

$= \frac{\cot^2 A.\tan^2 A+\sec^2 A(\sin^2 A-1)}{(1+\sin A)(1+\sec A)}$

$= \frac{1+\sec^2 A(\sin^2 A-1)}{(1+\sin A)(1+\sec A)}$

$= \frac{1-\sec^2 A(1-\sin^2 A)}{(1+\sin A)(1+\sec A)}$

$= \frac{1-\sec^2 A.\cos^2 A}{(1+\sin A)(1+\sec A)}$

$= \frac{1-1}{(1+\sin A)(1+\sec A)}$

$= \mathbf{0}$ : RHS

$\cot^2 A\ \tan^2 A$

$= \frac{1}{\tan^2 A}\tan^2 A$

2. $\left[\frac{1+\sin\theta-\cos\theta}{1+\sin\theta+\cos\theta}\right]^2 = \frac{1-\cos\theta}{1+\cos\theta}$ **என்பதை நிரூபிக்கவும்.** **5M**

$LHS: \left[\frac{1+\sin\theta-\cos\theta}{1+\sin\theta+\cos\theta}\right]^2$

$= \frac{(1+\sin\theta)^2+\cos^2\theta-2(1+\sin\theta)(\cos\theta)}{(1+\sin\theta)^2+\cos^2\theta+2(1+\sin\theta)(\cos\theta)}$

$= \frac{1+2\sin\theta+\sin^2\theta+\cos^2\theta-2\cos\theta-2\sin\theta.\cos\theta}{1+2\sin\theta+\sin^2\theta+\cos^2\theta+2\cos\theta+2\sin\theta.\cos\theta}$

$= \frac{1+2\sin\theta+1-2\cos\theta-2\sin\theta.\cos\theta}{1+2\sin\theta+1+2\cos\theta+2\sin\theta.\cos\theta}$

$= \frac{2+2\sin\theta-2\cos\theta-2\sin\theta.\cos\theta}{2+2\sin\theta+2\cos\theta+2\sin\theta.\cos\theta}$

$= \frac{2(1+\sin\theta-\cos\theta-\sin\theta.\cos\theta)}{2(1+\sin\theta+\cos\theta+\sin\theta.\cos\theta)}$

$= \frac{1+\sin\theta-\cos\theta-\sin\theta.\cos\theta}{1+\sin\theta+\cos\theta+\sin\theta.\cos\theta}$

$= \frac{(1+\sin\theta)-\cos\theta(1+\sin\theta)}{(1+\sin\theta)+\cos\theta(1+\sin\theta)} = \frac{\cancel{1+\sin\theta}[1-\cos\theta]}{\cancel{1+\sin\theta}[1+\cos\theta]}$

$= \frac{\mathbf{1-\cos\theta}}{\mathbf{1+\cos\theta}}$ : $RHS$ எனவே, நிரூபிக்கப்பட்டது.

7. ஒரு பறவை $A$ என்ற இடத்திலிருந்து $30$ கி.மீ தொலைவில் $B$ என்ற இடத்திற்கு $35°$ கோணத்தில் பறக்கிறது. $B$-ல் $48^{\circ}$ கோணத்திலிருந்து விலகி $32$ கி.மீ தொலைவில் உள்ள $C$ என்ற இடத்திற்குச் செல்கிறது, (i) $A$-ன் வடக்குப் புறமாக $B$-ன் தொலைவு எவ்வளவு? (ii) $A$-ன் மேற்குப் புறமாக $B$-ன் தெலைவு எவ்வளவு? (iii) $B$-ன் வடக்குப் புறமாக $C$-ன் தொலைவு எவ்வளவு? (iv) $B$-ன் கிழக்குப் புறமாக $C$-ன் தொலைவு எவ்வளவு?
$(\sin 55^{\circ} = 0.8192, \cos 55^{\circ} = 0.5736, \sin 42^{\circ} = 0.6691, \cos 42^{\circ} = 0.7431)$ 5M

**(i)** $A$-ன்வடக்குப் புறமாக$B$-ன் தொலைவு $= BF$

செங்கோண $\Delta\, BFA$ல், $\theta = 55^{\circ} \quad (90 - 35^{\circ})$

$sin\ 55^{\circ} \Rightarrow \frac{BF}{AB} = 0.8192$

$\frac{BF}{30} = 0.8192 \qquad [AB = 30\,]$

$BF = 30 \times 0.8192 \quad = 24.576$

$\boldsymbol{BF = 24.58}$ **கி.மீ (தோராயமாக)**

**(ii)** $A$-ன் மேற்குப்புறமாக $B$-ன் தெலைவு$=$ AF

செங்கோண $\Delta\ BFA$ ல்,

$\theta = 55^{\circ} \quad (90 - 35^{\circ})$

$cos\ 55^{\circ} \Rightarrow \frac{AF}{AB} = 0.5736$

$\frac{AF}{30} = 0.5736$

$AF = 0.5736 \times 30$

$\quad = 17.208$

$\boldsymbol{AF = 17.21}$ **கி.மீ (தோராயமாக)**

**(iii)** $B$-ன் வடக்குப்புறமாக $C$-ன் தொலைவு $=$ GC

செங்கோண $\Delta BGC$ ல்,

$\theta = 42^{\circ} \quad (90^{\circ} - 48^{\circ})$

$\sin 42^{\circ} \Rightarrow \frac{GC}{BC} = 0.6691$

$\frac{GC}{32} = 0.6691$

$GC = 0.6691 \times 32$

$\boldsymbol{GC = 21.41}$ **கி.மீ (தோராயமாக)**




**(iv)** $B$-ன் கிழக்குப் புறமாக $C$-ன் தொலைவு $=$ EC

செங்கோண $\Delta\ BEC$ ல்,

$\sin 48^{\circ} = \frac{EC}{BC}$

$\cos 42^{\circ} \Rightarrow \frac{EC}{32} = 0.7431 \quad [BC = 32\,]$

$EC = 32 \times 0.7431$

$\quad = 23.779$

$\boldsymbol{EC = 23.78}$**கி.மீ (தோராயமாக)**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

5M

**எ.கா.6.24:** ஒரு விமானம் $G$-யிலிருந்து $24°$ கோணத்தைத் தாங்கி $250$ கி.மீ தொலைவிலுள்ள $H$-ஐ நோக்கிச் செல்கிறது. மேலும் $H$-லிருந்து $55°$ விலகி $180$ கி.மீ தொலைவிலுள்ள $J$-ஐ நோக்கிச் செல்கிறது எனில்,
(i) $G$-ன் வடக்கு திசையிலிருந்து $H$-ன் தொலைவு என்ன? (ii) $G$-ன் கிழக்கு திசையிலிருந்து $H$-ன் தொலைவு என்ன?
(iii) $H$-ன் வடக்கு திசையிலிருந்து $J$-ன் தொலைவு என்ன?
(iv) $H$-ன் கிழக்கு திசையிலிருந்து $J$-ன் தொலைவு என்ன?
$\begin{bmatrix}\sin 24° = 0.4067 & \sin 11° = 0.1908\\ \cos 24° = 0.9135 & \cos 11° = 0.9816\end{bmatrix}$

9. ஒரு தெருவில் கட்டடமும், சிலையும் எதிரெதிர்த் திசையில் 35 மீ இடைவெளியில் அமைந்துள்ளன. கட்டடத்தின் உச்சியிலிருந்து, சிலை உச்சியின் ஏற்றக்கோணம் $24^{\circ}$ மற்றும் சிலை அடியின் இறக்கக்கோணம் $34^{\circ}$ எனில், சிலையின் உயரம் என்ன? $(\tan 24^{\circ} = 0.4452, tan\ 34^{\circ} = 0.6745)$

$AB =$ கட்டிடம் $= y$

$CE =$ சிலை $= x + y$

$BC = AD = 35$ மீ

(கட்டடத்திற்கும் சிலைக்கும் உள்ள தூரம் $= BC$)

செங்கோண $\Delta\, ADE$ ல்,

$tan\ 24^{\circ} = \frac{ED}{AD} = 0.4452$

$\frac{x}{35} = 0.4452$

$x = 35 \times 0.4452$

$x = 15.582$




5M PTA-4

செங்கோண $\Delta ABC$-ல்,

$tan\ 34^{\circ} \Rightarrow \frac{AB}{BC} = 0.6745$

$\frac{y}{35} = 0.6745$

$y = 0.6745 \times 35$

$\quad = 23.6075$

சிலையின் உயரம்

$CE = x + y$

$\quad = 15.582 + 23.608$

$\quad = 39.189$

$CE = 39.19$ மீ

சிலையின் உயரம் $= \mathbf{39.19}$ **மீ**

# 7. அளவியல்

## பயிற்சி 7.1

**1. ஓர் உருளையின் ஆரம் மற்றும் உயரங்களின் விகிதம் $5:7$ ஆகும். அதன் வளைபரப்பு $5500$ ச.செ.மீ எனில், உருளையின் ஆரம் மற்றும் உயரம் காண்க.**

APR-23, JUL-22

2M

$\frac{\text{ஆரம்}}{\text{உயரம்}} = \frac{r}{h} = \frac{5}{7} \Rightarrow r = \frac{5h}{7}$ ................(1)

உருளையின் வளைபரப்பு $= 2\pi rh = 5500$

$$2 \times \frac{22}{7} \times \frac{5h}{7} \times h = 5500$$




r:h = 5:7

$$h^2 = \frac{5500 \times 7 \times 7}{2 \times 22 \times 5} \times 7 = 35 \Rightarrow h = 35 \text{ செ.மீ}$$

$h = 35$ என (1)-ல் பிரதியிட, $r = \frac{5(35)}{7} = 25$ செ.மீ **$r = 25$ செ.மீ, $h = 35$ செ.மீ**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

2. ஒரு திண்ம இரும்பு உருளையின் மொத்தப் புறப்பரப்பு 1848 ச.செ.மீ மேலும் அதன் வளைபரப்பு, மொத்தப் புறப்பரப்பில் ஆறில் ஐந்து பங்காகும் எனில், இரும்பு உருளையின் ஆரம் மற்றும் உயரம் காணவும். 5M

**எ.கா. 7.1** ஓர் உருளை வடிவப் பீப்பாயின் உயரம் 20 செ.மீ மற்றும் அடிப்புற ஆரம் 14 செ.மீ எனில், அதன் வளைபரப்பு மற்றும் மொத்தப் புறப்பரப்பைக் காண்க. **(JUL-22)** 5M

**எ.கா. 7.2:** 88 ச.செ.மீ வளைபரப்புடைய ஒரு நேர்வட்ட உருளையின் உயரம் 14 செ.மீ எனில், உருளையின் விட்டம் காண்க. **(JUN-23)** 2M

**3. ஓர் உள்ளீடற்ற மர உருளையின் வெளிப்புற ஆரம் மற்றும் நீளம் முறையே 16 செ.மீ மற்றும் 13 செ.மீ ஆகும். அதன் தடிமன் 4 செ.மீ எனில் உருளையின் மொத்தப் புறப்பரப்பு எவ்வளவு?**

கொடுக்கப்பட்டது: வெளிப்புற ஆரம் (R) =16 செ.மீ

உட்புற ஆரம் (r) = 16 − 4 =12 செ.மீ 2M

[∵அகலம்=4 செ.மீ]




நீளம் (உயரம்) = 13 செ.மீ

உள்ளீடற்ற உருளையின் மொத்தப் புறப்பரப்பு

$= 2\pi(R + r)(R - r + h)$

$= 2 \times \frac{22}{7} \times (16 + 12)(16 - 12 + 13)$

$= 2 \times \frac{22}{7} \times 28 \times 17$

**$= 2992$ ச.செ.மீ**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா. 7.4:** 2M

தடிமன் 2 மீ, உட்புற ஆரம் 6 மீ & உயரம் 25 மீ உடைய ஓர் உருளை வடிவ சுரங்கப்பாதையின் உள் மற்றும் வெளிப்புறப் பரப்புகளுக்கு வர்ணம் பூசப்படுகிறது. ஒரு லிட்டர் வர்ணத்தைக் கொண்டு 10 ச.மீ பூச முடியுமானால், சுரங்கப்பாதைக்கு வர்ணம் பூச எத்தனை லிட்டர் வர்ணம் தேவை?

**4. $PQR$ என்ற செங்கோண முக்கோணத்தில் $QR = 16$செ.மீ, $PR = 20$செ.மீ மற்றும் $\angle Q = 90°$ ஆகும். $QR$ மற்றும் $PQ$-ஐ மைய அச்சுகளாகக்கொண்டு சுழற்றும்போது உருவாகும் கூம்புகளின் வளைபரப்புகளை ஒப்பிடுக.** 2M

பிதாகரஸ் தேற்றப்படி,




$PQ = \sqrt{20^2 - 16^2}$

$= \sqrt{400 - 256}$

$= \sqrt{144}$

$PQ = 12$ செ.மீ

கூம்பின் வளைபரப்பு $= \pi rl$

(1) வளைபரப்பு (QRஐ பொருத்து சுழற்றும் போது)

$= \pi \times 12 \times 20 = 240\pi$ செ.மீ$^2$...........(1)

(2) வளைபரப்பு (PQ-ஐ பொருத்து சுழற்றும் போது)

$= \pi \times 16 \times 20 = 320\pi$செ.மீ$^2$......(2)

$(2) > (1) \Rightarrow$

வளைபரப்பு (PQ-ஐ பொருத்து சுழற்றும் போது)

> வளைபரப்பு (QR-ஐ பொறுத்து சுழற்றும் போது)

PQ-ஐ பொருத்து சுழற்றும் போது, கூம்பின் வளைபரப்பு அதிகமாக இருக்கும்.

**5. சாயுயரம் 19 மீ கொண்ட கூம்பு வடிவக் கூடாரத்தில் நால்வர் உள்ளனர். ஒருவருக்கு 22 ச.மீ பரப்பு தேவை எனில், கூடாரத்தின் உயரத்தைக் கணக்கிடவும்.** (2M)

கூடாரத்தின் அடிப்பக்கம் $= \pi r^2 = 22 \times 4$

$\frac{22}{7} \times r^2 = 88$

$r^2 = 88 \times \frac{7}{22} = 28$

$r = \sqrt{28} = \sqrt{4 \times 7} = \mathbf{2\sqrt{7}}$ **மீ**




கூடாரத்தின் உயரம் $h = \sqrt{l^2 - r^2}$

$= \sqrt{19^2 - (2\sqrt{7})^2}$

$= \sqrt{361 - 28} = \sqrt{333} \cong \mathbf{18.25}$ **மீ**

> **இது போன்ற கணக்குகள்**
> சுயமாக பயிற்சி செய்யவும். (5M)
>
> **எ.கா. 7.5:** கித்தானைக் கொண்டு 7 மீ ஆரமும் 24 மீ உயரமும் உடைய ஒரு கூம்பு வடிவக் கூடாரம் உருவாக்கப்படுகிறது. செவ்வக வடிவக் கித்தானின் அகலம் 4மீ எனில், அதன் நீளம் காண்க. **(APR-23, PTA-3)**
>
> **எ.கா. 7.6:** 704 ச.செ.மீ மொத்தப் புறப்பரப்பு கொண்ட ஒரு கூம்பின் ஆரம் 7செ.மீ எனில், அதன் சாயுயரம் காண்க. **(JUL-22)** (2M)

**6. ஒரு சிறுமி தனது பிறந்த நாளைக் கொண்டாடக் கூம்பு வடிவத் தொப்பிகளை 5720 ச.செ.மீ பரப்புள்ள காகிதத்தாளை பயன்படுத்தித் தயாரிக்கிறாள். 5 செ.மீ ஆரமும், 12 செ.மீ உயரமும் கொண்ட எத்தனை தொப்பிகள் தயாரிக்க முடியும்?** (2M)

$r = 5$ செ.மீ, $h = 12$ செ.மீ

சாயுயரம் $l = \sqrt{h^2 + r^2} = \sqrt{12^2 + 5^2} = \sqrt{144 + 25} = \sqrt{169} = 13$ செ.மீ




தொப்பிகளின் எண்ணிக்கை $= \frac{\text{காகிதத்தாளின் பரப்பு}}{\text{ஒரு தொப்பியின் பரப்பு (கூம்பின் உயரம் } \pi rl)} = \frac{5720 \times 7}{22 \times 5 \times 13} = 28$

தயாரிக்கப்படும் தொப்பிகளின் எண்ணிக்கை **= 28**

**7. சம உயரங்களையுடைய இரு நேர் வட்டக் கூம்புகளின் ஆரங்கள் 1 : 3 என்ற விகிதத்தில் உள்ளன. கூம்புகளின் உயரம் சிறிய கூம்பின் ஆரத்தின் மூன்று மடங்கு எனில், வளைபரப்புகளின் விகிதம் காண்க.** PTA-2 (2M)

| சிறிய கூம்பு: | பெரிய கூம்பு: |
|---|---|
| $r_1 \to r$ | $r_2 \to 3r$ |
| $h_1 \to 3r$ | $h_2 \to 3r$ |
| $l_1 = \sqrt{(3r)^2 + r^2} = \sqrt{10r^2} = r\sqrt{10}$ | $l_2 = \sqrt{(3r)^2 + (3r)^2} = \sqrt{18r^2} = \sqrt{9 \times 2}(r) = 3r\sqrt{2}$ |

சிறிய கூம்பின் வளைபரப்பு : பெரிய கூம்பின் வளைபரப்பு

$\pi r_1 l_1 : \pi r_2 l_2$

$r \times r\sqrt{10} : 3r \times 3r\sqrt{2}$

$\sqrt{5}\,\sqrt{2} : 9\sqrt{2}$

$\sqrt{5} : 9$

வளைபரப்புகளின் விகிதம் $\mathbf{\sqrt{5} : 9}$

**8. ஒரு கோளத்தின் ஆரம் 25% அதிகரிக்கும்போது, அதிகமாகும் புறப்பரப்பின் சதவீதம் காண்க.** (2M)

கோளத்தின் புறப்பரப்பு $= 4\pi r^2$

ஆரம்பத்தில் கோளத்தின் புறப்பரப்பு

(r = 100 அலகு எனில்) $= 4\pi(100)^2$

$= 10000 \times 4\pi$ சதுர அலகுகள்.

புதிய கோளத்தின் புறப்பரப்பு (r = 125 அலகு எனில்)

25% அதிகரித்தப்பின் $= 4\pi(125)^2$

$= 15625 \times 4\pi$ சதுர அலகுகள்.

மாறும் சதவீதம் $= \left[\frac{\text{புதிய புறப்பரப்பு}}{\text{ஆரம்பத்தில் புறப்பரப்பு}} - 1\right] \times 100$

$= \left[\frac{15625 \times 4\pi}{10000 \times 4\pi} - 1\right] \times 100 = \mathbf{56.25\%}$

> **இது போன்ற கணக்குகள்**
> சுயமாக பயிற்சி செய்யவும். (2M)
>
> **எ.கா. 7.8:** ஒரு கோளத்தின் புறப்பரப்பு 154 ச.மீ எனில், அதன் விட்டம் காண்க. **(SEP-20)**
>
> **எ.கா. 7.9:** ஒரு கோள வடிவ வளிக்கூண்டினுள் (balloon) காற்று உந்தப்படும்போது அதன் ஆரம் 12 செ.மீ லிருந்து 16 செ.மீ ஆக உயருகிறது. இரு புறப்பரப்புகளின் விகிதம் காண்க. **(MAY-22)** (5M)

**9. உள்ளீடற்ற ஓர் அரைக்கோள வடிவக் கிண்ணத்திற்கு ஒரு சதுர செ.மீ-க்கு வர்ணம் பூச ₹ 0.14 வீதம் செலவாகும். அதன் உட்புற மற்றும் வெளிப்புற விட்டங்கள் முறையே 20 செ.மீ மற்றும் 28 செ.மீ எனில், அதனை முழுமையாக வர்ணம் பூச எவ்வளவு செலவாகும்?** (2M)

அரைக்கோளத்தின் மொத்த புறப்பரப்பு

$= \pi(3R^2 + r^2)$ இங்கு R-வெளிப்புற ஆரம், r- உட்புற ஆரம்

$= \frac{22}{7}(3(14)^2 + 10^2)$

$= \frac{22}{7} \times (588 + 100)$

$= \frac{22}{7} \times 688$




மொத்த புறப்பரப்பு $=$ 2162.16 செ.மீ$^2$

செலவு $= 2162.16 \times 0.14$ $=$ **₹ 302.72**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

**எ.கா. 7.10:** ஒரு திண்ம அரைக்கோளத்தின் அடிப்பரப்பு 1386 ச.மீ எனில், அதன் மொத்தப் புறப்பரப்பைக் காண்க.

**எ.கா. 7.11:** ஓர் உள்ளீடற்ற அரைக்கோள ஓட்டின் உள் மற்றும் வெளிப்புற ஆரங்கள் முறையே 3 மீ மற்றும் 5 மீ ஆகும். ஓட்டின் மொத்தப் புறப்பரப்பு மற்றம் வளைபரப்பைக் காண்க.

**10. ஒரு மேஜை விளக்கின் வெளிப்புறத்திற்கு (மேல்பகுதியுடன்) மட்டும் வர்ணம் பூசப்படுகிறது. 1ச.செ.மீ வர்ணம் பூச ₹ 2 செலவாகுமெனில் விளக்கிற்கு வர்ணம் பூசுவதற்கான மொத்தச் செலவைக் கணக்கிடுக.** (5M)




$r = 6$ செ.மீ, $R = 12$ செ.மீ

தேவையான பரப்பு = இடைக்கண்டத்தின் வளைப்பரப்பு + மேல் பகுதி வட்டத்தின் பரப்பு

$= \pi(R + r)l + \pi r^2$

$= \pi(6 + 12)10 + \pi(6)^2$

$= 180\pi + 36\pi$

$= 216\pi = 216 \times \frac{22}{7} = \frac{4752}{7}$

$\cong 678.86$ செ.மீ$^2$

செலவு $= 678.86 \times 2$ $=$ **₹ 1357.72**

$l = \sqrt{h^2 + (R - r)^2}$

$= \sqrt{8^2 + (12 - 6)^2}$

$= \sqrt{64 + 36}$

$= \sqrt{100}$

$= 10$ செ.மீ

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**அலகுப்பயிற்சி:** (5M)

**7.** ஓர் இடைக்கண்டத்தின் இரு முனைகளின் சுற்றளவுகள் 18 மீ, 16 மீ மற்றும் அதன் சாயுயரம் 4 மீ ஆகும். ஒரு சதுர மீட்டருக்கு ₹ 100 வீதம் இடைக்கண்டத்தின் வளைபரப்பில் வர்ணம் பூச ஆகும் மொத்தச் செலவு என்ன?

**எ.கா. 7.13:** (2M)
ஒரு கூம்பின் இடைக்கண்டச் சாயுயரம் 5 செ.மீ ஆகும். அதன் இரு ஆரங்கள் 4 செ.மீ மற்றும் 1 செ.மீ எனில், இடைக்கண்டத்தின் வளைபரப்பைக் காண்க.

**எ.கா. 7.14:** (5M)
ஒரு தொழிற்சாலையின் உலோக வாளி, கூம்பின் இடைக்கண்ட வடிவில் உள்ளது. அதன் மேற்புற, அடிப்புற விட்டங்கள் முறையே 10 மீ மற்றும் 4 மீ ஆகும். அதன் உயரம் 4 மீ எனில், இடைக்கண்டத்தின் வளைபரப்பு மற்றம் மொத்தப் புறப்பரப்பைக் காண்க.

**பயிற்சிக்காக:**

**எ.கா.7.3:** நீளம் 3மீ மற்றும் விட்டம் 2.8மீ உடைய ஒரு சமன்படுத்தும் உருளையைக் கொண்டு ஒரு தோட்டம் சமன்படுத்தப் படுகிறது. 8 சுற்றுகளில் எவ்வளவு பரப்பை உருளை சமன் செய்யும்? **(2M)**

**எ.கா.7.7:** 2.4செ.மீ உயரமுள்ள ஒரு திண்ம உருளையின் விட்டம் 1.4செ.மீ ஆகும். உருளையினுள் அதே ஆரமுள்ள கூம்பு வடிவக் குழிவு உருளையின் உயரத்திற்கு ஏற்படுத்தப்படுகிறது எனில், மீதமுள்ள திண்மத்தின் மொத்தப் புறப்பரப்பு காண்க. **(5M)**

**எ.கா.7.12:** ஒரு கோளம், உருளை மற்றும் கூம்பு ஆகியவற்றின் ஆரங்கள் சமம். படத்தில் உள்ளபடி கூம்பு மற்றும் உருளையின் உயரங்கள் ஆரத்திற்குச் சமம் எனில், அவற்றின் வளைபரப்புகளின் விகிதம் காண்க. **(2M)**



## தயாரிக்கப்பட்ட வினாக்கள்

**1. ஒரு திண்ம அரைக்கோளத்தின் அடிப்பரப்பு 1386 ச.மீ எனில் அதன் வளைபரப்பு மற்றும் புறப்பரப்பினைக் காண்க.** SEP-20 (2M)




அடிப்பக்கப்பரப்பு $= \pi r^2 = 1386$ ச.மீ

அரைக்கோளத்தின் வளைபரப்பு $= 2\pi r^2 = 2 \times 1386 = 2772$ ச.மீ

அரைக்கோளத்தின் புறப்பரப்பு $= 3\pi r^2 = 3 \times 1386 = 4158$ ச.மீ

**2. ஒரு கூம்பின் இடைக்கண்டத்தின் சாயுயரம் 10 செ.மீ ஆகும். அதன் மேற்புற, கீழ்ப்புற வட்டப் பகுதிகளின் சுற்றளவு 28 செ.மீ, 18 செ.மீ எனில் அதன் வளைபரப்பைக் காண்க.** (5M) PTA-6

இடைக்கண்டத்தின் சாயுயரம் $l = 10$ செ.மீ

இடைக்கண்டத்தின் மேற்புற சுற்றளவு $= 2\pi R = 28$செ.மீ $\Rightarrow R = \frac{14}{\pi}$ செ.மீ

இடைக்கண்டத்தின் கீழ்ப்புற சுற்றளவு $= 2\pi r = 18$ செ.மீ $\Rightarrow r = \frac{9}{\pi}$ செ.மீ

இடைக்கண்டத்தின் வளைபரப்பு $= \pi(R+r)l$ ச.அ $= \pi\left(\frac{14}{\pi} + \frac{9}{\pi}\right) \times 10$

$= \pi \times \frac{23}{\pi} \times 10 = 230$ ச.செ.மீ




## பயிற்சி 7.2

**1. 10 மீ உட்புற விட்டம் மற்றும் 14 மீ ஆழம் கொண்ட ஓர் உருளை வடிவக் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட மண் கொண்டு 5 மீ அகலத்தில் கிணற்றைச் சுற்றி மேடை அமைக்கப்படுகிறது எனில், மேடையின் உயரத்தைக் காண்க.** (2M)

மேடையின் கன அளவு = கிணற்றின் கன அளவு

உள்ளிடற்ற உருளையின் கன அளவு = உருளையின் கன அளவு

$$\pi(R^2 - r^2)h = \pi r^2 h$$

$$\pi \times (10^2 - 5^2)h = \pi \times 5 \times 5 \times 14$$

$$h = \frac{5\times5\times14}{75} = \frac{14}{3} = 4.666.....$$

∴ மேடையின் உயரம் $= \mathbf{4.67}$ **மீ**




**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

எ.கா. 7.15: உயரம் 2 மீ மற்றும் அடிப்பரப்பு 250ச.மீ கொண்ட ஓர் உருளையின் கனஅளவைக் காண்க. (SEP-21)

எ.கா. 7.17: ஓர் உள்ளீடற்ற உருளையின் உயரம், உட்புற மற்றும் வெளிப்புற ஆரங்கள் முறையே 9 செ.மீ, 21 செ.மீ மற்றும் 28 செ.மீ ஆகும். உருளையை உருவாக்கத் தேவைப்படும் இரும்பின் கன அளவைக் காண்க.

**2. விட்டம் 20 செ.மீ உள்ள ஓர் உருளை வடிவக் கண்ணாடிக் குவளையில் 9 செ.மீ உயரத்திற்கு நீர் உள்ளது. ஆரம் 5 செ.மீ மற்றும் உயரம் 4 செ.மீ உடைய ஓர் சிறிய உலோக உருளை, நீரில் முழுமையாக மூழ்கும்போது ஏற்படும் நீரின் உயர்வைக் கணக்கிடுக.** (2M) SEP-20

கண்ணாடிக்குழாயில் உயரும் நீரின் கன அளவு

= நீரில் மூழ்கும் உலோக உருளையின் கன அளவு

$$\pi R^2 H = \pi r^2 h$$

$$\pi \times 10 \times 10 \times H = \pi \times 5 \times 5 \times 4$$

$$H = \frac{5\times5\times4}{10\times10} = 1$$

கண்ணாடிக்குழாயில் உயரும் நீரின் உயரம் $= \mathbf{1}$ **செ.மீ**




**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். (2M)

எ.கா. 7.16: ஓர் உருளை வடிவ தண்ணீர் தொட்டியின் கன அளவு $1.078 \times 10^6$ லிட்டர் ஆகும். தொட்டியின் விட்டம் 7 மீ எனில், அதன் உயரம் காண்க.

**3. 484 செ.மீ சுற்றளவுள்ள ஒரு மரக்கூம்பின் உயரம் 105 செ.மீ எனில், கூம்பின் கன அளவைக் காண்க.**

2M JUL-22

கூம்பின் அடிப்பக்கத்தின் சுற்றளவு $(2\pi r) = 484$




$$2 \times \frac{22}{7} \times r = 484$$

$$r = \frac{484 \times 7}{2 \times 22}$$

$r = 77$ செ.மீ

கூம்பின் கன அளவு $= \frac{1}{3}\pi r^2 h$

$$= \frac{1}{3} \times \frac{22}{7} \times 77 \times 77 \times 105$$

$$= 652190$$

கூம்பின் கன அளவு $= \mathbf{652190}$ **செ.மீ³**

> **இது போன்ற கணக்குகள்**
> சுயமாக பயிற்சி செய்யவும்.
>
> 2M
>
> **எ.கா. 7.19:** ஒரு நேர் வட்டக் கூம்பின் கன அளவு 11088 க.செ.மீ ஆகும். கூம்பின் உயரம் 24 செ.மீ எனில், அதன் ஆரம் காண்க. **(JUN-23, PTA-1)**
>
> **அலகுப்பயிற்சி: 9.** ஒரு கூம்பின் கன அளவு $1005\frac{5}{7}$ க.செ.மீ மற்றும் கீழ் வட்டப்பரப்பு $201\frac{1}{7}$ ச.செ.மீ எனில், அதன் சாயுயரம் காண்க.

**4. ஆரம் 10 மீட்டரும், உயரம் 15 மீட்டரும் உடைய ஒரு கூம்பு வடிவக் கொள்கலன் முழுமையாகப் பெட்ரோலால் நிரம்பியுள்ளது. நிமிடத்திற்கு 25 கன மீட்டர் பெட்ரோல் கொள்கலனின் அடிப்புறம் வழியாக வெளியேற்றப்பட்டால் எத்தனை நிமிடங்களில் கொள்கலன் காலியாகும். விடையை நிமிடத் திருத்தமாகத் தருக.**

2M

நிமிடங்கள் $= \frac{\text{கூம்பு வடிவ கொள்கலனின் கன அளவு } \left(\frac{1}{3}\pi r^2 h\right)}{\text{ஒரு நிமிடத்தில் வெளியேறும் பெட்ரோலின் கனஅளவு}}$

$$= \frac{\frac{1}{3} \times \frac{22}{7} \times 10 \times 10 \times 15}{25}$$

$$= \frac{1 \times 22 \times 10 \times 10 \times 15}{3 \times 7 \times 25}$$

$$= \frac{440}{7} = 62.8 \cong \mathbf{63}$$ **நிமிடங்கள்**




கொள்கலன் **63 நிமிடங்களில்** காலியாகும்.

**5. 6 செ.மீ, 8 செ.மீ மற்றும் 10 செ.மீ பக்க அளவுகள் கொண்ட ஒரு செங்கோண முக்கோணத்தை அதன் செங்கோணத்தைத் தாங்கும் பக்கங்களை மைய அச்சுகளாகக் கொண்டு சுழற்றும்போது ஏற்படும் திண்மங்களின் கன அளவுகளின் வித்தியாசம் காண்க.**

2M




கூம்பின் கன அளவு $= \frac{1}{3}\pi r^2 h$

கூம்பின் கன அளவு (6செ.மீ கொண்டு சுழற்றும் போது) $= \frac{1}{3} \times \pi \times 8 \times 8 \times 6 \; (r = 8, h = 6)$

$= 128\pi$ செ.மீ³.......... (1)

கூம்பின் கன அளவு (8செ.மீ கொண்டு சுழற்றும் போது) $= \frac{1}{3} \times \pi \times 6 \times 6 \times 8 \; (r = 6, h = 8)$

$= 96\pi$ .......... (2)

கன அளவுகளுக்கிடையேயான வித்தியாசம் $(1) - (2) = 128\pi - 96\pi$

$$= 32\pi = 32 \times \frac{22}{7} = \frac{704}{7} \cong 100.571$$

திண்மங்களின் கன அளவுகளின் வித்தியாசம் $= \mathbf{100.58}$ **செ.மீ³**

**6. சம ஆரங்கள் கொண்ட இரு கூம்புகளின் கன அளவுகள் 3600 க.செ.மீ மற்றும் 5040 க.செ.மீ எனில், உயரங்களின் விகிதம் காண்க.** 2M

PTA-4, MAY-22

கூம்பின் கன அளவு $= \frac{1}{3}\pi r^2 h$

முதல் கூம்பின் கன அளவு : 2 ம் கூம்பின் கன அளவு

$$= 3600 : 5040$$

$$\frac{1}{3}\pi r^2 \times h_1 : \frac{1}{3}\pi r^2 \times h_2 = 180 : 252$$

$$h_1 : h_2 = 45 : 63$$

$$h_1 : h_2 = 5 : 7$$

உயரங்களின் விகிதம் **5 : 7**

> **இது போன்ற கணக்குகள்**
> சுயமாக பயிற்சி செய்யவும்.
>
> 7. இரு கோளங்களின் ஆரங்களின் விகிதம் 4 : 7 எனில், அவற்றின் கன அளவுகளின் விகிதம் காண்க. **(APR-23)** 2M
>
> **எ.கா. 7.20:** இரு கூம்புகளுடைய கன அளவுகளின் விகிதம் 2:3 ஆகும். இரண்டாம் கூம்பின் உயரம் முதல் கூம்பின் உயரத்தைப் போல் இரு மடங்கு எனில், அவற்றின் ஆரங்களின் விகிதம் காண்க.

**8. ஒரு திண்மக் கோளம் மற்றும் திண்ம அரைக்கோளத்தின் மொத்தப் பரப்பு சமமானதாக இருக்குமானால் அவற்றின் கன அளவுகளின் விகிதம் $3\sqrt{3} : 4$ என நிரூபி.** (2M) PTA-6

கோளத்தின் மொத்த புறப்பரப்பு = அரைக்கோளத்தின் புறப்பரப்பு

$$4\pi r_1^2 = 3\pi r_2^2$$

$$\frac{r_1^2}{r_2^2} = \frac{3}{4}$$

$$\frac{r_1}{r_2} = \frac{\sqrt{3}}{2}$$

$$\frac{\text{கோளத்தின் கன அளவு}}{\text{அரை காளத்தின் கன அளவு}} = \frac{\frac{4}{3}\pi r_1^3}{\frac{2}{3}\pi r_2^3}$$

$$= 2\left(\frac{r_1}{r_2}\right)^3$$

$$= 2\left(\frac{\sqrt{3}}{2}\right)^3 = \frac{2\times 3\sqrt{3}}{8} = \frac{3\sqrt{3}}{4}$$

∴ கன அளவுகளின் விகிதம் $\mathbf{3\sqrt{3} : 4}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

(5M)

**எ.கா. 7.21:** ஒரு திண்ம அரைக்கோளத்தின் கனஅளவு 29106 க.செ.மீ. மூன்றில் இரண்டு பங்கு கன அளவுள்ள மற்றோர் அரைக்கோளம் இதிலிருந்து செதுக்கப்படுமானால் புதிய அரைக்கோளத்தின் ஆரம் என்ன?
**எ.கா. 7.22:** ஓர் உள்ளீடற்ற பித்தளை கோளத்தின் உள்விட்டம் 14 செ.மீ, தடிமன் 1 மி.மீ மற்றும் பித்தளையின் அடர்த்தி 17.3 கிராம்/க.செ.மீ எனில், கோளத்தின் நிறையைக் கணக்கிடுக. **(MDL)**

**9. ஓர் உள்ளீடற்ற தாமிரக் கோளத்தின் வெளிப்புற, உட்புறப் புறப்பரப்புகள் முறையே $576\pi$ச.செ.மீ மற்றும் $324\pi$ச.செ.மீ எனில், கோளத்தை உருவாக்கத் தேவையான தாமிரத்தின் கனஅளவைக் காண்க.** (5M)




கோளத்தின் புறப்பரப்பு $= 4\pi r^2$

கோளத்தின் வெளிப்புற புறப்பரப்பு $= 4\pi R^2 = 576\pi$

$$\Rightarrow R^2 = \frac{576\pi}{4\pi} \Rightarrow R = 12 \text{ செ.மீ}$$

கோளத்தின் உட்புறப் புறப்பரப்பு $= 4\pi r^2 = 324\pi$

$$\Rightarrow r^2 = \frac{324\pi}{4\pi} \Rightarrow r = 9 \text{ செ.மீ}$$

உள்ளீடற்ற கோளத்தின் கன அளவு $= \frac{4}{3}\pi(R^3 - r^3)$

$$= \frac{4}{3}\times\frac{22}{7}\times(12^3 - 9^3) = \frac{4}{3}\times\frac{22}{7}\times(1728 - 729) = \frac{4}{3}\times\frac{22}{7}\times 999 = \frac{29304}{7} = 4186.285$$

தேவையான தாமிரத்தின் கன அளவு $\cong \mathbf{4186.29}$ **செ.மீ³**

**10. உயரம் 16 செ.மீ உடைய ஒரு கூம்பின் இடைக்கண்ட வடிவில் அமைந்த கொள்கலன் ஒன்றின் மேற்புறம் திறந்த நிலையில் உள்ளது. கீழ்ப்புற ஆரம் 8 செ.மீ மற்றும் மேற்புற ஆரம் 20 செ.மீ கொண்ட கொள்கலனில் முழுமையாகப் பால் நிரப்பப்படுகிறது. ஒரு லிட்டர் பாலின் விலை ₹40 எனில், நிரப்பப்படும் பாலின் மொத்த விலையைக் காண்க.** MAY-22 (5M)




இடைக்கண்டத்தின் பரப்பு $= \frac{1}{3}\pi h(R^2 + r^2 + Rr)$

$$= \frac{1}{3}\times\frac{22}{7}\times 16\left(20^2 + 8^2 + (20\times 8)\right)$$

$$= \frac{1}{3}\times\frac{22}{7}\times 16\times 624 = \frac{73216}{7} = 10459.4 \text{ செ.மீ}^3$$

இடைக்கண்டத்தின் பரப்பு $= 10.4594$ **லிட்டர்**

நிரப்பப்படும் பாலின் மொத்த விலை$= 10.4594 \times 40 = ₹\,418.376$

நிரப்பப்படும் பாலின் மொத்த விலை $\cong \mathbf{₹\,418.38}$

1000 செ.மீ³ = 1லிட்டர்

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா. 7.23:** 45 செ.மீ உயரமுள்ள ஓர் இடைக்கண்டத்தின் இரு புற ஆரங்கள் முறையே 28 செ.மீ மற்றும் 7 செ.மீ எனில்,இடைக்கண்டத்தின் கன அளவைக் காண்க. **(PTA-5, SEP-21)** (2M)

**எ.கா. 7.18:** படத்தில் உள்ள உருளை $A$ மற்றும் $B$-ல்
(i) எந்த உருளையின் கன அளவு அதிகமாக இருக்கும்?
(ii) அதிகக் கன அளவு கொண்ட உருளையின் மொத்தப்புறப்பரப்பு அதிகமாக இருக்குமா எனச் சோதிக்க.
(iii) உருளை $A$ மற்றும் $B$-ன் கன அளவுகளின் விகிதம் காண்க. (5M)



## தயாரிக்கப்பட்ட வினாக்கள்

**1. இரு நேர்வட்டக் கூம்பின் உயரங்களின் விகிதம் $1:2$ மற்றும் அவற்றின் அடிப்பக்கச் சுற்றளவின் விகிதம் $3:4$ எனில், அவற்றின் கன அளவுகளின் விகிதம் காண்க.** 5M SEP-21

இரு நேர்வட்ட கூம்புகளின் உயரங்கள் முறையே $h_1$ மற்றும் $h_2$ என்க. ஆரங்கள் முறையே $r_1$ மற்றும் $r_2$ என்க.

நேர்வட்டக் கூம்புகளின் உயரங்களின் விகிதம் $= h_1 : h_2 = 1:2 \Rightarrow \frac{h_1}{h_2} = \frac{1}{2}$

நேர்வட்டக் கூம்புகளின் அடிப்பக்கச் சுற்றளவின் விகிதம் $\Rightarrow 2\pi r_1 : 2\pi r_2 = 3:4 \Rightarrow \frac{r_1}{r_2} = \frac{3}{4}$

முதல் கூம்பின் கன அளவு : இரண்டாம் கூம்பின் கன அளவு $= \frac{1}{3}\pi r_1^2 h_1 : \frac{1}{3}\pi r_2^2 h_2$

$$= \frac{r_1^2 h_1}{r_2^2 h_2} = \left(\frac{r_1}{r_2}\right)^2 \left(\frac{h_1}{h_2}\right)$$

$$= \left(\frac{3}{4}\right)^2 \left(\frac{1}{2}\right)$$

$$= \frac{9}{16} \times \frac{1}{2} = \frac{9}{32}$$

**2. ஓர் உள்ளீடற்ற உருளையின் உயரம், உட்புற மற்றும் வெளிப்புற ஆரங்கள் முறையே 9 செ.மீ., 3 செ.மீ., மற்றும் 5 செ.மீ ஆகும். உருளையை உருவாக்கத் தேவைப்படும் இரும்பின் கன அளவினைக் காண்க.**

$r, R$ & $h$ ஆகியன முறையே உட்புற ஆரம், வெளிப்புற ஆரம், உயரம் ஆகியற்றைக் குறிப்பிடுவதாகும்.

கொடுக்கப்பட்டுள்ளது $r = 3$ செ.மீ, $R = 5$ செ.மீ, $h = 9$ செ.மீ SEP-20

கன அளவு $= \pi(R^2 - r^2)h$ கன அலகுகள் 2M

$$= \frac{22}{7}(5^2 - 3^2) \times 9$$

$$= \frac{22}{7}(25 - 9) \times 9$$

$$= \frac{22}{7} \times 16 \times 9 = 452.57$$ கன.செ.மீ

**3. 3 மீ விட்டமும் 14 மீ ஆழமுள்ள ஒரு கிணறு உருளை வடிவில் வெட்டப்படுகிறது. அவ்வாறு வெட்டும் போது தோண்டியெடுக்கப்பட்ட மண் 4 மீ அகலமுள்ள வட்ட வடிவமாக சீராக பரப்பப்பட்டு ஒரு மேடை அமைக்கப்பட்டால் அம்மேடையின் உயரத்தைக் காண்க.** 5M PTA-5

மேடையின் கன அளவு = கிணற்றின் கன அளவு

| கிணறு | மேடை |
|---|---|
| $D = 3$மீ | $r = \frac{3}{2} = 1.5$மீ |
| $r = \frac{3}{2} = 1.5$மீ | $R = \frac{3}{2} + 4 = \frac{11}{2} = 5.5$மீ |
| $h = 14$மீ | |

உள்ளிடற்ற உருளையின் கன அளவு

= உருளையின் கன அளவு

$$\pi(R^2 - r^2)h = \pi r^2 h$$

$$\pi \times (5.5^2 - 1.5^2)h = \pi \times 1.5 \times 1.5 \times 14$$

$$(5.5 + 1.5)(5.5 - 1.5)h = 1.5 \times 1.5 \times 14$$

$$7 \times 4 \times h = 31.50$$

$$28 \times h = 31.50$$

$$h = \frac{31.50}{28}$$

$$= 1.125$$




∴ மேடையின் உயரம் $= 1.125$ மீ

## பயிற்சி 7.3

**1. ஓர் அரைக்கோளத்தின் மேல் ஓர் உள்ளீடற்ற உருளையைப் பொருத்திய வடிவத்தில் அமைந்த ஒரு கிண்ணத்தின் விட்டம் 14 செ.மீ மற்றும் உயரம் 13 செ.மீ எனில், அதன் கொள்ளளவைக் காண்க.**

கிண்ணத்தின் கொள்ளளவு (V) = உருளையின் கன அளவு + அரைக்கோளத்தின் கன அளவு **5M**

$= \pi r^2 h + \frac{2}{3}\pi r^3$

$= \pi r^2 \left[h + \frac{2r}{3}\right]$

$= \frac{22}{7} \times 7 \times 7 \left[6 + \frac{2(7)}{3}\right]$

$= 22 \times 7 \times \frac{32}{3}$

$V = \frac{4928}{3} = 1642.66......$




கிண்ணத்தின் கொள்ளளவு $\cong$ **1642.67 செ.மீ³**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். **5M**

**எ.கா. 7.24:** ஓர் உருளையின் மீது ஓர் அரைக்கோளம் இணைந்தவாறு உள்ள ஒரு பொம்மையின் மொத்த உயரம் 25 செ.மீ ஆகும். அதன் விட்டம் 12 செ.மீ எனில், பொம்மையின் மொத்தப் புறப்பரப்பைக் காண்க. **(SEP-21)**

**எ.கா. 7.26:** அருள் தனது குடும்ப விழாவிற்கு 150 நபர்கள் தங்குவதற்கு ஒரு கூடாரம் அமைக்கிறார். கூடாரத்தின் அடிப்பகுதி உருளை வடிவிலும் மேற்பகுதி கூம்பு வடிவிலும் உள்ளது. ஒருவர் தங்குவதற்கு 4 ச.மீ அடிப்பகுதி பரப்பும் 40 க.மீ காற்றும் தேவைப்படுகிறது. கூடாரத்தில் உருளையின் உயரம் 8 மீ எனில், கூம்பின் உயரம் காண்க. **(APR-23)**

**2. நாதன் என்ற பொறியியல் மாணவர் ஓர் உருளையின் இருபுறமும் கூம்புகள் உள்ளவாறு மாதிரி ஒன்றை உருவாக்கினார். மாதிரியின் நீளம் 12 செ.மீ மற்றும் விட்டம் 3 செ.மீ ஆகும். ஒவ்வொரு கூம்பின் உயரமும் 2 செ.மீ இருக்குமானால் நாதன் உருவாக்கிய மாதிரியின் கனஅளவைக் காண்க.** **5M** MAY-22

மாதிரியின் கன அளவு = உருளையின் கன அளவு + கூம்பின் கன அளவு × 2

$= \pi r^2 h_1 + \frac{1}{3}\pi r^2 h_2 \times 2$

$= \pi r^2 \left[h_1 + \frac{2}{3}h_2\right]$

$= \frac{22}{7} \times \frac{3}{2} \times \frac{3}{2} \times \left[8 + \frac{2}{3}(2)\right]$

$= \frac{22}{7} \times \frac{3}{2} \times \frac{3}{2} \times \frac{28}{3} = 66$




மாதிரியின் கன அளவு **= 66 செ.மீ³**

**3. உயரம் 2.4 செ.மீ மற்றும் விட்டம் 1.4 செ.மீ கொண்ட ஒரு திண்ம உருளையில் இருந்து அதே விட்டமும் உயரமும் உள்ள ஒரு கூம்பு வெட்டி எடுக்கப்பட்டால் மீதமுள்ள திண்மத்தின் கனஅளவு எவ்வளவு கன செ.மீ ஆகும்?** **5M**

மீதமுள்ள திண்மத்தின் கன அளவு

= உருளையின் கன அளவு − கூம்பின் கன அளவு

$= \pi r^2 h - \frac{1}{3}\pi r^2 h$

$= \frac{2}{3}\pi r^2 h$

$= \frac{2}{3} \times \frac{22}{7} \times \frac{7}{10} \times \frac{7}{10} \times \frac{24}{10} = \frac{2464}{1000}$

$= 2.464$ செ.மீ³




விட்டம் = 1.4செ.மீ
ஆரம் r = 0.7 = $\frac{7}{10}$ செ.மீ
உயரம் h = $\frac{24}{10}$ செ.மீ

மீதமுள்ள திண்மத்தின் கன அளவு **= 2.46 செ.மீ³**

**4. ஒரு திண்மத்தின் அடிப்புறம் 6 செ.மீ ஆரம் உடைய அரைக்கோள வடிவிலும் மேற்புறம் 12 செ.மீ உயரமும் 6 செ.மீ ஆரமும் கொண்ட கூம்பு வடிவிலும் உள்ளது. முழுவதும் நீரால் நிரப்பப்பட்ட ஓர் உருளையின் அடிப்புறத்தைத் தொடுமாறு அத்திண்மம் வைக்கப்படும்போது வெளியேறும் நீரின் கனஅளவைக் காண்க. உருளையின் ஆரம் 6 செ.மீ மற்றும் உயரம் 18 செ.மீ எனக் கொள்க.** 5M

வெளியேறும் நீரின் கன அளவு = வைக்கப்படும் திண்மத்தின் கன அளவு

(கூம்பின் கன அளவு + அரைக்கோளத்தின் கன அளவு)

$= \frac{1}{3}\pi r^2 h + \frac{2}{3}\pi r^3$

$= \frac{1}{3}\pi r^2 (h + 2r)$

$= \frac{1}{3} \times \frac{22}{7} \times 6 \times 6 \times (12 + 2(6))$

$= \frac{44\times6}{7} \times 24 = \frac{6336}{7}$




வெளியேறும் நீரின் கன அளவு $= \mathbf{905.14}$ செ.மீ$^3$

**5. ஒரு மருந்து குப்பி, ஓர் உருளையின் இருபுறமும் அரைக் கோளம் இணைந்த வடிவில் உள்ளது. குப்பியின் மொத்த நீளம் 12 மி.மீ மற்றும் விட்டம் 3 மி.மீ எனில், அதில் அடைக்கப்படும் மருந்தின் கனஅளவைக் காண்க?** 5M

மருந்து குப்பியின் கன அளவு

= உருளையின் கன அளவு + ( 2 × அரைக்கோளத்தின் கன அளவு)

$= \pi r^2 h + \left(2 \times \frac{2}{3}\pi r^3\right)$

$= \pi r^2 \left(h + \frac{4r}{3}\right) = \frac{22}{7} \times \frac{3}{2} \times \frac{3}{2} \times \left[9 + \frac{4}{3}\left(\frac{3}{2}\right)\right]$

$= \frac{22}{7} \times \frac{3}{2} \times \frac{3}{2} \times 11 = \frac{2178}{28} = \mathbf{\frac{1089}{14}}$

$h = 12 - 3$
$= 9$
$r = \frac{3}{2}$




மருந்து குப்பியின் கன அளவு $= \frac{1089}{14} \cong 77.78$

அடைக்கப்படும் மருந்தின் கன அளவு $\mathbf{77.78}$ மி.மீ$^3$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா. 7.25:** ஒரு கனச்செவ்வகத்தின் மீது அரை உருளை உள்ளவாறு ஒரு நகைப்பெட்டி உள்ளது. கனச் செவ்வகத்தின் பரிமாணங்கள் 30 செ.மீ × 15 செ.மீ × 10 செ.மீ எனில், நகைப்பெட்டியின் கன அளவுக் காண்க. 5M




**6. 7 செ.மீ பக்க அளவுள்ள கனச்சதுரத்தின் மீது ஓர் அரைக்கோளம் படத்தில் உள்ளவாறு பொருந்தியுள்ளது. திண்மத்தின் புறப்பரப்பு காண்க.** 5M




திண்மத்தின் புறப்பரப்பு = கன சதுரத்தின் மொத்த புறப்பரப்பு

− அரைக்கோளத்தின் அடிப்பக்கத்தின் பரப்பு + அரைகோளத்தின் வளைப்பரப்பு

$= 6a^2 - \pi r^2 + 2\pi r^2$

$= 6a^2 + \pi r^2$

$= 6a^2 + \pi\left(\frac{a^2}{4}\right)$

$= a^2\left(6 + \frac{\pi}{4}\right)$

$= \frac{a^2}{4}(24 + \pi)$

$= \frac{a^2}{4}\left(24 + \frac{22}{7}\right) = \frac{a^2}{4}\left(\frac{190}{7}\right) = \frac{95a^2}{14}$

$= \frac{95(7)^2}{14} = \frac{95\times49}{14} = 332.5$ செ.மீ$^2$




திண்மத்தின் புறப்பரப்பு $= \mathbf{332.5}$ செ.மீ$^2$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா. 7.28:** கனச்சதுரத்தின் ஒரு பகுதியில் $l$ அலகுகள் விட்டமுள்ள (கனசதுரத்தின் பக்கஅளவிற்குச் சமமான) ஓர் அரைக்கோளம் (படத்தில் உள்ளதுபோல) வெட்டப்பட்டால், மீதமுள்ள திண்மத்தின் புறப்பரப்பைக் காண்க. 5M



**7.** **ஆரம் $r$ அலகுகள் கொண்ட ஒரு கோளம் ஒரு நேர் வட்ட உருளையினுள் மிகச் சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது எனில், கீழ்க்கண்டவற்றைக் கணக்கிடுக.** 5M

**(i) கோளத்தின் புறப்பரப்பு (ii) உருளையின் வளைபரப்பு**

**(iii) (i) மற்றும் (ii)-ல் பெறப்பட்ட பரப்புகளின் விகிதம்**




(i) கோளத்தின் புறப்பரப்பு $= \mathbf{4\pi r^2}$ **ச.அ**............ (1)

(ii) உருளையின் வளைபரப்பு $= 2\pi rh = 2\pi r(2r)$

$= \mathbf{4\pi r^2}$ **ச.அ** ............ (2)

(iii) (i) மற்றும் (ii)-ல் பெறப்பட்ட பரப்புகளின் விகிதம்

$$= \frac{4\pi r^2}{4\pi r^2} = \frac{1}{1} = \mathbf{1:1}$$

## பயிற்சி 7.4

**1.** **$12$ செ.மீ ஆரமுள்ள ஓர் அலுமினியக் கோளம் உருக்கப்பட்டு $8$ செ.மீ ஆரமுள்ள ஓர் உருளையாக மாற்றப்படுகிறது. உருளையின் உயரம் காண்க.** 5M

கொடுக்கப்பட்டது:




கோளத்தின் ஆரம் $r = 12$ செ.மீ

உருளையின் ஆரம் $= 8$ செ.மீ

உருளையின் கன அளவு $(\pi r^2 h) =$ கோளத்தின் கன அளவு $\left(\frac{4}{3}\pi r^3\right)$

$$\pi \times 8 \times 8 \times h = \frac{4}{3} \times \pi \times 12 \times 12 \times 12$$

$$h = \frac{4 \times \pi \times 12 \times 12 \times 12}{3 \times \pi \times 8 \times 8}$$

$h = 36$ செ.மீ

உருளையின் உயரம் $= \mathbf{36}$ **செ.மீ**

**2.** **$14$ செ.மீ விட்டமுள்ள குழாயிலிருந்து $15$ கி.மீ/மணி என்ற வேகத்தில் $50$ மீ நீளம் மற்றும் $44$ மீ அகலம் கொண்ட ஒரு செவ்வக வடிவத் தொட்டியினுள் தண்ணீர் பாய்கிறது. எவ்வளவு நேரத்தில் தண்ணீரின் மட்டம் $21$ செ.மீ-க்கு உயரும்.** 5M




**செவ்வக வடிவத் தொட்டி:**

$l = 50$ மீ

$b = 44$ மீ

$h = 21$ செ.மீ $= \frac{21}{100}$ மீ

**உருளை வடிவக் குழாய்:**

விட்டம் $= 14$ செ.மீ

$\therefore$ ஆரம் $= 7$ செ.மீ $= \frac{7}{100}$ மீ

வேகம் $= 15$கி.மீ /மணி

$= 15 \times 1000$ மீ/மணி

தேவையான நேரம் $= \frac{\text{செவ்வகவடிவத் தொட்டியின் கன அளவு (lbh)}}{\text{ஒரு மணி நேரத்தில் வெளியேறும் நீரின் அளவு } (\pi r^2 \times \text{வேகம்})}$

$$= \frac{50 \times 44 \times 21 \times 7 \times 100 \times 100}{100 \times 22 \times 7 \times 7 \times 15 \times 1000}$$

$= \mathbf{2}$ **மணி**

2 மணி நேரத்தில் தண்ணீரின் மட்டம் 21 செ.மீ-க்கு உயரும்.

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

5M

அலகுப்பயிற்சி:

**2.** ஆரம் 1.75மீ உள்ள ஓர் அரைக்கோள வடிவத் தொட்டி முற்றிலும் நீரால் நிரப்பப்பட்டுள்ளது. ஒரு குழாயின் மூலம் விநாடிக்கு 7 லிட்டர் வீதம் தொட்டியிலிருந்து நீர் வெளியேற்றப்படுமானால், தொட்டியை எவ்வளவு நேரத்தில் முழுவதுமாகக் காலி செய்யலாம்?

**3. முழுமையாக நீரால் நிரம்பியுள்ள ஒரு கூம்பு வடிவக் குடுவையின் ஆரம் $r$ அலகுகள் மற்றும் உயரம் $h$ அலகுகள் ஆகும். நீரானது $xr$ அலகுகள் ஆரமுள்ள மற்றொரு உருளை வடிவக் குடுவைக்கு மாற்றப்பட்டால் நீரின் உயரம் காண்க.** (5M)

கொடுக்கப்பட்டது

| **கூம்பு வடிவக் குடுவை** | **உருளை வடிவக் குடுவை** |
|---|---|
| ஆரம் $\rightarrow r$ | ஆரம் $\rightarrow xr$ |
| உயரம் $\rightarrow h$ | உயரம் $\rightarrow H$ |




உருளை வடிவக் குடுவையின் கன அளவு $(\pi r^2 h)$

$= $ கூம்பு வடிவக் குடுவையின் கன அளவு $\left(\frac{1}{3}\pi \times r^2 \times h\right)$

$$\pi \times xr \times xr \times H = \frac{1}{3}\pi \times r^2 \times h$$

$$H = \frac{1 \times \pi \times r^2 \times h}{3 \times x^2 \times r^2 \times \pi}$$

$$H = \frac{h}{3x^2}$$

உருளை வடிவக் குழாயில் நீரின் உயரம் $= \frac{h}{3x^2}$ **அலகுகள்**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா. 7.30:** களிமண் கொண்டு செய்யப்பட்ட 24 செ.மீ உயரமுள்ள ஒரு கூம்பை ஒரு குழந்தை அதே ஆரமுள்ள ஓர் உருளையாக மாற்றுகிறது எனில் உருளையின் உயரம் காண்க. **(PTA-3)** (2M)

**எ.கா. 7.31:** 6 செ.மீ ஆரம் மற்றும் 15 செ.மீ உயரம் கொண்ட ஓர் உருளை வடிவப் பாத்திரம் முழுவதுமாக பனிக்கூழ் (ice-cream) உள்ளது. அந்தப் பனிக்கூழானது, கூம்பு மற்றும் அரைக்கோளம் இணைந்த வடிவத்தில் நிரப்பப்படுகிறது. கூம்பின் உயரம் 9 செ.மீ மற்றும் ஆரம் 3 செ.மீ எனில், பாத்திரத்தில் உள்ள பனிக்கூழை நிரப்ப எத்தனைக் கூம்புகள் தேவை? **(PTA-5,6)** (5M)

**4. விட்டம் 14 செ.மீ, உயரம் 8 செ.மீ உடைய ஒரு திண்ம நேர்வட்டக் கூம்பு, ஓர் உள்ளீடற்ற கோளமாக உருமாற்றப்படுகிறது. கோளத்தின் வெளிவிட்டம் 10 செ.மீ எனில், உள்விட்டத்தைக் காண்க.** (5M)

கொடுக்கப்பட்டது

| **கூம்பு:** | **உள்ளீடற்ற கோளம்:** |
|---|---|
| விட்டம் $= 14$ செ.மீ | வெளிவிட்டம் $= 10$ செ.மீ |
| ∴ ஆரம் $(r_1) = 7$ செ.மீ | ∴ ஆரம் $R = 5$ செ.மீ |
| உயரம் $(h) = 8$ செ.மீ | உள் ஆரம் $= r$ |




உள்ளீடற்ற கோளத்தின் கன அளவு $=$ கூம்பின் கன அளவு

$$\frac{4}{3}\pi(R^3 - r^3) = \frac{1}{3}\pi r_1^2 h$$

$$\frac{4}{3} \times \pi \times (5^3 - r^3) = \frac{1}{3} \times \pi \times 7 \times 7 \times 8$$

$$125 - r^3 = 98$$

$$-r^3 = 98 - 125$$

$$-r^3 = -27$$

$$\therefore\ r^3 = 27$$

$$r^3 = 3^3$$

$r = 3$ செ.மீ $=$ உள் ஆரம்

கோளத்தின் உள்விட்டம் **$= 6$ செ.மீ**

**5. சீனு வீட்டின் மேல்நிலை நீர்த்தொட்டி உருளை வடிவில் உள்ளது. அதன் ஆரம் $60$ செ.மீ மற்றும் உயரம் $105$ செ.மீ. $2$ மீ $\times 1.5$ மீ $\times 1$ மீ பரிமாணங்களை உடைய ஒரு கனச்செவ்வகக் கீழ்நிலை நீர் தொட்டியிலிருந்து நீர் உந்தப்பட்டு மேலேயுள்ள உருளை வடிவத் தொட்டி முழுமையாக நிரப்பப்படுகிறது. தொடக்கத்தில் கீழ்த் தொட்டியில் நீர் முழுமையாக இருப்பதாகக் கருதுக. மேல் தொட்டிக்கு நீர் ஏற்றிய பிறகு மீதமுள்ள நீரின் கனஅளவைக் காண்க.**

5M

**கனச்செவ்வகக் கீழ்நிலை நீர் தொட்டி:**

$l \times b \times h = 2$ மீ $\times 1.5$ மீ $\times 1$ மீ

**உருளை வடிவ நீர்த்தொட்டி:**

ஆரம் $= 60$ செ.மீ $= \frac{60}{100}$ மீ

உயரம் $= 105$ செ.மீ $= \frac{105}{100}$ மீ




மேல் தொட்டிக்கு நீர் ஏற்றிய பிறகு மீதமுள்ள நீர்

$=$ கனச்செவ்வக கீழ்நிலை நீர்தொட்டியின் கன அளவு $-$ உருளை வடிவ நீர்த்தொட்டியின் கன அளவு

$= [2 \times 1.5 \times 1] - \left[\frac{22}{7} \times \frac{60}{100} \times \frac{60}{100} \times \frac{105}{100}\right] = 3 - \frac{11 \times 6 \times 6 \times 3}{1000} = 3 - 1.188 = 1.812$

மேல் தொட்டிக்கு நீர் ஏற்றிய பிறகு மீதமுள்ள நீர் $= 1.812$ மீ³

$= \mathbf{1812000}$ **செ.மீ³ அல்லது** 1812 **லிட்டர்**

**6. ஓர் உள்ளீடற்ற அரைக்கோள ஓட்டின் உட்புற மற்றும் வெளிப்புற விட்டங்கள் முறையே $6$ செ.மீ மற்றும் $10$ செ.மீ ஆகும். அது உருக்கப்பட்டு $14$ செ.மீ விட்டமுள்ள ஒரு திண்ம உருளையாக்கப்பட்டால், அவ்வுருளையின் உயரம் காண்க.**

கொடுக்கப்பட்டது

5M

**உள்ளீடற்ற அரைக்கோளம்**

உட்புற விட்டம் $= 6$ செ.மீ

$\therefore$ ஆரம் $(r) = 3$ செ.மீ

வெளிப்புற விட்டம் $= 10$ செ.மீ

$\therefore$ ஆரம் $(R) = 5$ செ.மீ

**உருளை**

விட்டம் $= 14$

$\therefore$ ஆரம் $(r) = 7$செ.மீ

உயரம் $\rightarrow h.$




உருளையின் கன அளவு $(\pi r^2 h) =$ உள்ளீடற்ற அரைக்கோளத்தின் கன அளவு $\left[\frac{2}{3}\pi(R^3 - r^3)\right]$

$$\pi \times 7 \times 7 \times h = \frac{2}{3} \times \pi \times [5^3 - 3^3]$$

$$h = \frac{2 \times \pi \times 98}{3 \times \pi \times 7 \times 7} = \frac{4}{3} = 1.33 \text{ செ.மீ}$$

உருளையின் உயரம் $= \mathbf{1.33}$ **செ.மீ**

**7. $6$ செ.மீ ஆரமுள்ள ஒரு திண்மக் கோளம் உருக்கப்பட்டுச் சீரான தடிமனுள்ள ஓர் உள்ளீடற்ற உருளையாக மாற்றப்படுகிறது. உருளையின் வெளி ஆரம் $5$ செ.மீ மற்றும் உயரம் $32$ செ.மீ எனில், உருளையின் தடிமனைக் காண்க.**

கொடுக்கப்பட்டது:

5M

**கோளம்**

ஆரம் $= 6$ செ.மீ

**உள்ளீடற்ற உருளை**

வெளி ஆரம் $(R) = 5$செ.மீ

உட்புற ஆரம் $(r) \rightarrow r$

உயரம் $(h) = 32$ செ.மீ

உருளையின் கன அளவு $=$ கோளத்தின் கன அளவு

$$\pi h(R^2 - r^2) = \frac{4}{3}\pi r^3$$

$$\pi \times 32 \times (5^2 - r^2) = \frac{4}{3} \times \pi \times 6 \times 6 \times 6$$

$$25 - r^2 = \frac{4 \times \pi \times 6 \times 6 \times 6}{3 \times \pi \times 32} = 9$$

$$-r^2 = 9 - 25 = -16$$

$$r = 4 \text{ செ.மீ}$$




தடிமன் $= R - r = 5 - 4 = 1$ செ.மீ

உருளையின் தடிமன் $= \mathbf{1}$ **செ.மீ**

**8.** **ஓர் அரைக்கோள வடிவக் கிண்ணத்தின் விளிம்பு வரையில் பழச்சாறு நிரம்பியுள்ளது. உயரத்தைவிட $50\%$ அதிக ஆரம் கொண்ட உருளை வடிவப் பாத்திரத்திற்குப் பழச்சாறு மாற்றப்படுகிறது. அரைக்கோளம் மற்றும் உருளை ஆகியவற்றின் விட்டங்கள் சமமானால் கிண்ணத்திலிருந்து எவ்வளவு சதவீதப் பழச்சாறு உருளை வடிவ பாத்திரத்திற்கு மாற்றப்படும்?**

5M

கொடுக்கப்பட்டது

அரைக்கோள வடிவக் கிண்ணத்தின் ஆரம் $= r$

உருளை வடிவப் பாத்திரத்தின் ஆரம் $= r$




ஆரம் $(r) =$ உயரத்தைவிட$(h)$ $50\%$ அதிகம்

$$r = h + \frac{50}{100}h \Rightarrow r = h + \frac{1}{2}h \Rightarrow r = \frac{3h}{2}$$

$$\therefore\ h = \frac{2r}{3}$$

அரைக்கோள வடிவக் கிண்ணத்தின் கன அளவு $= \frac{2}{3}\pi r^3$ ………….. (1)

உருளை வடிவப் பாத்திரத்தின் கன அளவு $= \pi r^2 h$

$$= \pi \times r^2 \times \frac{2r}{3} = \frac{2}{3}\pi r^3 \text{ ………… (2)}$$

$(1) = (2) \Rightarrow$கிண்ணத்திலிருந்து **$100\%$ சதவீதப் பழச்சாறு** உருளை வடிவ பாத்திரத்திற்கு மாற்றப்படும்.

## தயாரிக்கப்பட்ட வினாக்கள்

**1.** **$24$ செ.மீ $\times$ $22$ செ.மீ $\times$ $12$ செ.மீ அளவுள்ள கனச் செவ்வக வடிவ ஈய திண்மத்திலிருந்து 6 செ.மீ விட்ட அளவுகள் ஈயக் குண்டுகள் எத்தனை உருவாக்கலாம்?**

2M PTA-2

$$\frac{\text{கனச்செவ்வகத்தின் கனஅளவு}}{\text{கோளத்தின் கனஅளவு}} = \frac{l \times b \times h}{\frac{4}{3}\pi r^3}$$

$$= \frac{24 \times 22 \times 12}{\frac{4}{3} \times \frac{22}{7} \times 3 \times 3 \times 3}$$

$$= 8 \times 7$$

$$= 56$$

56 குண்டுகளை உருவாக்கலாம்.

**2.** **$32$ செ.மீ உயரமும் 18 செ.மீ ஆரமும் உடைய ஓர் உருளை வடிவ வாளியில் முழுமையாக மணல் உள்ளது. இந்த மணல் தரையில் கொட்டப்பட்டு கூம்பு வடிவில் அமைக்கப்படுகிறது. அந்தக் கூம்பின் உயரம் 24 செ.மீ எனில், அதன் ஆரம், சாயுயரத்தைக் காண்க.**

5M MDL, PTA-4

| **உருளை வடிவ வாளி** | **கூம்பு** |
|---|---|
| ஆரம் $r = 18$ செ.மீ., | உயரம் $h_1 = 24$ செ.மீ. |
| உயரம் $h = 32$ செ.மீ. | |

கூம்பின் கன அளவு $=$ உருளை வடிவ வாளியின் கன அளவு

$$\frac{1}{3}\pi {r_1}^2 h_1 = \pi r^2 h$$

$$\frac{1}{3} \times \not{\pi} \times {r_1}^2 \times 24 = \not{\pi} \times 18 \times 18 \times 32$$

$${r_1}^2 = \frac{18 \times 18 \times 32 \times 3}{24}$$

$$r_1 = \sqrt{18 \times 18 \times 4} = 18 \times 2 = 36$$

ஆரம் $r_1 = 36$ செ.மீ.




சாயுயரம் $l_1 = \sqrt{{r_1}^2 + {h_1}^2}$

$$= \sqrt{36^2 + 24^2}$$

$$= 12\sqrt{3^2 + 2^2}$$

$$= 12\sqrt{9 + 4}$$

$$= 12\sqrt{13} \text{ செ.மீ.}$$

## அலகுப் பயிற்சி - 7

| அலகுப்பயிற்சிக்கான குறிப்பு |
|---|
| வினா எண்: 2 – பயிற்சி 7.4 ல் - 2 ஆம் வினா போன்றது. |
| வினா எண்: 7 – பயிற்சி 7.1 ல் - 10 ஆம் வினா போன்றது. |
| வினா எண்: 9 – பயிற்சி 7.2 ல் - 3 ஆம் வினா போன்றது. |

**1. 7 செ.மீ நீளமுள்ள ஓர் உருளை வடிவ மை குடுவையின் விட்டம் 5 மி.மீ ஆகும். மை முழுமையாகவுள்ள உருளையைக் கொண்டு சராசரியாக 330 வார்த்தைகள் எழுதலாம். ஒரு லிட்டரில் ஐந்தில் ஒரு பங்கு மை ஒரு பாட்டிலில் உள்ளது எனில், அதனைப் பயன்படுத்தி எத்தனை வார்த்தைகள் எழுதலாம்?** (5M)




உருளை வடிவ மை குடுவையின் கன அளவு $= \pi r^2 h$

$$= \frac{22}{7} \times \frac{5}{2\times10} \times \frac{5}{2\times10} \times 7$$

$$= \frac{11}{8} \text{ செ.மீ}^3 \text{ [330 வார்த்தைகள் எழுத]}$$

ஒரு லிட்டரில் ஐந்தில் ஒரு பங்கு மை ஒரு பாட்டிலில் உள்ளது எனில்,

அதனைப் பயன்படுத்தி எழுதப்படும் வார்த்தைகளின் எண்ணிக்கை

$$= \frac{330}{\frac{11}{8}} \times 200$$

$$= \frac{330\times200\times8}{11} = 48000$$

(200 மி.லி= 200 செ.மீ$^3$)

ஒரு லிட்டரில் ஐந்தில் ஒரு பங்கு மையை பயன்படுத்தி எழுதப்படும் வார்த்தைகளின் எண்ணிக்கை **= 48000 வார்த்தைகள்**

**3. $r$ அலகுகள் ஆரம் கொண்ட ஒரு திண்ம அரைக் கோளத்திலிருந்து வெட்டி எடுக்கப்படும் கூம்பின் மீப்பெரு கனஅளவு என்ன?** (2M)




கூம்பின் கன அளவு $= \frac{1}{3}\pi r^2 h$

$= \frac{1}{3}\pi \times r^2 \times r$

வெட்டி எடுக்கப்படும் கூம்பின் மீப்பெரு கனஅளவு $= \frac{1}{3}\pi r^3$ **க.அ.**

**4. ஒரு கூம்பின் இடைக்கண்டம், 10 செ.மீ நீளமுள்ள ஓர் உருளையுடன் இணைக்கப்பட்ட எண்ணெய்ப் புனலின் மொத்த உயரம் 22 செ.மீ ஆகும். உருளையின் விட்டம் 8 செ.மீ மற்றும் புனலின் மேற்புற விட்டம் 18 செ.மீ எனில், புனலை உருவாக்கத் தேவையான தகர அட்டையின் பரப்பைக் காண்க.** (5M)

$l = \sqrt{12^2 + (9-4)^2}$ $\left[\because\ l = \sqrt{h^2 + (R-r)^2}\right]$

$= \sqrt{144+25} = \sqrt{169}$

$l = 13$ செ.மீ

தகர அட்டையின் பரப்பு

= இடைக்கண்டத்தின் வளைப்பரப்பு + உருளையின் வளைப்பரப்பு

$= \pi (R+r)l + 2\pi rh$

$= \pi [(R+r)l + 2rh]$

$= \frac{22}{7}[(9+4)13 + 2(4)(10)]$

$= \frac{22}{7}[169+80] \quad = \frac{22}{7} \times 249 = \frac{5478}{7}$

$\cong 782.57$ செ.மீ$^2$




புனலை உருவாக்கத் தேவையான தகர அட்டையின் பரப்பு $\cong$ **782.57 செ.மீ$^2$**

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

எ.கா.7.27: ஓர் உருளையின் மீது ஓர் இடைக்கண்டம் இணைந்தவாறு அமைந்த ஒரு புனலின் (funnel) மொத்த உயரம் 20 செ.மீ. உருளையின் உயரம் 12 செ.மீ மற்றும் விட்டம் 12 செ.மீ ஆகும். இடைக்கண்டத்தின் மேற்புற விட்டம் 24 செ.மீ எனில், புனலின் வெளிப்புறப் பரப்பைக் கணக்கிடுக. **(PTA-1)** (5M)

**5.** **உயரம் 10 செ.மீ மற்றும் விட்டம் 4.5 செ.மீ உடைய ஒரு நேர்வட்ட உருளையை உருவாக்க 1.5 செ.மீ விட்டமும், 2 மி.மீ தடிமன் கொண்ட எத்தனை வட்ட வில்லைகள் தேவை?** 5M PTA-1

தேவையான வட்ட வில்லைகளின் எண்ணிக்கை

$= \frac{\text{உருளையின் கன அளவு } (\pi r^2 h)}{\text{வட்ட வில்லையின் கன அளவு } (\pi r^2 h)}$

$= \frac{\pi \times 45 \times 45 \times 10 \times 10 \times 2 \times 10 \times 2 \times 10}{2 \times 10 \times 2 \times 10 \times 10 \times \pi \times 15 \times 15 \times 2}$

தேவையான வட்ட வில்லைகளின் எண்ணிக்கை $= \mathbf{450}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும். 5M

எ.கா. 7.29: 16 செ.மீ ஆரமுள்ள ஓர் உலோகப் பந்து, உருக்கப்பட்டு 2 செ.மீ ஆரமுள்ள சிறு பந்துகளாக்கப்பட்டால், எத்தனை பந்துகள் கிடைக்கும்? **(JUN-23)**

**6.** **ஓர் உள்ளீடற்ற உலோக உருளையின் வெளிப்புற ஆரம் 4.3 செ.மீ, உட்புற ஆரம் 1.1 செ.மீ மற்றும் நீளம் 4 செ.மீ. உலோக உருளையை உருக்கி 12 செ.மீ நீளமுள்ள வேறொரு திண்ம உருளை உருவாக்கப்பட்டால் புதிய உருளையின் விட்டத்தைக் கணக்கிடுக.** 2M

திண்ம உருளையின் கன அளவு = உள்ளீடற்ற உருளையின் கன அளவு

$$\pi r^2 h = \pi(R^2 - r^2)h$$

$$\pi \times r^2 \times 12 = \pi[(4.3)^2 - (1.1)^2] \times 4$$

$$r^2 = \frac{\cancel{\pi} \times 17.28 \times 4}{\cancel{\pi} \times 12} = 5.76$$




உருளையின் ஆரம் $r = 2.4$ செ.மீ

திண்ம உருளையின் விட்டம் $= \mathbf{4.8}$ **செ.மீ**

**8.** **ஓர் உள்ளீடற்ற அரைக்கோளக் கிண்ணத்தை உருவாக்கப் பயன்பட்ட பொருளின் கனஅளவு $\frac{436\pi}{3}$ க.செ.மீ ஆகும். கிண்ணத்தின் வெளிவிட்டம் 14 செ.மீ எனில் அதன் தடிமனைக் கணக்கிடுக.** 2M

உள்ளீடற்ற அரைக்கோளத்தின் கன அளவு $\frac{2}{3}\pi(R^3 - r^3) = \frac{436\pi}{3}$

$$\frac{2}{3} \times \pi \times (7^3 - r^3) = \frac{436\pi}{3}$$

$$343 - r^3 = \frac{436\pi \times 3}{3 \times 2 \times \pi}$$

$$-r^3 = 218 - 343$$

$$-r^3 = -125 = 5^3$$

$$r = 5 \text{ செ.மீ}$$




தடிமன் $= R - r = 7 - 5 = 2$ செ.மீ

கிண்ணத்தின் தடிமன் $= \mathbf{2}$ **செ.மீ**

**10.** **ஒரு வட்டக்கோண வடிவில் உள்ள உலோகத் தகட்டின் ஆரம் 21 செ.மீ மற்றும் மையக் கோணம் 216° ஆகும். வட்டக்கோணப் பகுதியின் ஆரங்களை இணைத்து உருவாக்கப்படும் கூம்பின் கன அளவைக் காண்க.** PTA-2 5M

வில்லின் நீளம் $L = \frac{2\pi R}{360} \times 216 = \frac{2\pi \times 21 \times 3}{5}$

கூம்பின் அடிச்சுற்றளவு = வில்லின் நீளம்

அதாவது, $2\pi r = \frac{2\pi \times 21 \times 3}{5} = \frac{63}{5} \Rightarrow r = 12.6$ செ.மீ

$h = \sqrt{l^2 - r^2} = \sqrt{21^2 - 12.6^2} = \sqrt{441 - 158.76} = \sqrt{282.24}$

$h = 16.8$ செ.மீ




கூம்பின் கன அளவு $= \frac{1}{3}\pi r^2 h$

$$= \frac{1}{3} \times \frac{22}{7} \times 12.6 \times 12.6 \times 16.8$$

$$= 2794.176 \text{ செ.மீ}^3$$

உருவாக்கப்படும் கூம்பின் கன அளவு $= \mathbf{2794.176}$ **செ.மீ³**

# 8. புள்ளியியலும் நிகழ்தகவும்

## பயிற்சி 8.1

**1. கீழ்க்காணும் தரவுகளுக்கு வீச்சு மற்றும் வீச்சுக் கெழுவைக் காண்க.** (2M) APR-23, SEP-20

**(i) $63, 89, 98, 125, 79, 108, 117, 68$**

ஏறுவரிசையில் எழுத:

63,68,79,89,98,108,117,125

வீச்சு $= L - S = 125 - 63 = \mathbf{62}$

வீச்சுக் கெழு $= \frac{L-S}{L+S}$

$= \frac{125-63}{125+63} = \frac{62}{188}$

$= 0.3297 = \mathbf{0.33}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

1. கீழ்க்காணும் தரவுகளுக்கு வீச்சு மற்றும் வீச்சுக் கெழுவைக் காண்க.(ii) $43.5, 13.6, 18.9, 38.4, 61.4, 29.8$ (2M)

**எ.கா.8.1:** கொடுக்கப்பட்ட தரவுப் புள்ளிகளுக்கு வீச்சு மற்றும் வீச்சுக் கெழு ஆகியவற்றைக் காண்க: $25, 67, 48, 53, 18, 39, 44$.

**அலகுப்பயிற்சி: 7.** ஒரு புள்ளி விவரத்தின் வீச்சு மற்றும் வீச்சுக்கெழு முறையே 20 மற்றும் 0.2 எனில், விவரங்களின் மிகப்பெரிய மதிப்பு மற்றும் மிகச்சிறிய மதிப்புகளைக் காண்க.

**2. ஒரு தரவின் வீச்சு மற்றும் மிகச் சிறிய மதிப்பு ஆகியன முறையே $36.8$ மற்றும் $13.4$ எனில், மிகப்பெரிய மதிப்பைக் காண்க?** (2M)

$R = 36.8, \quad S = 13.4, \quad L = ?$

$R = L - S$

$R + S = L$

$L = 36.8 + 13.4 = \mathbf{50.2}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.8.3:** ஒரு தரவின் வீச்சு 13.67 மற்றும் மிகப் பெரிய மதிப்பு 70.08 எனில் மிகச் சிறிய மதிப்பைக் காண்க. **(PTA-4)** (2M)

**3. கொடுக்கப்பட்ட தரவின் வீச்சைக் காண்க.** (2M)

| **வருமானம்** | **400-450** | **450-500** | **500-550** | **550-600** | **600-650** |
|---|---|---|---|---|---|
| **ஊழியர்களின் எண்ணிக்கை** | **8** | **12** | **30** | **21** | **6** |

கொடுக்கப்பட்டது:

| வருமானம் | 400-450 | 450-500 | 500-550 | 550-600 | 600-650 |
|---|---|---|---|---|---|
| ஊழியர்களின் எண்ணிக்கை | 8 | 12 | 30 | 21 | 6 |

$L = 650, S = 400, R = ?$

$R = L - S = 650 - 400 = \mathbf{250}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.8.2:** கொடுக்கப்பட்ட பரவலின் வீச்சு காண்க. (2M)

| வயது (வருடங்களில்) | 16-18 | 18-20 | 20-22 | 22-24 | 24-26 | 26-28 |
|---|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 0 | 4 | 6 | 8 | 2 | 2 |

**5. 9 ஊழியர்களின் ஊதியம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஊதியங்களின் விலக்க வர்க்கச் சராசரி மற்றும் திட்ட விலக்கம் காண்க. ₹ 310, ₹ 290, ₹ 320, ₹ 280, ₹ 300, ₹ 290, ₹ 320, ₹ 310, ₹ 280.** (5M)

$\bar{X} = \frac{310+290+320+280+300+290+320+310+280}{9} = \frac{2700}{9} = 300$

| $x_i$ | $d = (x_i - \bar{X})$ $(X_i - 300)$ | $d^2$ |
|---|---|---|
| 280 | $-20$ | 400 |
| 280 | $-20$ | 400 |
| 290 | $-10$ | 100 |
| 290 | $-10$ | 100 |
| 300 | 0 | 0 |
| 310 | 10 | 100 |
| 310 | 10 | 100 |
| 320 | 20 | 400 |
| 320 | 20 | 400 |
| | $\Sigma d = 0$ | $\Sigma d^2 = 2000$ |

$\sigma = \sqrt{\frac{2000}{9}}$

$= \sqrt{222.2}$

$= 14.91$

$\sigma^2 = 222.22$

∴ ஊதியங்களின் விலக்க வர்க்கச் சராசரி

$= \mathbf{222.22}$

ஊதியங்களின் திட்ட விலக்கம்

$= \mathbf{14.91}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

4. ஓர் ஆசிரியர் மாணவர்களை, அவர்களின் செய்முறைப் பதிவேட்டின் $60$ பக்கங்களை நிறைவு செய்து வருமாறு கூறினார். எட்டு மாணவர்கள் முறையே $32, 35, 37, 30, 33, 36, 35, 37$ பக்கங்கள் மட்டுமே நிறைவு செய்திருந்தனர். மாணவர்கள் நிறைவு செய்த பக்கங்களின் திட்டவிலக்கத்தைக் காண்க. (5M)

**எ.கா.8.4:** ஒரு வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் விற்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளின் எண்ணிக்கை பின்வருமாறு 13,8,4,9,7,12,10. இந்தத் தரவின் திட்ட விலக்கம் காண்க.

**எ.கா.8.5:** ஒரு குறிப்பிட்ட பருவத்தில் 6 நாட்களில் பெய்யும் மழையின் அளவானது $17.8$ செ.மீ, $19.2$ செ.மீ, $16.3$ செ.மீ, $12.5$ செ.மீ, $12.8$ செ.மீ, $11.4$ செ.மீ எனில், இந்த தரவிற்கு திட்டவிலக்கம் காண்க.

**எ.கா.8.6:** ஒரு வகுப்புத் தேர்வில், $10$ மாணவர்களின் மதிப்பெண்கள் $25, 29, 30, 33, 35, 37, 38, 40, 44, 48$ ஆகும். மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களின் திட்ட விலக்கத்தைக் காண்க.

**எ.கா.8.7:** ஒரு பள்ளி சுற்றுலாவில் குழந்தைகள் தின்பண்டங்கள் வாங்குவதற்காக செலவு செய்த தொகையானது முறையே $5, 10, 15, 20, 25, 30, 35, 40$ ஆகும். படி விலக்க முறையை பயன்படுத்தி அவர்கள் செய்த செலவிற்கு திட்ட விலக்கம் காண்க.

**6. ஒரு சுவர் கடிகாரம் $1$ மணிக்கு $1$ முறையும், $2$ மணிக்கு $2$ முறையும், $3$ மணிக்கு $3$ முறையும் ஒலி எழுப்புகிறது எனில், ஒரு நாளில் அக்கடிகாரம் எவ்வளவு முறை ஒலி எழுப்பும்? மேலும் கடிகாரம் எழுப்பும் ஒலி எண்ணிக்கைகளின் திட்ட விலக்கம் காண்க.** (5M)

ஒரு சுவர் கடிகாரம் $1$ மணிக்கு $1$ முறையும், $2$ மணிக்கு $2$ முறையும், $3$ மணிக்கு $3$ முறையும் ஒலி எழுப்புகிறது

இத்தொடரானது $(1 + 2 + 3 + 4 \ldots\ldots + 12)(1 + 2 + \cdots + 12)$

$$= \frac{12 \times 13}{2} = 78 \Rightarrow 78 \times 2 = 156$$

கடிகாரம் ஒரு நாளுக்கு **156** முறை ஒலி எழுப்புகிறது.

முதல் $n$ இயல் எண்களின் திட்ட விலக்கம், $\sigma = \sqrt{\frac{n^2-1}{12}}, n = 12$

$$\sigma = \sqrt{\frac{n^2-1}{12}} = \sqrt{\frac{12^2-1}{12}} = \sqrt{\frac{144-1}{12}} = \sqrt{\frac{143}{12}} = \sqrt{11.9} = 3.44$$

1 முதல் 12 மணி வரை கடிகாரம் எழுப்பும் ஒலி எண்ணிக்கையின் திட்ட விலக்கம் $\sigma = 3.44$

மீண்டும், 1 முதல் 12 மணி வரை கடிகாரம் எழுப்பும் ஒலி எண்ணிக்கையின் திட்ட விலக்கம் $\sigma = 3.44$

$\sigma = 3.44 \times 2 = 6.88$

∴ கடிகாரம் எழுப்பும் ஒலி எண்ணிக்கைகளின் திட்ட விலக்கம் $\boldsymbol{\sigma = 6.9}$

**7. முதல் $21$ இயல் எண்களின் திட்ட விலக்கத்தைக் காண்க.** JUN-23, PTA-6

முதல் $21$ இயல் எண்களின் திட்ட விலக்கம் (2M)

$$\sigma = \sqrt{\frac{n^2-1}{12}};\ n = 21$$

$$= \sqrt{\frac{(21)^2-1}{12}}$$

$$= \sqrt{\frac{441-1}{12}}$$

$$= \sqrt{\frac{440}{12}}$$

$$= \sqrt{36.67}$$

$$\sigma = 6.049$$

$$= \mathbf{6.05}$$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.8.10:** முதல் $n$ இயல் எண்களின் சராசரி மற்றும் விலக்க வர்க்கச் சராசரிகளைக் காண்க. (5M)

**8. ஒரு தரவின் திட்ட விலக்கம் $4.5$ ஆகும். அதில் இருக்கும் தரவுப் புள்ளி ஒவ்வொன்றிலும் 5-ஐ கழிக்க கிடைக்கும் புதிய தரவின் திட்ட விலக்கம் காண்க.** (2M)

தரவின் திட்ட விலக்கம் $4.5$

தரவுப் புள்ளி ஒவ்வொன்றிலும் 5-ஐ கழிக்க கிடைக்கும் புதிய $\sigma = ?$

திட்ட விலக்கமானது, அதில் இருக்கும் தரவுப் புள்ளி ஒவ்வொன்றிலும் நிலையான மாறிலியை கூட்டும் போதோ அல்லது கழிக்கும் போதோ மாறாது.

புதிய $\boldsymbol{\sigma = 4.5}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.8.8:** (2M)
கொடுக்கப்பட்டுள்ள தரவிற்கு திட்டவிலக்கம் காண்க. $7, 4, 8, 10, 11.$ இதன் எல்லா மதிப்புகளுடனும் 3-யை கூட்டும்போது கிடைக்கும் புதிய தரவிற்கு திட்டவிலக்கம் காண்க.

**9.** **ஒரு தரவின் திட்ட விலக்கம் $3.6$ ஆகும். அதன் ஒவ்வொரு புள்ளியையும் 3-ஆல் வகுக்கும்போது கிடைக்கும் புதிய தரவின் திட்ட விலக்கம் மற்றும் விலக்க வர்க்கச் சராசரியைக் காண்க.** (2M)

$\sigma = 3.6$

புதிய திட்ட விலக்கம் $\sigma = \frac{3.6}{3} = \mathbf{1.2}$,

புதிய விலக்க வர்க்கச் சராசரி

$\sigma^2 = (1.2)^2 = \mathbf{1.44}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.8.9:** கொடுக்கப்பட்ட தரவின் திட்ட விலக்கம் காண்க $2, 3, 5, 7, 8$. ஒவ்வொரு தரவுப் புள்ளியையும் 4-ஆல் பெருக்கினால் கிடைக்கும் புதிய தரவின் மதிப்பிற்கு திட்ட விலக்கம் காண்க. (2M)

**13.** **$50$ மாணவர்கள் $100$ மீட்டர் தூரத்தை கடக்க எடுத்துக்கொண்ட கால அளவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் திட்ட விலக்கம் காண்க.** (PTA-5) (5M)

| எடுத்துக்கொண்ட நேரம் (வினாடியில்) | 8.5 -9.5 | 9.5 -10.5 | 10.5 -11.5 | 11.5 -12.5 | 12.5 -13.5 |
|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 6 | 8 | 17 | 10 | 9 |

$A = 11, c = 1$

| எடுத்துக்கொண்ட நேரம் (வினாடியில்) | மைய மதிப்பு $x_i$ | மாணவர்களின் எண்ணிக்கை $f_i$ | $d = X_i - A$ | $d^2$ | $f_i d_i$ | $f_i d_i^2$ |
|---|---|---|---|---|---|---|
| 8.5 - 9.5 | 9 | 6 | $-2$ | 4 | $-12$ | 24 |
| 9.5 - 10.5 | 10 | 8 | $-1$ | 1 | $-8$ | 8 |
| 10.5 - 11.5 | 11 | 17 | 0 | 0 | 0 | 0 |
| 11.5 - 12.5 | 12 | 10 | 1 | 1 | 10 | 10 |
| 12.5 - 13.5 | 13 | 9 | 2 | 4 | 18 | 36 |
| | | $N = 50$ | $\Sigma d_i = 0$ | | $\Sigma f_i d_i = -8$ | $\Sigma f_i d_i^2 = 78$ |

$$\sigma = c \times \sqrt{\frac{\Sigma f_i d_i^2}{N} - \left(\frac{\Sigma f_i d_i}{N}\right)^2}$$

$$= 1 \times \sqrt{\frac{78}{50} - \left(\frac{-8}{50}\right)^2}$$

$$= \sqrt{1.56 - (-0.16)^2}$$

$$= \sqrt{1.56 - 0.0256}$$

$$= \sqrt{1.5344}$$

$$= 1.238$$

$$\boldsymbol{\sigma \cong 1.24}$$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

11. வைரஸ் காய்ச்சலைப் பற்றிய கருத்துக் கணிப்பில், பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இத்தரவின் திட்ட விலக்கம் காண்க. (5M)

| வயது (வருடங்களில்) | 0 - 10 | 10 - 20 | 20 -30 | 30 - 40 | 40 - 50 | 50 - 60 | 60 - 70 |
|---|---|---|---|---|---|---|---|
| பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை | 3 | 5 | 16 | 18 | 12 | 7 | 4 |

12. ஒரு தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட தட்டுகளின் விட்ட அளவுகள் (செ.மீ-ல்) கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இதன் திட்ட விலக்கம் காண்க.

| விட்டங்கள் (செ.மீ) | 21 - 24 | 25 - 28 | 29 - 32 | 33 - 36 | 37 - 40 | 41- 44 |
|---|---|---|---|---|---|---|
| தட்டுகளின் எண்ணிக்கை | 15 | 18 | 20 | 16 | 8 | 7 |

**அலகுப்பயிற்சி: 2.** ஒரு வடிவமைப்பில் வரையப்பட்ட வட்டங்களின் விட்ட அளவுகள் (மி.மீ-ல்) கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| விட்டங்கள் | 33-36 | 37-40 | 41-44 | 45-48 | 49-52 |
|---|---|---|---|---|---|
| வட்டங்களின் எண்ணிக்கை | 15 | 17 | 21 | 22 | 25 |

திட்டவிலக்கத்தைக் கணக்கிடுக.

**எ.கா.8.13:** ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள், குறிப்பிட்ட பாடத்தில் பெற்ற மதிப்பெண்கள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன.

| மதிப்பெண்கள் | 0-10 | 10-20 | 20-30 | 30-40 | 40-50 | 50-60 | 60-70 |
|---|---|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 8 | 12 | 17 | 14 | 9 | 7 | 4 |

இத்தரவிற்குத் திட்ட விலக்கம் காண்க.

**10.** **ஒரு வாரத்தில் ஐந்து மாவட்டங்களில் வெவ்வேறு இடங்களில் பெய்த மழையின் அளவானது பதிவு செய்யப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள மழையளவின் தரவிற்கு திட்ட விலக்கம் காண்க.** 5M

| மழையளவு (மி.மீ) | 45 | 50 | 55 | 60 | 65 | 70 |
|---|---|---|---|---|---|---|
| இடங்களின் எண்ணிக்கை | 5 | 13 | 4 | 9 | 5 | 4 |

| $x$ | $f_i$ | $d = x_i - A = x_i - 60$ | $d_i^2$ | $f_i d_i$ | $f_i d_i^2$ |
|---|---|---|---|---|---|
| 45 | 5 | $-15$ | 225 | $-75$ | 1125 |
| 50 | 13 | $-10$ | 100 | $-130$ | 1300 |
| 55 | 4 | $-5$ | 25 | $-20$ | 100 |
| 60 | 9 | 0 | 0 | 0 | 0 |
| 65 | 5 | 5 | 25 | 25 | 125 |
| 70 | 4 | 10 | 100 | 40 | 400 |
| | $N = 40$ | | | $\Sigma f_i d_i = -160$ | $\Sigma f_i d_i^2 = 3050$ |

$$\sigma = \sqrt{\frac{\Sigma f_i d_i^2}{N} - \left(\frac{\Sigma f_i d_i}{N}\right)^2}$$
$$= \sqrt{\frac{3050}{40} - \left(\frac{-160}{40}\right)^2}$$
$$= \sqrt{76.25 - (-4)^2}$$
$$= \sqrt{76.25 - 16}$$
$$= \sqrt{60.25}$$
$$= 7.76$$
$$\boldsymbol{\sigma \cong 7.76}$$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

5M

**எ.கா.8.11:** ஒரு குறிப்பிட்ட வாரத்தில் 48 மாணவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதற்காகச் செலவிட்ட நேரம் கேட்டறியப்பட்டது. அந்தத் தகவலின் அடிப்படையில், கீழ்க்காணும் தரவின் திட்டவிலக்கம் காண்க.

| $x$ | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|
| $f$ | 3 | 6 | 9 | 13 | 8 | 5 | 4 |

**எ.கா.8.12:** வகுப்புத் தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களின் மதிப்பெண்ணிற்குத் திட்ட விலக்கம் காண்க. **(PTA-1)**

| $x$ | 4 | 6 | 8 | 10 | 12 |
|---|---|---|---|---|---|
| $f$ | 7 | 3 | 5 | 9 | 5 |

**14.** **100 மாணவர்கள் கொண்ட ஒரு குழுவில், அவர்கள் எடுத்த மதிப்பெண்களின் சராசரி மற்றும் திட்டவிலக்கமானது முறையே 60 மற்றும் 15 ஆகும். பின்னர் 45 மற்றும் 72 என்ற இரு மதிப்பெண்களுக்குப் பதிலாக முறையே 40 மற்றும் 27 என்று தவறாகப் பதிவு செய்யப்பட்டது தெரிய வந்தது. அவற்றைச் சரி செய்தால் கிடைக்கப்பெறும் புதிய தரவின் சராசரியும் திட்ட விலக்கமும் காண்க.** 5M

$n = 100,\ \bar{X} = 60,\ \sigma = 15$

$\bar{X} = \frac{\Sigma x}{n} \Rightarrow 60 = \frac{\Sigma x}{100} \Rightarrow \Sigma x = 60 \times 100 = 6000$

தவறான தரவின் மதிப்பு $= 40 + 27 = 67$

சரியான தரவின் மதிப்பு $= 45 + 72 = 117$

மொத்த மதிப்பு $= 6000 - 67 + 117 = 6050$

புதிய தரவின் சராசரி $\bar{X} = \frac{6005}{100} = \mathbf{60.5}$

$\sigma = \sqrt{\frac{\Sigma x^2}{n} - \left(\frac{\Sigma x}{n}\right)^2}$

தவறான திட்டவிலக்கம்

$\sigma = 15 = \sqrt{\frac{\Sigma x^2}{100} - (60)^2}$

$15^2 = \frac{\Sigma x^2}{100} - 3600$

$225 + 3600 = \frac{\Sigma x^2}{100}$

$3825 = \frac{\Sigma x^2}{100}$

தவறான $\Sigma x^2 = 382500$

சரியான $\Sigma x^2 = 382500 - 40^2 - 27^2 + 45^2 + 72^2$

$= 382500 - 1600 - 729 + 2025 + 5184$

சரியான $\Sigma x^2 = 387380$

சரியான $\sigma = \sqrt{\frac{387380}{100} - (60.5)^2}$

$= \sqrt{3873.8 - 3660.25} = \sqrt{213.55}$

$\boldsymbol{\sigma \cong 14.61}$

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.8.14:** 15 தரவுப் புள்ளிகளின் சராசரி மற்றும் திட்ட விலக்கம் முறையே 10, 5 என கண்டறியப்பட்டுள்ளது. அதை சரிபார்க்கும்பொழுது, கொடுக்கப்பட்டுள்ள ஒரு தரவுப் புள்ளி 8 என தவறுதலாக குறிக்கப்பட்டுள்ளது. அதன் சரியான தரவுப்புள்ளி 23 என இருந்தால் சரியான தரவின் சராசரி மற்றும் திட்ட விலக்கம் காண்க. 5M

**15. ஏழு தரவுப் புள்ளிகளின் சராசரி மற்றும் விலக்க வர்க்கச் சராசரி முறையே 8,16 ஆகும். அதில் ஐந்து தரவுப் புள்ளிகள் 2, 4, 10, 12 மற்றும் 14 எனில் மீதம் உள்ள இரு தரவுப் புள்ளிகளைக் கண்டறிக.**

5M

ஏழு தரவுப் புள்ளிகளின் சராசரி மற்றும் விலக்க வர்க்கச் சராசரி முறையே $\overline{X} = 8$ , $\sigma^2 = 16$

ஐந்து தரவுப் புள்ளிகள் 2,4,10,12, &14

$X$ மற்றும் $Y$ ஆகியன மீதமுள்ள இரு தரவுப் புள்ளிகள் என்க. சராசரி $= 8$

$$\frac{2+4+10+12+14+X+Y}{7} = 8$$

$$42 + x + y = 56$$

$$x + y = 56 - 42$$

$$x + y = 14 \text{.........}(1)$$

விலக்க வர்க்கச் சராசரி $= 16$ ,

$$\sigma^2 = \frac{\Sigma x^2}{n} - \left(\frac{\Sigma x}{n}\right)^2 = \frac{\Sigma x^2}{n} - (\bar{X})^2 = 16$$

$$\frac{1}{7}(2^2 + 4^2 + 10^2 + 12^2 + 14^2 + x^2 + y^2) - (\text{சராசரி})^2 = 16$$

$$\frac{4+16+100+144+196+x^2+y^2}{7} - (8)^2 = 16$$

$$\frac{460+x^2+y^2}{7} - 64 = 16$$

$$\frac{460+x^2+y^2}{7} = 16 + 64$$

$$\frac{460+x^2+y^2}{7} = 80$$

$$460 + x^2 + y^2 = 80 \times 7$$

$$x^2 + y^2 = 560 - 460$$

$$x^2 + y^2 = 100 \text{ ............}(2)$$

$$(x + y)^2 + (x - y)^2 = 2(x^2 + y^2)$$

(1) மற்றும் (2) லிருந்து

$$196 + (x - y)^2 = 2(100)$$

$$(x - y)^2 = 200 - 196$$

$$(x - y)^2 = 4$$

$$(x - y) = \pm 2$$

$x - y = 2$ எனில் $x + y = 14$ &

$x - y = 2 \Rightarrow x = 2 + y$

$$2 + y + y = 14$$

$$2 + 2y = 14$$

$$2y = 14 - 2$$

$$y = \frac{12}{2} = 6$$

$y = 6$ என $x - y = 2$ ல் பிரதியிட

$$x = 2 + 6$$

$$x = 8$$

$\therefore x = 8, y = 6$

$x - y = -2$ எனில், $x + y = 14$

